# தொல் திராவிட மொழி

## - கண்டுபிடிப்பு -



சுந்தர சண்முகனார்

# தொல் திராவிட மொழி
# - கண்டுபிடிப்பு -

ஆசிரியர்:
ஆராய்ச்சி அறிஞர்
**முனைவர் சுந்தர சண்முகனார்**
தமிழ் - அகராதித் துறைப் பேராசிரியர் (ஓய்வு)
புதுச்சேரி—11.

கிடைக்கும் இடம்:
சுந்தர சண்முகனார்
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
38, வேங்கட நகர்,
புதுச்சேரி—605011.

**தொல் திராவிட மொழி-கண்டுபிடிப்பு**

முதல் பதிப்பு: 30—11—1988

உரிமை: **ஆசிரியர்க்கே**

விலை ரூ. 20-00

அச்சிட்டோர்:
கே.பி.டி. இண்டஸ்ட்ரி
அண்ணாமலைநகர்-608 002.

# அணிந்துரை

**பேரா.ச. அறவணன்**
பேராசிரியர் பயிற்சிக் கல்லூரி
புதுவைப் பல்கலைக் கழகம்.

'தொல் திராவிட மொழி - கண்டு பிடிப்பு' என்னும் நூலில் ஆசிரியர் சுந்தர சண்முகனார் ஒரு புது முயற்சியைத் தொடங்கியுள்ளார்.

தமிழ் முதலான திராவிட மொழிகட்கு அப்பாற்பட்ட தாய், அவை அனைத்திற்கும் தாயாய்த் தொல் திராவிட மொழி ஒன்று இருந்தது - அது இப்போது கிடைக்கவில்லை - மறைந்து விட்டது - என்பதாகச் சிலர் கூறுவதை ஆசிரியரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லைபோலும்.

மறைந்து விட்டதாகச் சிலரால் கூறப்படும் தொல் திராவிட மொழி இதுதான் என்று தாம் ஒரு மொழியைக் கண்டு பிடித்துவிட்டதாக ஆசிரியர் இந்நூலில் கூறியுள்ளார். நூலைப் படிப்பவர்கள் பின்னர் அதைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆசிரியர் இந்நூலில் சுமார் இரண்டாயிரம் தமிழ்ச் சொற்கட்கு நேராக, ஒலிப்பிலும் பொருளிலும் ஒத்துள்ள தெலுங்கு - கன்னடம் - மலையாளம் ஆகிய மொழிச் சொற்களைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ள அரக்கப் பெரு முயற்சி மிகவும் வியந்து பாராட்டத்தக்கது.

பல ஆராய்ச்சி நூல்கள் எழுதிப் பழக்கப்பட்ட ஆசிரியரின் ஆய்வுத்திறன் இந்நூலில் மேலும் கூர்மை பெற்றுள்ளது. ஆசிரியரை எவ்வளவு பாராட்டினும் தகும்.

**ச. அறவணன்**
25-11-1988

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை ... | 5 |
| திராவிட மொழிக் குடும்பம் ... | 9 |
| திராவிட மொழிச் சொற்பட்டியல் ... | 20 |
| சொல்மாற்றம்—சொற்சுவை—ஆய்வு ... | 133 |
| சமசுகிருதம் தாயா—புக்கதா? ... | 151 |
| மும்மொழிகளில் சமசுகிருதம் ... | 157 |
| அடிவேர் ஆய்வுப் போதை ... | 167 |
| மலையாளம் தாயா—சேயா? ... | 177 |
| கால்டுவெல் கருத்து ... | 188 |


## குறுக்க விளக்கம்

1. பே.த. = பேச்சுத் தமிழ்
2. எ.தெ. = எழுத்துத் தெலுங்கு
3. எ.க. = எழுத்துக் கன்னடம்
4. எ.ம. = எழுத்து மலையாளம்
5. தொ.தி. = தொல் திராவிட மொழி

# ஆசிரியர் முன்னுரை

மொழியியல் (Linguistics) என்பது, மொழி தொடர்பான ஒரு புதுக் கலை. இந்தக் கலை பயின்றவர்கள் மொழியலார் (Linguist) எனப் பெயர் வழங்கப் பெறுகின்றனர். இந்தக் கலை தமிழகத்திற்கு அறிமுகமானது இற்றைக்குமுன் ஐம்பது ஆண்டு காலத்திற் குள்ளேயாம் தமிழில் பட்டம் பெற்றவர்களேயன்றி, பெறாதவர்களும் இந்தக் கலையைப் பயின்று இந்தக் கலை தொடர்பான பட்டம் பெற்றுள்ளனர். இவர்கள் மொழியியலார் எனப் படுகின்றனர்.

பண்டு சமசுகிருதம் தமிழ் நாட்டிற்கு வந்ததும், அம் மொழி பயிலாத தமிழ் அறிஞர்கள் மட்டமாக மதிக்கப் பெற்றனர். பிற்காலத்தில் ஆங்கிலம் வந்ததும் அம்மொழி பயிலாத தமிழ் அறிஞர்கள் தாழ்த்தப்பட்டனர். இப் பொழுதோ, மொழியியல் பயின்று பட்டம் பெறாத தமிழ் அறிஞர்கள், மொழியியல் பட்டம் பெற்றவர்களால் இழிவாக எண்ணப்படுகின்றனர்.

மொழியியலார் ஒருவர், ஒருநாள், என்னிடம், தமிழ் இலக்கிய - இலக்கணப் புலமையில் மிகவும் வல்லுநரான பேராசிரியர் ஒருவரைக் குறிப்பிட்டு 'அவர் மொழியியல் அறியாதவர்' என்று கூறி மட்டப் படுத்திப் பேசினார் என்ன செய்வது!

மொழியியல் ஓர் ஐரோப்பிய இறக்குமதிச் சரக்கு. நாம் எத்தனையோ இறக்குமதிச் சரக்குகளை வாழ்க்கையில் கட்டாயத் தேவையாகக் கொண்டு பயன்படுத்தி வாழ்கின்றோம். இவ்வாறான கட்டாயத் தேவை மொழியியலுக்கு இல்லை, மொழியியல் என ஒன்றைச் சிறப்

பாகப் பயிலாமலேயே மொழியை வளர்க்க முடியும். மொழியியலார் மேற் கொண்டுள்ள சில செயல்களை மொழியியல் கல்லாதவரும் இயற்கையாக மேற்கொண்டு செய்து வருகின்றனர். தமிழ் M.A. பட்டம் பெற்றவர்க்கு மொழியியல் M.A. பட்டமோ அல்லது சான்றிதழோ இருந்துதான் தீரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

மொழியியலார் பழைய இலக்கணத்தை 'மரபு இலக்கணம்' என்னும் பெயரால் குறிப்பிடுகின்றனர். இவர்களின் மொழியியல் இலக்கணம் புதிய இலக்கணமாகும். தமிழ் மரபு இலக்கணத்தில் நூற்றுக் கணக்கான கலைச் சொற்கள் உள்ளன. அவை தமிழ்ச் சொற்களாகும். மொழியியலில் உள்ள கலைச்சொற்களோ ஆங்கிலச் (ஐரோப்பியச்) சொற்களாகும். இந்த ஆங்கிலச் சொற்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவையும் நூற்றுக் கணக்கில் உள்ளன.

மொழியியல் கற்றவர்கள், நூற்றுக் கணக்கான புதிய ஆங்கிலச் சொற்களையும் அவற்றிற்கு நேராகப் பெயர்க்கப்பட்ட தமிழ்ச் சொற்களையும் தேவையின்றிச் சுமந்து கொண்டுள்ளனர். தாம் கற்றுள்ள ஆங்கில-மொழியியலுக்குப் பொருந்துமாறு, தமிழ் இலக்கணத்தைத் தட்டிக் கொட்டி நீட்டியும் வளைத்தும் சுருட்டியும் செதுக்கியும் குறைத்தும் இன்னும் என்ன எல்லாமோ செய்து கொண்டுள்ளனர். தலைப் பாகைக்கு ஏற்பத் தலையையும் மிதியடிக்கு ஏற்பக் காலையும் செதுக்கும் செயல்கள் சிலவும் நடை பெறுகின்றன. இரு தரத்தாருக் குள்ளும் கருத்து வேற்றுமை நிரம்ப உள்ளது.

வரலாற்றில் M.A. படித்தவர்க்குக் கணக்கு தெரியாதிருக்கலாம்; அவர் கணக்கு M.A. பயின்றுதான் தீரவேண்

டும் என்பதில்லை. அதே போல, கணக்கு M.A. பட்டம் பெற்றவர் வரலாற்று M.A. பட்டம் பெற்றாக வேண்டிய கட்டாயம் ஒன்று மில்லை. இவ்வாறே, தமிழ் M.A. படித் தவர்கள் மொழியியல் M.A. பட்டப்படிப்பு படித்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஒரு சிறிதும் தேவை யில்லை. மொழியியல் பயிலாமலே தமிழை வளர்க்க முடி யும். எனவே, இந்த நிலையில், மொழியியல் பட்டத்தினர், மற்றவரும் மொழியியல் படித்தால்தான் தமிழ் அறிஞ ரெனக் கூறமுடியும் எனக் கூறுவதற்குத் தகுதியோ – உரி மையோ சிறிதும் இல்லை. மொழியியலார் சிலர் செய்யும் ஆராய்ச்சி தமிழ்க் கொலையாயிருப்பது கண்டறியப்படு கின்றது.

மற்றும், மொழியியலார் சிலர், திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சியைத் தம் 'ஏக போக' உரிமையாகக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. யானையைத் தூக்கிப் பானைமேலும் பானையைத் தூக்கி யானைமேலும் போட்டால் எப்படியோ, அப்படிப்போல, ஒரு மொழிச் சொற்களைத் தூக்கி இன்னொரு மொழிமேலும், அந்த மொழிச் சொற்களைத் தூக்கி இந்த மொழிமேலும் போட்டு என்னென்னவோ செய்கின்றனர். சொற்களை எழுத்து எழுத்தாகவும் அசை அசையாகவும் பிரித்து அறுவை மருத்துவம் செய்கின்றனர். மொழியியல் பட்டம் பெறாத தமிழ் அறிஞர்களை மட்டமாக மதிக்கும் மொழி யியல் பட்டதாரிகள் செய்யும் சில செயல்களைத் தமிழ் அறிஞர்கள் தமிழ்க் கொலையாக எண்ணி வருந்துகின்ற னர்-என்ற செய்தியையும் இவர்கள் உள்ளத்தில் கொள்ள வேண்டும்.

அடியேனும் ஒரு சிறிது மொழியியல் அறிந்தவனே. மொழியியலார் கூறாத எத்தனையோ புது இலக்கண

முடிபுகளைக் கூறிப் பாராட்டப்பெற்றிருப்பவன் யான். இந்த அடிப்படை முன்னுரையுடன், தொல் திராவிட மொழியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றேன். இந்த நூலும் ஒருவகையில் மொழியியல் தொடர்பான நூல் ஆதலின், மேலே இவ்வளவு கூற வேண்டியதாயிற்று. அறிஞர்கள் ஆய்க.

இந்நூலுக்குத் தக்க அணிந்துரை நல்கிய திரு.ச அறவணனுக்கும், நூலை நன் முறையில் விரைந்து அச்சிட்டுத் தந்த கே.பி.டி. அச்சகத்தாருக்கும் எனது நன்றி மிகவும் உரித்து.

**சுந்தர சண்முகன்**
30-11-1988

# தொல் திராவிட மொழி - கண்டுபிடிப்பு

## திராவிட மொழிக் குடும்பம்

### மொழிக் குடும்பங்கள்:

உலகில் பற்பல மொழிகள் பேசப்படுகின்றன. அவை பல குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தோ -ஐரோப்பிய மொழிக் குடும்பம், திராவிட மொழிக் குடும்பம், சித்திய மொழிக் குடும்பம்,சீனோ-திபேத்திய மொழிக் குடும்பம், அமெரிக்க மொழிக் குடும்பம், ஆப்பிரிக்க மொழிக் குடும்பம் முதலியன அவை. மொழிகட் கிடையே உள்ள பல்வேறு ஒற்றுமைகளைக் கருதிக் குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

இங்கிலாந்திலிருந்து வங்காளம் வரையும் உள்ள மொழிகளுள் பெரும்பாலன இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை எனலாம். ஐரோப்பாவில் தலைமை தாங்கும் கிரேக்கம்-இலத்தின் - இவற்றினின்றும் பிறந்த - பிரிந்த-திரிந்த மொழிகள் ஆகியவையும்,வட இந்தியாவில் தலைமை தாங்கும் சமசுகிருதமும் இதினின்றும் பிறந்த - பிரிந்த-திரிந்த மொழிகள் ஆகியவையும் இந்தோ-ஐரோப்பிய-மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

### திராவிடக் குடும்பம்:

இவ்வாறு பல குடும்ப மொழிகளைப் பற்றியும் கூறலாம். இனி, இந்நூலில் விதந்து எடுத்துக் கொண்ட திராவிட மொழிக் குடும்ப மொழிகளைப் பற்றிமட்டும் ஆராய

லாம். தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகள் திராவிட மொழிகள் எனப்படுகின்றன. திராவிடம் என்ற பெயர் பற்றிய ஆராய்ச்சி இங்கே தேவையில்லை. இந்தப் பெயர், எப்படியோ, இந்தியாவின் நாட்டுப் பண்ணாகிய "ஜன கண மன" என்று தொடங்கும் பாடலிலும் இடம்பெற்று விட்டது. 'தெக்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திரு நாடும்' எனப்பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன் மணீயப் பாடலிலும் இடம்பெற்றுள்ளது. உலக மொழி யாராய்ச்சியாளர்களாலும் இந்தப்பெயர் ஆளப்படுகிறது. இந்த அளவோடு இது பற்றிய செய்தியை நிறுத்திக் கொள்ளலாம். அடுத்து, திராவிட மொழிகளை நோக்கிப் பயணம் தொடங்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தமிழ் நாட்டில் வந்து தங்கிய 'கால்டுவெல்' (Caldwell) என்னும் ஆங்கில அறிஞர் தென்னிந்திய மொழிகளைக் கற்றார். அம்மொழிகட் கிடையே உள்ள இலக்கண ஒப்புமைகளை ஆய்ந்து பதினைந்து ஆண்டுகாலம் உழைத்து, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (Comparative Grammar of Dravidian Languages) என்னும் அரிய நூலை1856 ஆம்ஆண்டுபடைத்தளித்தார்.இவரது முயற்சி, திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சியாளர்க்கு ஊக்கம் ஊட்டியது.இம்மொழிகளின் தொடர்பு பற்றிய எண்ணமும் எழுந்தது. இந்தத் திராவிட மொழிகள் வருமாறு:-

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகம், துடவர் மொழி, கோடர் மொழி, கோண்டு, கூ, குருக், படகா, கதபா, இருளா, கொலாமி, குறவா, மால்தோ, கோயா, நயிக்காடி, நாக்கிபோடி, கவர், மாலர், உராவன், பிராகுயி, பார்ஜி முதலியன திராவிட மொழிகளாகும். இவற்றுள் பிராகுயி மொழி தமிழ் நாட்டுக்கு வடமேற்கே

உள்ள பலுச்சித்தானத்தில் வழங்குவதாகும். இதைக் கொண்டும், சிந்துவெளி அகழ்வாராய்ச்சியைக் கொண்டும், இந்தியா முழுதும் ஒரு காலத்தில் திராவிட மொழிகளே இடம்பெற்றிருந்தன; ஆரியம் வந்ததும் அவை தெற்கே தள்ளப்பட்டு ஒதுங்கின – என்றெல்லாம் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர்.

**தொல் திராவிடம்:**

இந்தத் திராவிட மொழிகட்கெல்லாம் தலைமைத் தாய்மொழி – தலைமை முதல் மொழி – அதாவது, தொல் திராவிட மொழி ஒன்று இருந்ததாகவும், அதிலிருந்தே இந்தத் திராவிட மொழிகள் பிறந்ததாகவும் – பிரிந்ததாகவும், அந்தத் தொல் திராவிட முதன்மைத் தாய்மொழி அழிந்து விட்டதாகவும் இப்போது கிடைக்கவில்லை என்பதாகவும், மொழியியலார் சிலர் அல்லது பலர் கூறுகின்றனர். அந்தத் தொல் திராவிட மொழி எங்கே போயிற்று? அதில் பாதியைக் காக்கை தூக்கிக் கொண்டு போய் விட்டதா? மீதிப் பாதியை எலி இழுத்துக் கொண்டு போய் விட்டதா? எங்கே – எவ்வாறு போயிற்று? அந்தத் தொல் திராவிட மொழியைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

**இலத்தீன்;**

ஐரோப்பாவில் வழங்கப்பெறும் இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், போர்த்துகீசியம், ருமேனியன் முதலிய மொழிகள், ரோமன்மொழி எனப்படும் இலத்தீனின் சிதைவு மொழிகளே. அதனால் இம்மொழிகளை 'ரோமன்சு' (Romance) எனல் மரபு. அமெரிக்கக் கண்டத்தில் பிரெஞ்சு, ஸ்பானிஷ். போர்த்துகீசியம் ஆகிய மொழிகள் வழங்கப் படும் அர்ஜென்டினா, பிரேசில், கொலம்பியா, குவாட்டமாலா முதலிய இருபது நாடுகள் அடங்கிய பகுதி 'இலத்

தீன் அமெரிக்கா' எனப் பெயர் வழங்கப் படுவதை ஈண்டு நினைவில் கொள்ளவேண்டும். மற்றும், இலத்தீனிலிருந்து இத்தனை மொழிகள் பிறந்தோ – பிரிந்தோட–திரிந்தோ தோன்றியும், இலத்தீன் மொழி அழியாமல் இன்றும் இருப்பதை எண்ணத்தில் நிறுத்தவேண்டும்.

**சமசுகிருதம்:**

இதேபோல, வட இந்தியாவில், சமசுகிருதத்திலிருந்து பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளும் இப்போது, வழங்கிப் பெறும் பல வட இந்திய மொழிகளும் பிறந்தோ பிரிந்தோ – திரிந்தோ தோன்றியும், சமசுகிருத மொழி அழியாமல் இன்றும் இருப்பதையும் ஈண்டு நினைவுகூர வேண்டும்.

பல மொழிகட்கு முதன்மைத் தாய்மொழிகளாகிய இலத்தீனும் சமசுகிருதமும் அழியாமல் இன்றும் இருக்கும் போது, திராவிட மொழிகளின் முதன்மைத் தாய்மொழி எனக் கற்பனை செய்யப்படும் தொல்திராவிட மொழி மட்டும் எவ்வாறு அழிந்துபோயிருக்கக்கூடும்? அந்தத் தொல் திராவிட மொழி இன்றும் இருக்கிறது. ஆனால், இலத்தீனும் சமசுகிருதமும் பேச்சு வழக்கில் இல்லாமல் எழுத்து வழக்கில் மட்டும் உள்ளன. தொல் திராவிட மொழியோ, பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகிய இரண்டிலும் உள்ளது என்னும் உண்மையை, தெளிவு பெறாத மொழியியலார் சிலருக்குத் தெளிவு படுத்தவேண்டும். இந்த இலக்கை அடைவதற்காக, பெருவாரியாக வழங்கப்பெறும் திராவிட மொழிகளைப்பற்றிச் சிறு குறிப்புகள் தரவேண்டும். எனவே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பற்றிய சிறு குறிப்புகள் இனி வருமாறு:

**தமிழ் :**

தொடக்கக் காலம் தெரியாத மிகவும் பழைய மொழி தமிழ். மூவாயிரம் ஆண்டுகட்குமுற்பட்ட இலக்கிய இலக்கண வளம் உடைய தமிழ். இப்போது கிடைத்திருக்கும் நூல்களுள் பழமையானது தொல்காப்பியம். இதன் ஆசிரியர் தொல்காப்பியர் இவர், தமக்கு முன்பே பலர் நூல்கள் எழுதியுள்ளார்கள் எனப் பலவிடங்களில் கூறியுள்ளார். இந்நூல் கி.மு.500 அல்லது கி.மு. 1000ஆண்டுக்கு முற்பட்டது எனக்கூறப்படுகிறது. பிறமொழிச்சொற்கள் கலக்காமல், குறிப்பாக வடமொழிச்சொற்கள் கலக்காமல் எழுதக்கூடிய வளம் உடைய மொழி தமிழ். இது மேன்மேலும் வளர்ச்சி பெற்று வருகிறது.

**தெலுங்கு :**

தெலுங்கு மொழி ஆந்திராவில் வழங்கப்படுகின்றது. ஆந்திரா என்பது மொழியைக் குறிக்காது; நாட்டையே குறிக்கும். மொழியின் பெயர் தெலுங்கு என்பதே. இதற்குத் தெனுகு, தெலுகு என்னும் வேறு பெயர்களும் உண்டு. தெற்கேயிருந்து வந்தது தெனுகு என்றும், தெளிவுடையது தெலுகு என்றும் ஒரு வகைப் பெயர்க் காரண விளக்கம் கூறப்படுகிறது.

தெலுங்கில் சமசுகிருதச் சொற்களும் அதன் திரிபான பிராகிருதச் சொற்களும் மிக்குள்ளன. சமசுகிருதச் சொற்கள் சிறிதும் மாறுபடாமல் தற்சமச் சொற்களாகத் தெலுங்கில் கலந்து வழங்கப்படுகின்றன. ஆரியாவர்த்தத்திற்கும் திராவிடத்திற்கும் இடையில் தெலுங்கு நாடு இருப்பதால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், சமசுகிருதத்திலிருந்து தெலுங்கு வந்ததாகக் கூறுவாரும் உளர்.

தெலுங்கின் முதல் இலக்கண நூல், கேதனர் என்பவர் கி.பி 1260 ஆம் ஆண்டில் இயற்றிய 'ஆந்திரபாஷா பூஷணம்' என்பது. ஆந்திரபாஷா என்பது மொழியின் பெயர் அன்று; ஆந்திரத்தில் உள்ள மொழி என இதற்குப் பொருள் கொள்ள வேண்டுமாம். இந்த நூல், கன்னட மொழியில் உள்ள 'கரு நாடக பாஷா பூஷணம்' என்னும் இலக்கண நூலைத் தழுவியதாம். தெலுங்கின் இறுதி இலக்கண நூல்; பிரவஸ்து சின்னய சூரி' என்பவர் கி.பி. 1260 ஆம் ஆண்டில் இயற்றிய 'பால வியாகரணம்' என்பது.

தெலுங்கின் முதல் இலக்கிய நூல், நன்னய பட்டர் என்பவர், கி.பி. 1050 ஆம் ஆண்டு, சமசுகிருத மகா பாரத நூலின் மூன்று பருவங்களைத் தெலுங்கில் மொழி பெயர்த்த பாரத நூலாகும். அடுத்த பழைய இலக்கியம், நன்னி சோடர் என்பவர் கி.பி. 1120 ஆம் ஆண்டில் இயற்றிய 'குமார சம்பவம்' என்னும் புராணக் கதை நூலாகும் சமசுகிருதம் கலந்த தெலுங்கு மொழியின் இரங்கத் தக்க நிலை இது.

**கன்னடம்:**

இது கருநாடக மாநிலத்தில் பேசப்படுவது. இப்போது வழங்கும் கன்னட மொழி அமைப்புக்கு முன் இருந்த அமைப்பு 'பழங்கன்னடம்' எனப்படுகிறது. பழங் கன்னடம் தமிழோடு நெருங்கிய தொடர்புடையது. பழங் கன்னடத்தில் எ,ஒ,ழ,ற,ன என்னும் எழுத்துகள் தமிழில் உள்ளாங்கு இருந்தன. புதுக்கன்னடத்தில் 'ற' என்பது 'ர' ஆகவும், 'ழ' என்பது 'ள' ஆகவும் ஒலிக்கப்படுகின்றன. கன்னடத்தில் உள்ள முதல் இலக்கண நூல் 'கவிராஜ மார்க்கம்' என்பது. இது கி.பி.9ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது.

இதன் ஆசிரியர் இராட்டிரகூட மன்னரான 'நிருப துங்க' அமோகவர்ஷன் (814 – 877) என்பவர் என்று சிலரும், இவரது அவைக்களப் புலவர் என்று சிலரும் கூறுகின்றனர். நூலின் பெயரும் அரசர் பெயரும் வடமொழியாயிருப்பது காண்க. திராவிட மொழி ஒன்றின் நிலை இது. இந்த வேந்தரே மிகுதியான வடமொழிக்கலப்பைப்பழித்துள்ளார். கன்னட மொழியில் சொற்களின் இறுதியில் மெய்யெழுத்து இராது. தமிழுக்கும் கன்னடத்திற்கும் உள்ள சிறு சிறு ஒலி வேறுபாட்டைப் பிறகு காணலாம்.

**மலையாளம்:**

தமிழ் நாட்டின் முப்பெரும் பிரிவுகளாகிய சேரநாடு, பாண்டிய நாடு, சோழநாடு என்பவற்றுள் ஒன்றாகிய சேரநாடு என்பதே இப்போதுள்ள கேரள நாடு எனப் படும் மலையாளமாகும். மதம், இனம், அரசியல், பண் பாடு, முதலியவை தொடர்பான வேற்றுக் கலப்பினால், சேர நாட்டிற்கும் மற்ற தமிழ்ப் பகுதிக்கும் இடை யேயும், சேரநாட்டுத் தமிழுக்கும் மற்ற பகுதித் தமிழுக் கும் இடையேயும் நாளடைவில் வேற்றுமை தோன்ற லாயிற்று. இரு பகுதிகட்கும் இடையே நீண்டு படுத்துக் கிடக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வேறுபாடு உண்டாக்கியதில் பங்கு உண்டு.

இடத்தின்பெயர் மலையாளம். எனவே, பண்டு சேர நாட்டுத் தமிழ், மலை நாட்டுத் தமிழ்-மலையாளத் தமிழ் -மலையாண்மை என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது. கி.பி. 14 ஆம் நூற்றாண்டளவில், மலை நாட்டுத் தமிழ் இப்போதுள்ள மலையாளம் ஆயிற்று. வடமொழி எழுத்து களும் சொற்களும் சேர்க்கப்பட்டன.

கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்கும் 14 ஆம் நூற்றாண்டிற்கும் இடையே பல மாறுதல்கள் நிகழ்ந்தன. மலையாளத் தமிழும் பிற பகுதித் தமிழும் கலந்த நடை 'மிசிர பாஷை' எனப்பட்டது; இதைப் பார்ப்பனர் அல்லாதார் பேசினர். மலையாளத் தமிழும் சமசுகிருதமும் கலந்த நடை 'மணிப் பிரவாளம்' எனப்பட்டது; இதனைக் கோயில் பூசனை செய்பவரும் உயர்ந்த வகுப்பினர் என்று சொல்லிக் கொள்பவரு மாகிய 'நம்பூதிரி' என்னும் இனத்தினர் பேசி வந்தனர். 16 ஆம் நூற்றாண்டளவில், மேற்கூறப்பெற்றுள்ள இரண்டு நடைகளும் கலக்கவே, இப்போதுள்ள மலையாள மொழி உருவாயிற்று. இது ஏறக்குறைய மாறாமல் இன்றளவும் நீடித்து நிற்கிறது.

கி.பி. 12 – 13 ஆம் நூற்றாண்டளவில் சீராமன் என்பவர் 'இராம சரிதம்' என்னும் நூல் இயற்றினார். இதில் யுத்தகாண்டம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. 14 ஆம் நூற்றாண்டில் கலப்பு நடையில் சில பாடல்களும் சிறுசிறு நூல்களும் இயற்றப் பெற்றன. 15 ஆம் நூற்றாண்டில் செறுசேரி என்பவர், 'கிருஷ்ண காதா' என்னும் நூல் இயற்றினார். 16 ஆம் நூற்றாண்டினர் எனக் கருதப்பெறும் 'துஞ்சத்து எழுத்தச்சன்' என்பவர் 'அத்தியாத்தும இராமாயணம்', 'பாரதம்' முதலிய நூல்கள் இயற்றினார். மலையாள மொழியை ஒருமுகப்படுத்தி நிலைபெறச் செய்த பெருமை இவருக்கு உண்டு. இதனால் இவர் மலையாள மக்களால் பெரிதும் மதித்துப் போற்றப்படுகிறார். இம்மொழிக்கு 14 ஆம் நூற்றாண்டில் 'லீல திலகம்' என்னும் இலக்கண நூல் சமசுகிருதமொழியில் இயற்றப்பெற்றது வியப்பிற்கு உரியது. வழிகாட்டி (Guide) நூலாக, ஒரு மொழிக்கு இன்னொரு மொழியில் இலக்கணம் எழுதுவதே இயல்பு.

**துளுவம்:**

துளுவம் என்னும் துளு மொழி, கருநாடக மாநிலத்தில் – தென் கன்னடம் என்னும் மாவட்டத்தில் உள்ள துளு நாடு என்னும் வட்டாரத்தில் பேசப் படுகிறது. இதைப் பேசுவோர் தொகை மிகக் குறைவே. இந்த மொழிக்கு எனத் தனி எழுத்து இல்லை. கி.பி. 19 ஆம் நூற்றாண்டுவரை இது மலையாள எழுத்தால் எழுதப்பட்டது. 1842 ஆம் ஆண்டில், 'பாசல் மிஷன் அச்சகத்தார்' (Basel Mission Press) துளு மொழிக்குக் கன்னட எழுத்தைப் பயன்படுத்தினர். பிறகு இன்றுவரை கன்னட எழுத்தே நீடித்துப் பயன்படுத்தப் படுகிறது. மென்மையான இனிய பலாப் பழத்தை இம்மொழி மக்கள் 'துளுவம் பழம்' என்கின்றனர். எனவே, துளுவம் என்பதற்கு இனிமை என்னும் பொருள் கூறலாம் என்று சொல்லப்படுகிறது.

**மற்ற திராவிட மொழிகள்:**

முன் சொல்லப் பட்டவை தவிர்த்த மற்ற திராவிட மொழிகள், சிறுபான்மையினரான மலைவாழ் மக்களாலும் போதிய வளர்ச்சி பெறாதவர்களாலும் ஆங்காங்கே பேசப்படுகின்றன. இவற்றுள் கவர் மொழி ஒரியா எழுத்தால் எழுதப்படுகிறது. துடவர், தோடர், கோண்டு, உராவன், மாலர், குடகு ஆகிய மொழிகள் ரோமன் (ஆங்கில) எழுத்தால் எழுதப்படுகின்றன. இவை திருத்தமும் வளர்ச்சியும் பெறவேண்டும். இனி, திராவிடமொழி கட்கிடையே உள்ள தொடர்பு குறித்துச் சிறிது ஆராயலாம்.

**கிளை மொழிகள்:**

எந்த மொழியும் எழுதப்படும்போது, அப்போது பேசப்படும் ஒலிவடிவமே எழுத்து (வரி) வடிவம் பெறும் என்று கூறலாம். இலத்தீன் மொழி முதல் முதலில் எழுதப்பட்ட

போது அப்போது பேசப்பட்ட ஒலி வடிவமே எழுதப்பட்ட தாம். நீண்ட நாள் பேச்சு இலத்தீனும் எழுத்து இலத் தீனும் ஒன்றாகவே இருந்தமையை மறக்க முடியாது. நாளடைவில் எழுத்து வடிவத்தினின்றும் பேச்சு வடிவம் சிதைந்து வேறு மொழி போல் காணப்பட்டது. அந்தப் பேச்சு இலத்தீன் 'ரோமன் மொழி' (Lingua Romana) என் னும் பெயர் பெற்றது. இந்த அடிப்படை உண்மை பெரும் பாலும் மற்ற மொழிகட்கும் பொருந்தும். பின்னர், அந்த எழுத்து இலத்தீன் தனி மொழி போல் ஆகி, இன்று வரை யும் பேசப்படாமல் எழுத்து வடிவத்தில் மட்டும் இருப் பதையும் நினைவுகூர வேண்டும்.

இவ்வாறு ஒரு மொழியிலிருந்து சிதைந்து, பிரியும் மொழிகளைக் கிளை மொழிகள் - இன மொழிகள் என் றெல்லாம் கூறலாம். மற்றும், ஒரு மொழியே, வட்டாரத் திற்கு வட்டாரம், காலத்திற்குக் காலம், இனத்திற்கு இனம், சமயத்திற்குச் சமயம், குலத்திற்குக் குலம், ஊருக்கு ஊர், தெருவிற்குத் தெரு, உறவினர்களிடையே யும் குடும்பத்திற்குக் குடும்பம், ஏன், தனி மாந்தர்க்குத் தனி மாந்தர் வேறுபடலாம். ஒருவரே, பல்வேறு சூழ்நிலை களில் பல்வேறு விதமாகப் பேசலாம். இந்தப்போக்கு மிகுதிப் படுமாயின், இடத்திற்கு இடம் ஒரே மொழி வேறுபட்டுப் பல கிளைகளாகப் பிரியலாம். இவ்வாறு பிரிந்தவையே, திராவிடக் குடும்ப மொழிகள் உட்பட உல கின் பல்வேறு குடும்ப மொழிகளும் ஆகும்.

எழுத்தும் பேச்சும் ஒன்றாயிருந்த ஒரு மொழியிலிருந்து பிரிந்த கிளைமொழிகள், நீண்ட காலம் எழுத்து வடிவம் பெறாமல் பேச்சளவிலேயே இருக்கும். பின்னர், அம்மொழி களைப் பேசும் அறிஞர்கள் சிலர் கூடி, மொழிக்குப் புதிய எழுத்து வடிவம் படைப்பார்கள். அதன் பின்னர், ஒவ் வொரு பேச்சு மொழியும் புதுப்புதுப் பெயர்பெறும்.

எழுத்து வடிவம் பெற்ற மொழிகளைக் குறிப்பிட்ட இலக்கண விதிகளை மையமாகக் கொண்டு எழுதியும் பேசியும் வராமல், எழுதுவது வேறு – பேசுவது வேறு என்ற நிலையில் கையாண்டுவரின் மீண்டும் மொழி பிரிய வாய்ப்பு உண்டு. எனவே, குறிப்பிட்ட இலக்கண விதிகளை மையமாகக் கொண்டு எழுத்து நடையை ஒட்டியே பேச்சு நடையும் இயன்றவரை இருக்க வேண்டும். பேசுவது போல் எழுதவேண்டும் என்று கூறும் 'மேதைகட்கு' இதை எண்ணிப்பார்க்க வேண்டிய கடமை உள்ளது.

எழுத்து நடையிலிருந்து பேச்சுநடை மாறக் கூடாது என்பதைத் தெளிந்தறியவும், திராவிட மொழிகட்கெல்லாம் பொதுவான-முதன்மையான-தூய்மையான தொல் திராவிட மொழி எது என்பதைக் கண்டு பிடிக்கவும், பின்வரும் நீண்ட சொல் அட்டவணையைக் காண்போமாக. இதில், ஏறக்குறைய இரண்டாயிரம் தொல்திராவிட மொழிச் சொற்களோடு ஒலிப்பில் ஒத்த பிற திராவிட மொழிச் சொற்கள் தரப்பட்டிருக்கும். இனி அவை வருமாறு:

# திராவிட மொழிச் சொற்பட்டியல்

| பேச்சுத் தமிழ் | எழுத்துத் தெலுங்கு | எழுத்துக் கன்னடம் | எழுத்து மலையாளம் | தொல்திராவிட மொழி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| கால் (எண்) | கால் | கால் | கால் | கால் |
| அர | அர | அரெ | அர | அரை |
| முக்கால் | முக்க | முக்கா | முக்கால் | முக்கால் |
| ஒண்ணு | ஒக்கட்டி | ஒந்து | ஒந்நு | ஒன்று |
| ரெண்டு | ரெண்டு | எரடு | ரண்டு | இரண்டு |
| மூனு | மூடு | மூரு | மூந்நு | மூன்று |
| நாலு, நாலி | நாலுகு | நால்கு | நாலு | நால், நான்கு |
| அஞ்சி, அஞ்சு | ஐது | ஐது | அஞ்சு | ஐந்து |
| ஆறு, ஆரு | ஆரு | ஆரு | ஆறு | ஆறு |
| ஏழு | ஏடு | ஏளு | ஏழு | ஏழ் (ஏழு) |

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | எனிமிதி | என்டு | எட்டு | எட்டு |
| ஒம்பது | தொம் மிதி | ஒம்பத்து | ஒன்பது | ஒன்பது |
| பத்து | பதி | ஹத்து | பத்து | பத்து |
| இருவது | இரவை | இப்பத்து | இருபது | இருபது |
| முப்பது | முப்பை | மூவத்து | முப்பது | முப்பது |
| நாப்பது | நலவை | நலுவத்து | நால்பது | நாற்பது |
| அம்பது | யாவை | ஐவத்து | அன்பது | ஐம்பது |
| அறுவது | அரவை | அறுவத்து | அறுபது | அறுபது |
| எழுவது | டெப்பை | எப்பத்து | எழுவது | எழுபது |
| எண்பது (எம்பளது) | எனவை | எம்பத்து | எண்பது | எண்பது |
| தொண்ணூறு | தொம்பை | தொம்பத்து | தொண்ணூறு | தொண்ணூறு |
| நூறு | நூரு | நூரு | நூறு | நூறு |
| ஆயிரம் | வெய்யி | சாவிர | ஆயிரம் | ஆயிரம் |
| லட்சம் (நூறாயிரம்) | லக்ஷ | லக்ஷ | லக்ஷம் | இலட்சம் |
| கோடி | கோடி | கோடி | — | கோடி |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| நானு, நான் | நேனு | நானு | ஞான் | நான் |
| நாங்க, நாம்ப நம்ம, | மேமு, மனமு | நாவு | ஞங்கள், நம்மள் | நாம், நாங்கள் |
| நம்பள | (மம்மு) | நம்மன்னு | ஞங்களே | எங்களை |
| நம்மமேலே, நம்மீது | மாமீத | நம்ம மேலே | ஞங்களில் | நம்மேல், நம்மீது |
| நீ, நீனு | நீவு | நீனு | நீ | நீ |
| நீங்க | (மீரு) | நீவு | நிங்ஙள் | நீங்கள் |
| அவன் | அதடு, வாடு | அவனு | அவன் | அவன் |
| அவ, அவள் | ஆமெ | அவளு | அவள் | அவள் |
| அவர், அவரு | வாரு | அவரு | அவர் | அவர் |
| இவர், இவரு, | வீரு | இவரு | இவர் | இவர் |
| அது | அதி | அது | அது | அது |
| இது | இதி | இது | இது | இது |

| | | | | |
|---|---|---|---|---|
| அவை | அவி | அவு | அவ | அவை |
| இவை | இவி | இவு | இவ | இவை |
| எவன், யாவன், | எவடு | யாவனு | ஏவன் | எவன், யாவன் |
| எவள், யாவள், | — | யாவளு | — | எவள், யாவள் |
| ஆரு, யாரு யாவர் | ஏரு | யாரு | ஆரு, ஆரானு | யார் |
| எவர் | எவரு | யாவுரு | யாவர் | யாவர் |
| எது | எதி | யாவுது | எது | எது |
| எவை | | | ஏவ | எவை |
| சின்ன, சிறிய | சின்ன, சின்னாரி சிக்க | | செறிய | சின்ன, சிறிய |
| கொடு | கொடு | கொடு | கொடு | கொடு |
| பகல், பகலு | பகலு | அகலு | பகல் | பகல் |
| இரவு, ராத்திரி, ராவு | ராத்ரி | ராத்ரி | ராத்ரி | இரவு, இரா |
| ஊண் | — | ஊண்ட்ட | ஊணு | ஊண் |
| சேலை | சீரா | சேலை | — | சேலை |
| முண்டு, துண்டு | (துண்டு) | — | முண்டு | முண்டு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| தல, தலெ | தல | தலெ | தல | தலை |
| முகம் | முகமு | முக | முகம் | முகம் |
| செவி | செவ்வு, செவி | கிவி | செவி | செவி |
| நெத்தி | நெத்தி, நுதுரு | (நெத்தி) | நெற்றி | நெற்றி |
| கண்ணு | கன்னு | கண்ணு | கண்ணு | கண் |
| வாய், வாயி | (நோரு) | பாயி | வாயி | வாய் |
| மூக்கு | முக்கு | மூகு, மூங்கி | மூக்கு | மூக்கு |
| தொட | தொட | தொட | துட | துடை |
| தோலு | தோலு | தொகலு | தொலி | தோல் |
| மீச | மீசமு | மீசெ | மீச | மீசை |
| கய், கை | சேயி | கை | கை, கய்யி | கை |
| பட்ணம் | | | | பட்டினம். |
| பட்னம் | பட்னமு | (பட்ன) | | பட்டணம் |
| ஆ, பசு, பசுவு | ஆவு | அசுவு | பசு | ஆ (பசு) |
| ஊரு | ஊரு | ஊரு | ஊரி | ஊர் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஊருக்கு | ஊரிக்கி | ஊரிகே | ஊரிலே | ஊருக்கு |
| எலி | எலுசு, எலுக்க | இலி | எலி | எலி |
| ஓடம் | ஓட | ஓட | ஓடம் | ஓடம் |
| நக | நக | நக | நக | நகை |
| பலக | பலக | ஹலகெ | பலக | பலகை |
| வல | வல | பலெ | வல | வலை |
| மழ | | மளெ | மழ | மழை |
| இல, எலெ | இல | எலெ | இல | இலை |
| மல | மல | மலெ | மல | மலை |
| மால | (தண்ட)மாலா | மாலெ | மால | மாலை |
| நகரம் | நகரமு | நகர | நகரம் | நகரம் |
| தேங்காய் | டெங்காயி | தெங்கினகாயி | தேங்ங | தேங்காய் |
| காயி, கா | காயி (காய) | காயி (காய) | க (ங) | காய் |
| அம்மா | அம்ம | அம்ம | அம்ம | அம்மா |
| தந்த | தண்ட்ரி | தந்தெ | தந்த | தந்தை |
| கத்தி | கத்தி | ஹத்தி | கத்தி | கத்தி |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பூ,பூவு | புவ்வு | ஹூவு | பூ | பூ |
| கூடு | கூடு | கூடு | கூடு | கூடு |
| எருது | எத்து | எத்து | — | எருது |
| அணகட்டு | அனக்கட்ட | அணகட்டு | அணகட்டு | அணைக்கட்டு |
| பொம்ம | பொம்மலு | — | பொம்ம | பொம்மை |
| தாத்தா | தாத | தாத | — | தாத்தா |
| அண்ணா, அண்ணன் | அன்ன | அண்ணா | — | அண்ணன் |
| அக்கா, | அக்க | அக்க | — | அக்கா (ள்) |
| தம்பி | தம்புடு,தம்முடு | தம்ம | தம்பி | தம்பி |
| அம்மா | அம்ம | அம்ம | அம்ம | அம்மா |
| அப்பா | — | அப்ப | அப்பன் | அப்பா |
| மாமா | மாம | மாம, மாவ | அம்மாவன் | மாமா, மாமனார் |
| அத்த | அத்த | அத்தெ | — | அத்தை |

| | | | | |
|---|---|---|---|---|
| மகன் | மகவாடு | மக | மகன் | மகன் |
| மகள் | — | மகளு | மகள் | மகள் |
| இல்லம் | இல்லு | — | இல்லம் | இல்லம் , |
| மன | — | மனெ | மன | மனை |
| கட்டடம் | கட்டட | கட்டட | கெட்டிடம் | கட்டடம் |
| குடிச,குடில் | குடிசெ | குடிசலு | குடில் | குடிசை, குடில் |
| மாடி | மேட | — | மாடம் | மாடி |
| கிண்ணம் | கின்ன | கிண்ணெ | கிண்ணம் | கிண்ணம் |
| கட்டெ (விறகு) | கட்டெ | — | கட்ட | கட்டை |
| உப்பு | உப்பு | உப்பு | உப்பு | உப்பு |
| பப்பு, பருப்பு | பப்பு | பப்பு | பரிப்பு | பருப்பு |
| துப்பட்டி | தும்படி | துப்பள | — | துப்பட்டி |
| நெய்,நெய்யி | நெய்யி | நெய்யி | நெய் | நெய் |
| பால், பாலு | பாலு | ஹாலு | பால்,பாலு | பால் |
| வெண்ணெ | வென்ன | பெண்ணெ | வெண்ண | வெண்ணெய் |
| கோழி,கோளி | கோடி | கோளி | கோழி | கோழி |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| கூழு, கூளு | கூடு | கூளு | கூழ் | கூழ் |
| கோதும, கோதம்ப | கோதும | கோதி | கோதம்பு | கோதுமை |
| மைதா | மைதா | மைதா | மைதா | மைதா |
| சாரு | சாரு | சாரு | சாரு | சாறு |
| இட்லி | இட்லி | இட்லி | இட்லி | இட்லி |
| தோசெ | தோசெ | தோசெ | தோச | தோசை |
| நீரு | நீரு, நீள்ளு | நீரு | — | நீர் |
| ஊருகா | ஊரகாயி | உப்பினகாயி | ஊறுக | ஊறுகாய் |
| உள்ளி (வெள்ளைப் பூண்டு | உல்லிபாய | உள்ளி | உள்ளி | உள்ளி |
| ஈருள்ளி ஈரவெங்காயம் | உல்லி | ஈருள்ளி | ஈருள்ளி | ஈருள்ளி |
| அப்பளம் | அப்படமு | ஹப்பள | பப்படம் | அப்பளம் |

| | | | | |
|---|---|---|---|---|
| சுண்ணம் | | | | |
| சுண்ணாம்பு | சுன்னம் | சுன்னா | சுண்ணாம்பு | சுண்ணாம்பு |
| வெண்டகா | பெண்டகாய | பெண்டேகாயி | வெண்டய்க்க | வெண்டைக்காய் |
| பொடலங்கா | பொட்லகாய | படவலகாய | படவலங்ங | புடலங்காய் |
| பீர்க்கங்கா | பீரகாய | ஹீரெகாயி | பீக்கங்ங | பீர்க்கங்காய் |
| சொரக்கா | சொரகாயி | சோரெகாயி | சொரக்க | சுரைக்காய் |
| தொண்டகாய் (கோவைக்காய் | தொண்டகாய | தொண்டெகாயி | — | தொண்டைக் காய் |
| நார்த்தங்கா | நாரிஞ்சகாய | — | நாரங்ங | நாரத்தங்காய் |
| கட | கட | கடெ | கட | கடை |
| (நீர்க்) கர | கர | கரெ | கர | கரை |
| தோக | தோக | சோகெ | தோக | தோகை |
| ஒரல், ஒரலு | ரோலு | ஒரலு | ஒரல் | உரல் |
| ஒடல்லு | ஒள்ளு | ஒடலு | (உடல்) | உடல் |
| கெடு | செடு | கெடு | கெடு | கெடு |
| பெயர், பேரு | பேரு | ஹெசரு | பெயர் | பெயர், பேர் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| எப்போ<br>எப்போது | எப்புடு | — | எப்போள்/ழ்<br>எப்போழானு | எப்பொழுது<br>எப்போது |
| பாம்பு | பாமு | ஹாவு | பாம்பு | பாம்பு |
| கீர | (தோட்ட) கூர | — | சீர | கீரை |
| கறிவேப்பில | கரிவேபாகு | கரிபேவு | கறிவேப்பில | கறிவேப்பிலை |
| கசகசா | கசகசாலு | கசகசெ | கசகசா | கசகசா |
| புலி | புலி | ஹுலு | புலி | புலி |
| சிறுத்தபுலி | சிருத்தபுலி | சிரதெ | — | சிறுத்தைப் புலி |
| பண்ணி | பந்தி | ஹந்தி | பன்னி | பன்றி |
| பல்லி | பல்லி | ஹல்லி | பல்லி | பல்லி |
| தேளு | தேலு | ஹேலு | தேள் | தேள் |
| மைனா | மைனா | மைனா | மைன | மைனா |
| மணிகட்டு | மனிகட்டு | — | மணிகட்டு | மணிக்கட்டு |
| வெரல் (கள்) | வ்ரேலு,வேலு | பெரளு | விரல் | விரல்(கள்) |
| நடுவிரலு | நடிவேலு | மத்யபெரளு | நடுவிரல் | நடுவிரல் |

| | | | | |
|---|---|---|---|---|
| கலாசால | கலாசால | கலாசாலா | கலாசால | கலாசாலை |
| காலு | கால் | காலு | காலு | கால் (உறுப்பு) |
| பக | பக | ஹகெ | பக | பகை |
| வேள | வேள | வேளெ | (வேள) | வேளை |
| கூலி | கூலி | கூலி | கூலி | கூலி |
| வலம், வலது | — | பல | வலத்து வலம் | வலம், வலது |
| இடம், இடது | எடம | எட | இடம் இடது | இடம் இடது |
| வீதி | வீதி | பீதி | — | வீதி |
| பச்ச | பச்ச | பச்செ | பச்ச | பச்சை |
| நீலம் | நீலமு | நீல | நீல(ம்) | நீலம் |
| ஊதா | ஊதா | ஊதா | ஊத | ஊதா |
| துத்தநாகம் | துத்து நாகமு | — | துத்து | துத்தநாகம் |
| கட்டு | கட்டு | — | கெட்டு | கட்டு |
| ஏர்ப்பாடு | ஏர்ப்பாட்லு | ஏர்ப்பாடு | ஏர்ப்பாடு | ஏற்பாடு |
| பணி (வேலை) | பனி | (பணி) | பணி | பணி |
| கர்ப்பூரம் | கற்பூரமு | கற்பூர | கர்ப்பூரம் | கற்பூரம் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| சில்லர | சில்லர | சில்லரெ | சில்லற | சில்லறை |
| தாட, தவட | தௌடு | தவடெ | தாடி | தாடை, தவடை |
| நறுக்கு | நருக்கு | — | நறுக்குக | நறுக்கு |
| நாடகம் | நாடகமு | நாடகா | நாடகம் | நாடகம் |
| நூலு (கயிறு) | நூலு | நூலு | நூலு, நூல் | நூல் |
| பண்டம் | பண்ட்ட | பண்ட்டா | பண்டகம் | பண்டம் |
| பருந்து | பந்த்துடு | ஹத்து | பருந்து | பருந்து |
| பட்ட | பட்டா | பட்டா | பட்டை | பட்டை |
| படி (அளவு) | படி | — | படி | படி |
| படு (தல்) | படு | படு | பெடுக | படு |
| பதக்கம் | பதக்கமு | பதக்கா | பதக்கம் | பதக்கம் |
| பாட்டு(பாடுதல்) | பாட்ட | ஹாடு | பாட்டு | பாட்டு |
| பாமரர் | பாமரு | பாமர | பாமரர் | பாமரர் |
| மினுக்கு | மினுக்கு | — | (மின்னுன்னு) | மினுக்கு |
| கத (காதை) | கத | கத | கத | கதை |

| | | | | |
|---|---|---|---|---|
| மெல்ல | மெல்ல | (மெத்த) | மெல்ல | மெல்ல |
| மேல், மேலு | மேலு | மேலே | மேலே | மேல்'(மேன்மை) |
| மயக்கம் | மயக்க | மயக்கெ | மயங்கு | மயக்கம் |
| மொக்கு | | | | மொக்கு |
| மொட்டு | மொகுமொக்குலு | மொக்கு | (மொட்டு) | மொட்டு |
| மொதல் | மொதலு | மொதலு | முதல் | முதல் |
| மொனெ | மொன | முனெ | முன | முனை |
| மொற | மொர | — | முற | முறை |
| மூட்டம் | மோடமு | மோட | (மூடுக) | மூட்டம் |
| வாசகம் | வாசகமு | வாசகா | (வாசகம்) | வாசகம் |
| அம்பு | அம்பு | அம்பா | அம்பு | அம்பு |
| அக்கர | அக்கர | அக்கரெ | அக்கர | அக்கறை |
| ஆட்டம் | ஆட்ட | ஆட்ட | (ஆட்டம்) | ஆட்டம் |
| உண்டு | உண்டு | உண்டா | உண்டு | உண்டு |
| (இருத்தல்) | | | | |
| இதோ | இதுகோ | இகோ | — | இதோ |
| அர (இடுப்பு) | அகரட | அரெ | அர | அரை |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| எணெ | எணெ | எணெ | இண | இணை |
| உண்ட<br>உருண்ட | உண்ட | உண்டெ | (உருண்டை) | உண்டை<br>உருண்டை |
| உருக்கு | உக்கு | உக்கு | உருக்கு | உருக்கு |
| ஊள | ஊள | ஊளு | (ஊளி - ஓளி) | ஊளை |
| எதிர்/ரே | எதுரு | எதுரு, எதுரிதே | (எதிர்) | எதிர் |
| ஏடாகூடம் | ஏடா கோடமு | — | ஏடாகூடம் | ஏடா கூடம் |
| ஆர்ப்பாட்டம் | ஆர்ப்பாட்டமு | ஆர்ப்பாட்ட | ஆர்ப்பாடம் | ஆர்ப்பாட்டம் |
| கிள்ளு | கில்லு | கிள்ளு | (நுள்ளுக) | கிள்ளு |
| சீறு | சீருட | சீரு | சீறுக | சீறு |
| கொடெ | கொடுகு | கொடெ | குட | குடை |
| கட்ட (தடி) | கட்டி | கட்ட | கட்ட | கட்டை |
| கோட்ட | கோட்ட | கோட்ட | கோட்ட | கோட்டை |
| குடி (கோயில்) | குடி | குடி | — | குடி |
| குற்றம் | குற்ற | குற்றா | குற்றம் | குற்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| சந்த | சந்த | சந்தெ | சந்த | சந்தை |
| சாவது | சாவடம் | — | சாகுக | சாவது |
| சாட்டை | ஜாட்டி | சாட்டா | சாட்ட | சாட்டை |
| சாட்டி | | | | |
| (சுடு) காடு (இடு) | காடு | இடிகாடு | சுடுகாடு | சுடுகாடு இடுகாடு |
| சுங்கம் | சுங்கம் | சுங்கா | சுங்கம் | சுங்கம் |
| திருகு | திருகு, திரிகி | திருகு | திருகு | திருகு |
| சூது | ஜூதமு | — | சூது | சூது |
| செருப்பு | (செப்புலு) | செப்பு | செரிப்பு | செருப்பு |
| சொத்து | சொத்து | சொத்து | சொத்து | சொத்து |
| சொம்பு | சொம்பு | சொம்பு | செம்பு | செம்பு (தவலை) |
| அருகத | அர்கத | அருகதா | அர்கத | அருகம் அருகதை |
| ஒண்டி | ஒன்ட்ரி | ஒண்டி, ஒண்டிக | | ஒண்டி |
| தளிரு | தலிரு | — | தளிரு | தளிர் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| தரகர்,தரகு | தாரகுடு, தரவு | தரகு | தரகு | தரகர், தரகு |
| தாமர | தாமர | தாமரெ | தாமர | தாமரை |
| திரும்பி | திருகி | திருகி | (திருப்புக) | திரும்பி |
| திட்டு (நீர்நடு) | திட்டு | திட்டு | திட்டு | திட்டு |
| தெர (அலை) | தெர | — | திர | திரை |
| தீரு | தீரு | — | தீர், தீரு | தீர் |
| தீவு | தீவி | தீவு | தீபு | தீவு |
| திருத்து | தித்து | தித்து | திருத்துக | திருத்து |
| தூவு | தாகு | தூவு | தூகு | தூவு |
| துக்கம் | துக்கமு | துக்க | துக்கம் | துக்கம் |
| துடுக்கு | துடுக்கு | துடுகு | — | துடுக்கு |
| தூரம் | தூரமு | தூர | தூரம் | தூரம் |
| தெரு,தெருவு | தெருவு | — | தெருவு | தெரு |
| வெள்ளி | வென்ட்டி | பெள்ளி | வெள்ளி | வெள்ளி |
| இரும்பு | இனுமு | — | இரும்பு | இரும்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| பித்தள | இத்தடி | ஹித்தளெ | பிச்சள, பித்தள | பித்தளை |
| தாமிரம் | தாம்ப்ரம் | தாம்ர | தாம்ரம் | தாமிரம் |
| ஓட்டம் தோல்வி | ஓட்டமி | ஓட்ட | ஓட்டம் | ஓட்டம் |
| ஓடச்செய் | ஓடிஞ்ச்சு | ஓடிசு | — | ஓடச்செய் |
| நம்பு,நம்மு | நம்மு | நம்மு | நம்பு | நம்பு |
| நஞ்ச | நஞ்ஜ | நஞ்சா | நஞ்ச | நன்செய் |
| நகு | நகுவு | நகு | — | நகு |
| நட | நடக | நடெ | நட | நடை |
| விதிர், வெதிர், (நடுங்கு) | பெதுரு | — | (விரக்கு) | விதிர், வெதிர் |
| நடு (மையம்) | நடுமு | நடுவே | நடு | நடு |
| நாளம் | நாளமு | நாள | நாளம் | நாளம் |
| நடு(தல்) நாட்டு | நாட்டு | நடு | நடுக | நடு, நாட்டு |
| நர | நெர | நரெ | நர (நரச்ச) | நரை |
| நகல் | நகலு | நகலு | நக்கல் | நகல் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| நாரு | நார | நாரெ | நார் | நார் |
| நி/நீழல் | நீட | நெரளு | நிழல் | நிழல் |
| நியமிச்சி | நியமிஞ்சி | நேமனே | (நியமிக்கல்) | நியமித்து |
| நிலை நிறுத்தல் | நில பெட்டம் | (நில நாட்டா) | நில நிறுத்துக | நிலை நிறுத்தல் |
| நிம்மதி | நெம்மதி | நெம்மதி | — | நிம்மதை |
| பட்டு (நூல்) | பட்டு | பட்டு | பட்டு | பட்டு |
| நெசவு | நேதபனி | நேசவா | நெய்யல் | நெசவு |
| நெட்டுயிர்ப்பு | நிட்டூர்ப்பு | நெட்டுசிரி | நெடுவீர்ப்பு | நெட்டுயிர்ப்பு |
| நேரே | நேருகா | நேரு | நேரிட்டு | நேரே |
| நஞ்சி | நலிசிபோவுட | — | நஞ்சி | நைந்து |
| போதல் | | | போகல் | போதல் |
| நோவு | நொப்பி | நோவு | — | நோய் |
| பருத்தி | பரத்தி | (பருத்தி) | பருத்தி | பருத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| மஞ்சு (பனி) | மஞ்சு | மஞ்சு | மஞ்ஞு | மஞ்சு |
| காச்சு | கால்ச்சு | காச்சி | காச்சுக | காய்ச்சு |
| கடம் (பானை) | கடவ, கடமு | கடா | கடம் | கடம் |
| பற்று | பட்டு | பட்டு | பற்று | பற்று |
| வெந், வென் (முதுகு) | வென், வெனு வென்னு | பென்னு | — | வெந், வென் |
| பிள்ளைகள் | பில்லலு | பில்லலு | பிள்ளேர் | பிள்ளைகள் |
| பி/புட்டு | பிட்டு | ஹிட்டு | பிட்டு | பிட்டு |
| பேடி | பேடி | பேடா | பேடி | பேடி |
| போக்கிரி | போக்கிரி | — | போக்கிரி | போக்கிலி |
| மாளிக | மாளிக | மாளிகெ | மாளிக | மாளிகை |
| மாமரம் | மாமிடி | மாமரா | மா | மாமரம் |
| மாதிரி | மாதிரி | மாதிரா | மாதிரி | மாதிரி |
| மீனு | மீனு | மீனு | மீன் | மீன் |
| முத்து | முத்யமு | முத்தா | முத்து | முத்து |
| முந்து | முந்து | முந்தே | — | முந்து |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| மூர்ச்ச | மூர்ச்ச | மூர்ச்ச | — | மூர்ச்சை |
| மூல | மூல | மூலெ | மூல | மூலை |
| வடம் | வடமு | வடா | வடம் | வடம் |
| வெல | வெல | பெலெ | வில | விலை |
| செலவு (செல்) | செலவு | — | செலவு சிலவு | செலவு |
| முழுங்கு | மிங்கு | நுங்கு | விழுங்குக | விழுங்கு |
| வேட்ட | வேட்ட | வேட்டெ | வேட்டை(யாடு) | வேட்டை |
| வெந்தயம் | மெந்துலி | மெந்திய | — | வெந்தயம் |
| வேப்ப மரம் | வேப்ப செட்டு | வேப்பாமரா | வேப்புமரம் | வேப்பமரம் |
| வேரு | வேரு | வேரு | வேரு | வேர் |
| பணியாள் | பணிவாடு | — | பணிக்காரன் | பணியாள் |
| கண்ணீர் | கண்ணீரு | — | கண்ணீர் | கண்ணீர் |
| காப்பாத்து | காப்பாடு | காப்பாடு | — | காப்பாற்று |
| தாலி | தாலி | தாளி | தாலி | தாலி |
| அல | அல | அலெ | அல | அலை |

| | | | | |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | எண்ணிக | எணிகே | எண்ணம் | எண்ணிக்கை |
| ஏற்றுமதி | எகுமதி | — | ஏற்றுமதி | ஏற்றுமதி |
| **ஏலம்** | **ஏலமு** | **ஏலம்** | — | ஏலம் |
| ஏலக்காய் | ஏலக்காய | ஏலக்காயி | ஏலக்காய | ஏலக்காய் |
| ஒப்பந்தம் | ஒப்பந்தமு | ஒப்பந்த | ஒப்பந்தம் | ஒப்பந்தம் |
| ஆன யான | ஏனுகு | ஆனெ | ஆன | ஆனை, யானை |
| தோப்பு | தோப்பு | தோப்பு | தோப்பு | தோப்பு |
| இரு | — | இரு | இரிக்குக | இரு |
| ஊட்டம் | — | ஊட்ட | (ஊட்டு) | ஊட்டம் |
| ஏத்தம் | ஏத்தம் | ஏத்த | ஏத்தம் | ஏற்றம் |
| கதவு | (தலுபு) | கத | கதகு | கதவு |
| பட்டம் | பட்டம் | பட்ட | பட்டம் | பட்டம் |
| பழம், பளம் | பலமு | பல | பழம் | பழம் |
| வக | வக | பகெ | வக | வகை |
| மரம் | — | மர | மரம் | மரம் |
| **சங்கு** | சங்கமு | சங்க்க | சங்கு | சங்கு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ஓடினார்கள் | — | ஓடிதரு | (ஓடுக) | ஓடினார்கள் |
| வந்து | — | பந்து | வந்து | வந்து |
| வா | — | பா | வருக | வா |
| வாசல் | — | பாகிலு | வாதில் | வாசல் |
| எறும்பு | — | இருவே | உறும்பு | எறும்பு |
| நாய், நாயி | — | நாயி | நாய | நாய் |
| கூட (உடன்) | — | கூட | கூட | கூட |
| கரடி | கரடி | கரடி | கரடி | கரடி |
| தும்பி | தும்பி | தும்பி | தும்பி | தும்பி |
| பேனு | பேலு, பேனு | ஹேனு | பேன் | பேன் |
| புழு, புளு | புறுகு | ஹுளெ | புழு | புழு |
| சூரி (கத்தி) | சூரி | சூரி | — | சூரி |
| கால் (காற்று) | காலி | காளி | காலு | கால், காற்று |
| கெட்டியான | கெட்டிகா | கட்டி | கட்டி | கெட்டியான |
| தப்பிச்சிக் கொள்ளு | தப்பிஞ்ச்சி | தப்பிசி கொள்ளு | — | தப்பித்துக் கொள் |

| | | | | |
|---|---|---|---|---|
| பெட்டி | பெட்ட | பெட்டிகெ | (கொட்ட) | பெட்டி |
| வை, திட்டு | திட்டேரி | பையு | வைக்குக | வை, திட்டு(தல்) |
| குருவி | — | குப்பி | குருவி | குருவி |
| பெண்ணு | — | ஹெண்ணு | பெண்ணு | பெண் |
| கன்னி | கன்ய | கன்யெ | கன்னி, கன்யெக | கன்னி |
| மஞ்சம் | மஞ்ச்சம் | மஞ்ச்ச | மஞ்சம் | மஞ்சம் |
| கம்பளி | கம்பளி | கம்பளி | கம்பளி | கம்பளி |
| சிற்பம் | சிப்பாலு | சில்ப | சில்பம் | சிற்பம் |
| சாம்பிராணி | சாம்பிராணி | சாம்பிராணி | சாம்பிராணி | சாம்பிராணி |
| தொட்டி | தொட்டி | தொட்டி | தொட்டி | தொட்டி |
| குடம் | குடமு | குட | (குடம்) | குடம் |
| தட்டு (கலம்) | தட்ட | தட்டெ | தட்டு | தட்டு |
| ஒல | — | ஒலெ | உல | உலை |
| புட்டி | புட்டி | புட்டி | — | புட்டி |
| ஆரம் | — | ஹார | ஹாரம் | ஆரம் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| எண்ணெ | (நூண) | எண்ணெ | எண்ண | எண்ணெய் |
| கல்லு | — | கல்லு | கல் | கல் |
| தடுக்கு | தடிகே | தடிகெ | — | தடுக்கு |
| வெத்தலெ (தாம்பூலப் பாக்கு) | தமல பாக்கு | விளெதல | வெத்தில | வெற்றிலை |
| கூட்டு (கறி) | — | கூட்டு | கூட்டான் | கூட்டு |
| வட | வட | வடெ | வட | வடை |
| பொங்கல் | பொங்கள் | பொங்கல் | பொங்குக | பொங்கல் |
| காரம் | காரம் | கார | காரம் | காரம் |
| வாழகா | — | பாளெகாயி | வாழக்க | வாழைக்காய் |
| வாழ | — | பாளெ | வாழ | வாழை |
| பாவக்கா பாகல்காய் | — | ஹாகலகாயி | பாவய்க்க | பாகல்காய் |
| மாங்கா | மாமிடிகாய | மாவினகாயி | மாங்ங | மாங்காய் |

| | | | | |
|---|---|---|---|---|
| மாம்பழம் | மாமிடிபண்டு | மாவின ஹண்ணு | மாம்பழம் | மாம்பழம் |
| அவரெகா | அவரகாயி | அவ்ரெகாயி | அவர | அவரைக்காய் |
| சுண்டகா | சுண்டகாய | சொண்ட்லி காயி | சுண்டங்கி | சுண்டைக்காய் |
| வாழதண்டு | — | பாளெதிண்டு | — | வாழைத்தண்டு |
| திராட்ச | த்ராக்ஷ | திராக்ஷ | — | திராட்சை |
| அன்னாசி | அனாச | அனானாஸ் | | அன்னாசி |
| — | — | (அன்னார்) | | |
| கொத்தமல்லி | கொத்திமீர | கொத்தம்பரி | கொத்தமல்லி | கொத்தமல்லி |
| சாத்துகுடி | — | சாத்குடி | சாத்துக்குடி | சாத்துக்குடி |
| வாழப்பூ | — | பாளெஹூ | வாழப்பூ | வாழைப்பூ |
| வாழப்பழம் | — | பாளெஹண்ணு | வாழப்பழம் | வாழைப்பழம் |
| ஈச்ச(மரம்)ஈந்து | ஈந்த்த பண்டு | ஈச்லெ | (ஈந்துபனை) | ஈச்சம், ஈந்து |
| ஆளு | — | ஆளு | ஆளு, ஆள் | ஆள் |
| ஆட்கள் | — | ஆளுகளு | ஆள்கள் | ஆட்கள் |
| முதியவர் | (முசிலானா) | முதுக | மூத்தவர் | முதியவர் |

| 1 | 2 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|
| முதியவள் | (முசிலி) | முதுகி | — | முதியவள் |
| எளியவர் | | | | |
| சின்னவர் | சின்னவாடு | எளெயவரு | இளையவர் | இளையவர் |
| சேவகர் | — | சேவகரு | சேவகர் | சேவகர் |
| கம்மாளர் | கம்சாவாடு கம்மரி | கம்மார | கைம்மார் கருவான் | கம்மாளர் |
| கூலிகாரர் | கூலிவாடு | கூலிகாரரு | கூலி | கூலிக்காரர் |
| சிற்பி | — | சிப்பிகளு | சில்பி | சிற்பி |
| நா, நாக்கு | நாலி/லு/க | நாலகெ | நாவு | நாக்கு, நா |
| பல்லு | பல்லு பன்னு | ஹல்லு | பல்லு | பல் |
| அங்கை உள்ளங்கை | | — | — | அங்கை |
| | | அங்கை | (உள்)அங்கை | உள்ளங்கை |
| உகிரு | கோரு | உகுரு | — | உகிர் |
| கொடலு | (கேவுலு) | கொரளு | குடல் | குடல் |

| | | | | |
|---|---|---|---|---|
| மூத்தரம் | — | மூத்ர | மூத்ரம் | மூத்திரம் |
| குண்டி | — | குண்டி | குண்டி | குண்டி |
| நரம்பு | நர | நர | ஞரம்பு | நரம்பு |
| கூந்தல் | — | கூதலு | கூந்தல் | கூந்தல் |
| கபாளம் | — | கபாள | கபாளம் | கபாளம் |
| வேதன | வேதனா | வேதனெ | வேதனம் | வேதனை |
| நெய்யகார் தறிநெய்பவர், | நேசவாலு நேசேதி | நேகார, நேய்கெயவரு | நெய்யத்துக் காரர் | நெய்யல்காரர் நெய்பவர் |
| முனிதல் | — | முனிசுவ | (முனி) | முனிதல் |
| கபடம், கபடு கவடு | கவுடு | கபடா | கபடம் | கபடம் |
| ஆம | ஆம | ஆமெ | ஆம | ஆமை |
| எலி | எலுக்க | இலி | எலி | எலி |
| எருமை | எனுமு | எம்ம | எரும | எருமை |
| கழுத | கடித | கத்தெ | கழுத | கழுதை |
| கருடன் | (கருட) | கருட | (கருடன்) | கருடன் |
| கிளி | சிலக | கிளி | கிளி | கிளி |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| குதிர | குர்ரமு | குதுர | குதிர | குதிரை |
| நரி | நக்க | நரி | நரி | நரி |
| நாயி | — | நாயி | நாய | நாய் |
| கொக்கு | கொங்க | கொக்கரெ | கொக்கு | கொக்கு |
| மொயல் | — | மொலெ | முயல் | முயல் |
| மொதலெ | — | மொசளெ | முதல | முதலை |
| திமிங்கலம் | — | திமிங்கில | திமிங்கலம் | திமிங்கலம் |
| மின்மினி | — | மினுகுள | (மின்னா மினுங்கு) | மின்மினி |
| வெளவால் | — | பாவலி | வவ்வால் | வெளவால் |
| சம்பளம் | — | சம்பள | சம்பளம் | சம்பளம் |
| அச்சு | (அச்சு) | அச்சு | (அச்சடி) | அச்சு |
| கத | கத | கதெ | கத | கதை |
| கவித | (கவிதா) | கவிதெ | கவி | கவிதை |
| காகிதம்,கடுதாசி | (காகித) | காகத | கடலாஸ் | காகிதம் |
| அஞ்சல் (தபால்) | — | அஞ்செ | அஞ்சல் | அஞ்சல் |

| | | | | |
|---|---|---|---|---|
| சாயங்காலம் | (சாய்ந்தரம்) | சாயங்கால | — | சாயுங்காலம் |
| இருளு, இருட்டு | — | இருள் | இருட்டு | இருள், இருட்டு |
| இன்று (இன்றைக்கு) | — | இந்து | இன்னு | இன்று |
| நாளை | — | நாளெ | நாளெ | நாளை |
| தினம் | தினாலு | தின | தினம் | தினம் |
| வாரம் | வாரம் | வார | வாரம் | வாரம் |
| மேலே (இடம்) | — | மேலே | மேலே | மேலே |
| கீழே, கீளே | — | கீளு, கீளகா | கீழே | கீழே |
| பக்கம் | பக்கண | பக்க | — | பக்கம் |
| உள், உள்ளே | (லோப்ப) | ஒளகே | உள் | உள்ளே உள், |
| என்ன | (ஏமி) | ஏனு | எந்து | என்ன |
| ஈ, தா, கொடு, | ஈயி | தா, கொடு | கொடு | தா, கொடு |
| கொடுங்கள் | இவ்வுமு | கொடிரி | | |
| போ(குதல்) | (பொய்யேதி) | ஹோகு | போகுக | போ |
| குடி(த்தல்) | — | குடி | குடி | குடி |
| தின்னு(தல்) | (தின்னடம்) | தின்னு | தின்னு | தின்னு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| அடி, கொட்டு | கொட்டு | படி | அடி | அடி |
| கடி | — | கடி | கடி | கடி |
| பிடி | (பிட்டேதி) | பிடி | பிடி | பிடி |
| விடு | உடி | பிடு | விடு | விடு |
| ஓது (படி) | — | ஓது | ஓதுக | ஓது |
| முரி | — | முரி | முரிக்குக | முரி |
| நோட்டம் | — | நோட்ட, நோடு | நோட்டம் | நோட்டம் |
| பாடு | பாடேதி | ஹாடு | பாடுக | பாடு |
| வினவுகேளு | வினேதி | கேளு | கேள்குக | கேள் |
| வாழுபளு | — | பாளு | வாழ்க | வாழ் |
| தடு | (தடுத்தி) | தடி | தடு | தடு |
| தட்டு (தல்) | (தடிகேதி) | தட்டு | தட்டு | தட்டு |
| பற | (பறுத்தி) | ஹாரு | பற | பற |
| வீழு, வீளு | — | பீளு | வீழ்க | வீழ் |
| தெர | தெரிச்சேதி | தெரெ | துற(க்குக) | திற |

| | | | | |
|---|---|---|---|---|
| துண்டு | துண்டு | துண்டு | துண்டம் | துண்டு |
| உழு, உளு | — | உளு | (உழவு) | உழு |
| குனி | — | குனி | குனியுக | குனி |
| தரி (உடு) | — | தரிசு | தரிக்குக | தரி |
| இழு, இளு | (ஈடி சேதி) | எளி | இழய்க்குக | இழு |
| முட்டு (தல்) | — | முட்டு | முட்டு | முட்டு |
| பிச்சி | (பிச்சேதி) | பிச்சு | — | பிய்த்தல் |
| தொடங்கு | — | தொடரு | துடங்ஙுக | தொடங்குக |
| துடக்கம் | — | | துடக்கம் | துடக்கம் |
| கடெ, | — | கடெ | கட | கடை |
| கெம்பு (நிறம்) | கெம்பு | கெம்ப்பு | | கெம்பு |
| கறுப்பு | (நலுபு) | கப்பு | கறுப்பு | கறுப்பு |
| குள்ளம் | — | குள்ளு | குள்ளம் | குள்ளம் |
| கெட்ட | — | கெட்ட | கெட்ட | கெட்ட |
| புளி | — | ஹுளி | புளி | புளி |
| சீரகம் | ஜீலகர | (ஜீ) சிரிகே | ஜீரகம் | சீரகம் |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| இஞ்சி | — | இஞ்சு | இச்சி | இஞ்சி |
| கடல பருப்பு | — | கடலபேளெ | கடலபரிப்பு | கடலைப் பருப்பு |
| சக்கர | சக்கெர | சக்கெர | சக்கர | சர்க்கரை |
| சீக்கா | (சீக்கா) | சிகெகாயி | சீக்காயி | சிகைக்காய் |
| மொள | (மொளச்கி) | மொள | முள | முளை |
| அடக்கம் | — | அடக | அடக்கம் | அடக்கம் |
| அடவி (காடு) | அடவி | அடவி | அடவி | அடவி |
| அடிசில், | | அடிகெ | அடுக்களை | அடிசில் |
| அடுக்கள | | | அடிகெய | அடுக்களை |
| ஆடு (விலங்கு) | — | ஆடு | ஆடு | ஆடு |
| ஆடு (தல்) | ஆட்ட | ஆடு | ஆடு | ஆடு |
| ஆண | (ஆக்ஞ) | ஆணெ | — | ஆணை |
| ஆயுள் ஆய்சு | ஆய்சு | ஆயு | ஆய்சு | ஆயுள் ஆயுசு |
| ஆலமரம் | — | ஆலதமரம் | ஆலமரம் | ஆலமரம் |
| ஆவி (நீராவி) | | ஆவி | ஆவி | ஆவி |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆச | ஆச | ஆசெ | ஆச | ஆசை |
| இன்பம் | — | இம்ப்பு | இம்பம் | இன்பம் |
| எதிர்ப்பு எதிர் | (எதிர்ப்பு) | இதிரிசு இதிரு | எதிர் | எதிர்ப்பு, எதிர் |
| இறுக்கு (தல்) | — | இருகு | இறுக்குக | இறுக்கு |
| இழி, இளி, இழிசு, இளிவு | — | இளிசு | (இழிக) | இழி, இழிவு இழிசு |
| ஈனு (தல்) | (ஈனுந்) | ஈனு | — | ஈனு |
| உடு (விண்மீன்) | | உடு | உடு | உடு |
| உண்ணு | — | உண்ணு | (உளணு) | உண் |
| உதிர் (தல்) | — | உதிரு | உதிருக | உதிர் |
| உருளுபுரளு | பொல்லு | உருள் | உருளுக | உருள், புரள் |
| ஒலி | — | உலி | ஒலி | ஒலி |
| உ/லுக்கு | உலக | உலகு | (குலுக்குக) | உலுக்கு |
| ஊதல் (வீங்கல்) | — | ஊத | ஊதுக | ஊது |
| ஏக்கர் | ஏக்கர் | எகரே | ஏக்கர் | ஏக்கர் |
| எதிராளி | — | எதுராளி | எதிராளி | எதிராளி |
| எளசு | — | எளசு | இளயது | இளசு |

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| எளெய | | எளெய | இளைய | இளைய |
| எழ, எள (நூல்) | | | | |
| இழை | — | எளெ | இழ | இழை |
| ஏணி | — | ஏணி | ஏணி | ஏணி |
| குங்குமம் | குங்க்மம் | குங்கும | குங்குமம் | குங்குமம் |
| தந்தி | தந்தி | தந்தி | கம்பி | தந்தி |
| ஏமாற்று | ஏமமாஞ்தேதி<br>(ஏமாச்சினாரு) | ஏமாரிகே | — | ஏமாற்று |
| ஏரி | — | ஏரி | ஏரி | ஏரி |
| எழு, எளு | — | ஏளு | எழு | எழு |
| நுகர்தல் | நுகருக | நுகர்தல் |
| நுணாமரம் | நூணமரம் | நுணாமரம் |
| நெஞ்சு | நெஞ்சு | நெஞ்சு |
| நெல்லி | நெல்லி | நெல்லி |
| நெல்லு | நெல்லு | நெல் |
| நொச்சி | நொச்சி | நொச்சி |
| நொண்டி | நொண்டி | நொண்டி |
| பகர்ப்பு(பெயர்ப்பு) | பகர்ப்பு | பகர்ப்பு |
| பகட்டு | பகிட்டு | பகட்டு |
| பகுதி | பகுதி | பகுதி |
| பச்சகறி | பச்சக்கறி | பச்சைக்கறி |
| பஞ்சம் | பஞ்ஞம் | பஞ்சம் |
| பஞ்சி | பஞ்ஞி | பஞ்சு |
| பட | பட | படை |
| பட்டாளம் | பட்டாளம் | பட்டாளம் |
| படிகாரம் | படிகாரம் | படிகாரம் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பட்டினி | பட்டினி | பட்டினி |
| படிப்பு | படிப்பு | படிப்பு |
| பண்டகசால | பண்டகசால | பண்டகசாலை |
| பண்டு | பண்டு | பண்டு |
| பாடுபடுதல் | பாடுபெடுக | பாடுபடுதல் |
| பான | பான | பானை |
| பாதகம் | பாதகம் | பாதகம் |
| பாதாளம் | பாதாளம் | பாதாளம் |
| பாணம் | பானம் | பானம் |
| பாமரம் | பாமரம் | பாய்மரம் |
| பார்த்தல் | பார்க்குக | பார்த்தல் |
| பாள | பாள | பாளை |
| பிடித்தம் | பிடித்தம் | பிடித்தம் |
| பிடிவாதம் | பிடிவாதம் | பிடிவாதம் |
| பிணக்கம் | பிணக்கம் | பிணக்கம் |
| பின்கால் | பின்கால் | பின்கால் |
| பிற்காலம் | பின்காலம் | பிற்காலம் |
| பின்னே | பின்னீடு | (பிறகு)பின்னே |
| பிரிதல் | பிரியுக | பிரிதல் |
| பிரிவு | பிரிவு | பிரிவு |
| பிழ | பிழ | பிழை |
| பிழைத்து (பிழை செய்து) | பிழச்சு | பிழைத்து |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பிறப்பு | பிறப்பு | பிறப்பு |
| பீச்சுதல் | பீச்சுக | பீச்சுதல் |
| பீனிசம் (மூக்கடை நோய்) | பீனசம் | பீனிசம் |
| பீரங்கி | பீரங்கி | பீரங்கி |
| பீள | பீள | பீளை |
| புக | புக | புகை |
| புகழ்/ள் | புகள் | புகழ் |
| புன்சிரிப்பு | புஞ்சிரி | புன்சிரிப்பு |
| புகயில | புகயில | புகையிலை |
| புண்ணு | புண்ணு | புண் |
| புதிய | புதிய | புதிய |
| புது | புது | புது |
| புருவம் | புரிகம் | புருவம் |
| புலம்புதல் | புலம்புக | புலம்புதல் |
| புல்லு | புல்லு | புல் |
| புலரச்ச (புலரும் போது) | புலர்ச்ச | புலரும்போது |
| புல்ல மருது | புல்லமருது | புல்லைமருது |
| புல்லாங்குழல் | புல்லாங்குழல் | புல்லாங்குழல் |
| குழல் | குழல் | குழல் |
| புளகம் | புளகம் | புளகம் |
| புழுங்கல் (அவித்தல்) | புழுங்ஙக | புழுங்கல் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பிறகு | புரகெ | பிறகு |
| புறம் (முதுகு) | புறம் | புறம் |
| புறம் (வெளி) | புறம் | புறம் |
| புற்று | புற்று | புற்று |
| பூத்தல் | பூக்கல் | பூத்தல் |
| பூச (பூனை) | பூச்ச | பூசை |
| பூத்தொட்டி | பூச்சட்டி | பூத்தொட்டி |
| பூட்டு | பூட்டு | பூட்டு |
| பெருகுதல் | பெருகுக | பெருகுதல் |
| பெருங்காயம் | பெருங்காயம் | பெருங்காயம் |
| பெரும | பெரும் | பெருமை |
| பேரேடு | பேரேடு | பேரேடு |
| பேசு | பேசு | பேசு |
| பையல் | பைதல் | பையல் |
| பசிதாகம் | பைதாஹம் | பசிதாகம் |
| தாகம் | தாஹம் | தாகம் |
| பொங்குதல் | பொங்ஙுக | பொங்குதல் |
| பொடி | பொடி | பொடி |
| சிரித்தல் | சிரிக்குக | சிரித்தல் |
| பொதி (சுமை) | பொதி | பொதி |
| பொது | பொது | பொது |
| பொந்து | பொந்து | பொந்து |
| பொத்துதல் | பொத்துக | பொத்துதல் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பொன்னாந் | பொன்னாந் | பொன்னாந் |
| தகர | தக்கர | தகரை |
| பொரித்தல் | பொரிக்குக | பொரித்தல் |
| பொருதல் | பொருதுக | பொருதல் |
| பொருத்தம் | பொருத்தம் | பொருத்தம் |
| பொருந்துதல் | பொருந்துக | பொருந்துதல் |
| பொல்லாப்பு | பொல்லாப்பு | பொல்லாப்பு |
| போக்கு | போக்கு | போக்கு |
| போராடு | போராடு | போராடு |
| போராத<br>போதாத | போராத்த | போதாத |
| பொராம,போராம | போராய்ம | பொறாமை |
| போரு | போரு | போர் |
| பாகம் | பாகம் | பாகம் |
| பாரம் | பாரம் | பாரம் |
| மகரந்தம் | மகரந்தம் | மகரந்தம் |
| மங்கு | மங்ஙு | மங்கு |
| மச்சு | மச்சு | மச்சு |
| மடக்கு | மடக்குக | மடக்கு |
| மடங்கு | மடங்குக | மடங்கு |
| மண்ணு | மண்ணு | மண் |
| மணல் | மணல் | மணல் |
| மணம் | மணம் | மணம் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| மணி | மணி | மணி |
| மண்ணெண்ண | மண்ணெண்ண | மண்ணெண்ணெய் |
| மதி (நிலா) | மதி | மதி |
| மதித்தல் | மதிக்குக | மதித்தல் |
| மது | மது | மது |
| மான் | மான் | மான் |
| மானம் | மானம் | மானம் |
| மாசம் | மாசம் | மாதம் |
| மாற்றம் | மாற்றம் | மாற்றம் |
| மிச்சம் | மிச்சம் | மிச்சம் |
| மின்னல் | மின்னல் | மின்னல் |
| மினக்கெடுதல் | மினக்கெடுக | மினுக்கெடுதல் |
| மிரட்டு | மிரட்டு | மிரட்டு |
| மீது | மீதே | மீது |
| முகப்பு | முகப்பு | முகப்பு |
| முகில் | முகில் | முகில் |
| முக்கு (மூலை) | முக்கு | முக்கு |
| முதிர்தல் | முதிருக | முதிர்தல் |
| மலம் | மலம் | மலம் |
| மூப்பன் (மூப்பு) | மூப்பன் | மூப்பன் |
| முல | முல | முலை |
| மிருது | ம்ருது | மிருது |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| மித | மெதி | மித |
| மெழுகுதிரி | மெழுகுதிரி | மெழுகுதிரி |
| மேல்தரம் | மேத்தரம் | மேல்தரம் |
| மேதாவி | மேதாவி | மேதாவி |
| மேச | மேச | மேசை |
| மொத்துதல் | மொத்துக | மொத்துதல் |
| மோதிரம் | மோதிரம் | மோதிரம் |
| மோசம் | மோசம் | மோசம் |
| வஞ்சன | வஞ்சன | வஞ்சனை |
| வடக்கு | வடக்கு | வடக்கு |
| வலிய | வலிய | வலிய |
| வசப்படுத்தல் | வசப்படுக | வசப்படுத்தல் |
| வழி | வழி | வழி |
| வாக்குதத்தம் (வாக்குறுதி) | வாக்தத்தம் | வாக்குத்தத்தம் |
| வான்கோழி | வான்கோழி | வான்கோழி |
| விற்பன | வில்பன | விற்பனை |
| விரி | விரி | விரி |
| விரிப்பு (படுக்கை) | விரிப்பு | விரிப்பு |
| விளவு | விள | விளைவு |
| விளக்கு | விளக்கு | விளக்கு |
| விளருதல் (வெளுத்தல்) | விளருக | விளர்தல் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| விறகு | விறகு | விறகு |
| வீங்கல் | வீங்ஙல் | வீங்கல் |
| வீடு | வீடு | வீடு |
| வய், வை | வய்க்கு | வை |
| வெளி | வெளி | வெளி (யே) |
| வெளிச்சம் | வெளிச்சம் | வெளிச்சம் |
| வெள்ளம் | வெள்ளம் | வெள்ளம் |
| வேண்டாத | வேண்டாத்த | வேண்டாத |
| (வேணும்)வேண்டிய | வேணும் | வேண்டிய |
| வண்ணம் | வண்ணம் | வண்ணம் |
| வேல | வேல | வேலை |
| வேறு, வேறே | வேறே | வேறே |
| வைக்கோல் | வைக்கோல் | வைக்கோல் |
| வைரம் (பகை) | வைரம் | வைரம் |
| நேரம் | நேரம் | நேரம் |
| சாந்தம் | சாந்தம் | சாந்தம் |
| சோகம் | சோகம் | சோகம் |
| சில | சில | சிலை |
| சிசு | சிசு | சிசு |
| சீதம் | சீதம் | சீதம் |
| அடிவாரம் | அடிவாரம் | அடிவாரம் |
| அணி | அணி | அணி |
| அணு | அணு | அணு |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| அணில் | அண்ணால் | அணில் |
| அதனால் | அதினால் | அதனால் |
| அற்புதம் | அத்புதம் | அற்புதம் |
| அனுமதி | அனுவதி | அனுமதி |
| அப்புறம் | அப்புரம் | அப்புறம் |
| அரண | அரண | அரணை |
| அளி(வண்டு) | அளி | அளி |
| அறிவு | அறிவு | அறிவு |
| அழித்தல் அவிழ்த்தல் | அழிக்குக | அழித்தல் |
| ஆகக்கூடி | ஆகெக்கூடி | ஆகக்கூடி |
| ஆடுதின்னாப்பால | ஆடுதின்னாப்பால | ஆடுதிண்ணாப் பாளை |
| ஆட்டுக்கல் | ஆட்டுக்கல் | ஆட்டுக்கல் |
| ஆடம்பரம் | ஆடம்பரம் | ஆடம்பரம் |
| கூவியது | கூவி | கூவியது |
| வீசியது | வீசி | வீசியது |
| பரவியது | பரன்று | பரவியது |
| கழுவினேன் | கழுகி | கழுவினேன் |
| ஒரு | ஒரு | ஒரு |
| குஞ்சி | குஞ்ஞி | குஞ்சி |
| சிரிச்ச | சிரிச்ச | சிரித்த |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| கொண்டு | கொண்டு | கொண்டு |
| போனாங்க | போயி | போனார்கள் |
| நன்றா, நல்லா | நன்னாயி | நன்றாக |
| பழய காலத்து | பழய காலத்து | பழையகாலத்து |
| முந்திரி | முந்திரி | முந்திரி |
| குல | குல | குலை |
| கண்டு (பார்த்து) | கண்டு | கண்டு |
| சாடி (அடித்து) | சாடி | சாடி |
| குதிச்சுது | குதிச்சு | குதித்தது |
| என்ன கொண்டு | என்னக் கொண்டு | என்னைக் கொண்டு |
| கேட்டு(காதால்) | கேட்டு | கேட்டு |
| வில்லு | வில்லு | வில் |
| வளைக்க • | வளய்க்கான் | வளைக்க |
| என்றும் | எந்நும் | என்றும் |
| பத்தி (பற்றி) | பற்றி | பற்றி |
| வேணும் | வேணம் | வேண்டும் |
| கிராமம் | க்ராமம் | கிராமம் |
| வந்து | வந்நு | வந்து |
| வசந்தம் | வசந்தம் | வசந்தம் |
| வேனில் | வேனல் | வேனில் |
| இலஉதிர்காலம் | இலவீழ் காலம் | இலையுதிர் காலம் |
| வீழ் | வீழ் | வீழ் |

| 1 | 2 | 2 |
|---|---|---|
| கார் (மேகம்) | கார் | கார் |
| கார்மேகம் | கார்மேகம் | கார்மேகம் |
| காற்று | காற்று | காற்று |
| மின்னல் | மின்னல் | மின்னல் |
| இடி | இடி | இடி |
| கொடும்கொடுமை | கொடும் | கொடும் |
| வெயில் | வெயில் | வெயில் |
| குலுக்கம் | குலுக்கம் | குலுக்கம் |
| கன்னி | கன்னி | கன்னி |
| ஆண்டு | ஆண்டு | ஆண்டு |
| ஞாயிரு | ஞாயர் | ஞாயிறு |
| திங்கள் | திங்கள் | திங்கள் |
| செவ்வா | சொவ்வ | செவ்வாய் |
| புதன் | புதன் | புதன் |
| வியாழம் | வ்யாழம் | வியாழன் |
| வெள்ளி | வெள்ளி | வெள்ளி |
| சனி | சனி | சனி |
| திக்கு | திக்கு | திக்கு |
| கிழக்கு | கிழக்கு | கிழக்கு |
| தெக்கு | தெக்கு | தெற்கு |
| வடக்கு | வடக்கு | வடக்கு |
| வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |
| அகத்து(உள்) | அகத்து | அகத்து |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பந்தம் (உறவு) | பந்தம் | பந்தம் |
| மருமகன் | மருமகன் | மருமகன் |
| முற்றம் | முற்றம் | முற்றம் |
| திண்ண | திண்ண | திண்ணை |
| படிக்கல் | படிக்கல் | படிக்கல் |
| ஜன்னல் | ஜன்னல் | ஜன்னல் |
| கரி | கரி | கரி |
| கலம், கலயம் | கலம் | கலம், கலயம் |
| சால | சால | சாலை |
| முதலாளி | முதலாளி | முதலாளி |
| மாவு | மாவு | மாவு |
| பச்சக்கறி | பச்சக்கறி | பச்சைக்கறி |
| மாமிசம் | மாம்சம் | மாமிசம் |
| மோரு | மோரு | மோர் |
| முளகா | முளகு | மிளகாய் |
| மிளகு | குருமுளகு | மிளகு |
| நல்லெண்ணெய் | எள்ளெண்ணெ | நல்லெண்ணெய் |
| ஆமணக்கு எண்ண | ஆவணக்கெண்ண | ஆமணக்கெண்ணெய் |
| ஆப்பிள் | ஆப்பிள் | ஆப்பிள் |
| வாங்கிக்க | வாங்ஙிக்கான் | வாங்க |
| பிற(த்தல்) | பிற | பிற |
| அதுகொண்டு | அதுகொண்டு | அதுகொண்டு |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| சமயம் | சமயம் | சமயம் |
| நொடி | நொடி | நொடி |
| கணம் | ஷணம் | கணம் |
| மணி | மணிக்கூர் | மணி . |
| வைகரை | வைகுன்னேரம் | வைகறை |
| அந்தி | அந்தி | அந்தி |
| தென்கிழக்கு | தெக்குக்கிழக்கு | தென்கிழக்கு |
| முன்னால் | மும்பில் | முன்னால் |
| பின்னால் | பின்னில் | பின்னால் |
| அருகில் | அரிகில் | அருகில் |
| பப்பாளி | பப்பாய | பப்பாளி |
| நாவல்பழம் | ஞாவல்பழம் | நாவல்பழம் |
| வண்ணான் | மண்ணான் | வண்ணான் |
| ஆசாரி | ஆசாரி | ஆசாரி |
| கொல்லன் | கொல்லன் | கொல்லன் |
| தட்டான் | தட்டான் | தட்டான் |
| கைத்தொழிலாளி | கைத்தொழிலாளி | கைத்தொழிலாளி |
| தோணிக்காரன் | தோணிக்காரன் | தோணிக்காரன் |
| கணக்குபிள்ள | கணக்குபிள்ள | கணக்குப்பிள்ளை |
| கிராம அதிகாரி | க்ராமாதிகாரி | கிராமஅதிகாரி |
| கவி (ஞன்) | கவி | கவிஞன் |
| சித்ரகாரன் | சித்ரகாரன் | சித்திரக்காரன் |
| களித்தல் | களிக்குக | களித்தல் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| குளித்தல் | குளிக்குக. | குளித்தல் |
| நோக்குதல் | நோக்குக | நோக்குதல் |
| வாங்கு | வாங்நு | வாங்கு |
| கொல்லு | கொல்லு | கொல் |
| வில், விற்றல் | வில்க்குக | வில் |
| அடக்கு அடைத்தல் | அடக்குக | அடக்கு |
| ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் |
| தைரியம் | தைர்யம் | தைரியம் |
| விரோதம் | விரோதம் | விரோதம் |
| கர (அழு) | கர | கரை |
| நாணம் | நாணம் | நாணம் |
| நிறம் | நிறம் | நிறம் |
| வெளுப்பு | வெளுப்பு | வெளுப்பு |
| சிவப்பு | சுவப்பு | சிவப்பு |
| வெங்கலம் | வெங்கலம் | வெண்கலம் |
| மயில் | மயில் | மயில் |
| பொறா | ப்றூவு | புறா |
| அன்னம் | அன்னம் | அன்னம் |
| ஆட்டின் | ஆட்டின் | ஆட்டின் |
| குட்டியெ | குட்டியெ | குட்டியை |
| தின்னுச்சி | திந்நு | தின்றது |
| மீசகாரன் | மீசகாரன் | மீசைக்காரன் |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| காட | காட | காடை |
| கருங்குருவி | கரும்குருவி | கரும்குருவி |
| மிருகம் | ம்ருகம் | மிருகம் |
| நரி | நரி | நரி |
| குரங்கு | குரங்ஙு | குரங்கு |
| ஒட்டகம் | ஒட்டகம் | ஒட்டகம் |
| தவள | தவள | தவளை |
| வரட்டா | வரட்டே | வரவா(வரட்டா) |
| இதுவர | இதுவரெ | இதுவரை |
| மற்றவர் | மற்றார் | மற்றவர் |
| நமக்கு | நமுக்கு | நமக்கு |
| என்றொரு | என்னொரு | என்றொரு |
| கேட்டிருத்தல் | கேட்டிரிக்கும் | கேட்டிரு |
| பந்தி(வரிசை) | பந்தி | பந்தி |
| ஆனால் | என்னால் | ஆனால் |
| பின்னே | பின்னே | பின்னே |
| பின்னிட்டு | பின்னீடு | பின்னிட்டு |
| செய்து | செய்து | செய்து |
| நேடினர் | நேடி | நேடினர் |
| கொன்னு | கொந்நு | கொன்று |
| குட்டி | குட்டி | குட்டி |
| சேனாதிபதி | சேனாதிபதி | சேனாதிபதி |
| என்பது | என்னது | என்பது |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| தலைவர்கள் | தலவன்மார் | தலைவர்கள் |
| அலை(தல்) | அலை | அலை |
| தை(த்தல்) | தய் | தை |
| குறை(தல்) | குற | குறை |
| நிறை | நிற | நிறை(தல்) |
| களை( தல்) | கள | களை |
| அறி( தல் ) | அறி | அறி |
| முடியும் | முடியும் | முடியும் |
| வரை(தல்) | வர | வரை |
| பலித்(தல்) | பலி | பலி |
| வலித்தல் (இழுத்தல்) | வலி | வலி |
| கிட்டு(தல்) | கிட்டு | கிட்டு |
| எழுது | எழுது | எழுது |
| விதை | விதை | விதை |
| வளர் | வளர் | வளர் |
| நியமி | நியமி | நியமி |
| மாறு( தல்) | மாறு | மாறு |
| புறப்படு | புறப்பெடு | புறப்படு |
| விழும் வீழும் | வீழும் | விழும் |
| அறிவி | அறியி | அறிவி |
| சதி (ஏமாற்று) | சதி | சதி |
| பெட(பெட்டை) | பிட | பிட |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| குரு(ஆசான்) | குரு | குரு |
| அயலார் | அயல்க்கார் | அயலார் |
| விநயம்(பணிவு) | விநயம் | விநயம் |
| சாதாரணம் | சாதாரணம் | சாதாரணம் |
| எதிரேற்றல் | எதிரேல்க்குக | எதிரேற்றல் |
| வழிப்போக்கன் | வழிப்போக்கன் | வழிப்போக்கன் |
| மலயாளம் | மலயாளம் | மலையாளம் |
| அடுத்து(அருகில்) | அடுத்து | அடுத்து |
| இறங்கு | இறங்ஙு | இறங்கு |
| துள்ளி | தூள்ளி | துள்ளி |
| மேயும் | மேயும் | மேயும் |
| குறைந்த நேரம் | குறச்சு நேரம் | குறைந்த நேரம் |
| மடங்கு | மடங்ஙு | மடங்கு |
| உட | உடெ | உடைய |
| சுடு (சூடான) | சுடு | சுடு |
| இல்ல | இல்ல | இல்லை |
| அடுத்து சென்றது | அடுத்து செந்நு | அடுத்துச் சென்றது |
| ஆக்கிக் கொள்ளல் | ஆக்கி | ஆக்கிக் கொள்ளல் |
| நேரம் போக்கு | நேரம் போக்கு | நேரம் போக்கு |
| அதிகம் | அதிகம் | அதிகம் |
| சகோதரன் | சகோதரன் | சகோதரன் |
| அனுசரிச்சி | அனுசரிச்சு | அனுசரித்து |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| யோக்யன் | யோக்யன் | யோக்கியன் |
| அபராதம் | அபராதம் | அபராதம் |
| உரை(சொல்லு) | உரி | உரை |
| மீண்டும் | வீண்டும் | மீண்டும் |
| காரணம் | காரணம் | காரணம் |
| போலெ | போலெ | போல |
| பலதிலும் | பலதிலும் | பலவற்றிலும் |
| வங்காளம் | பங்காள் | வங்காளம் |
| கல்கத்தா | கல்கத்த | கல்கத்தா |
| மகா | மகா | மகா |
| காளி | காளி | காளி |
| உண்டாயிருந்தன | உண்டாயிருன்நு | உண்டாயிருந்தன |
| நம்மபோலெ | நம்மப்போலெ | நம்மைப்போல |
| ஒட்டுக்கும் (முழுவதும்) | ஒட்டுக்கு | ஒட்டுக்கும் |
| (அது)தொட்டு (அது முதல்) | தொட்டு | தொட்டு |
| கூட்டத்தார் | கூட்டர் | கூட்டத்தார் |
| துடங்கியவர் | துடங்ஙியவர் | துடங்கியவர் |
| நல்லவர் | நல்லவர் | நல்லவர் |
| இனியும் | இனியும் | இனியும் |
| தாருங்கள் | தரூ | தாருங்கள் |
| வேண்டாம் | வேண்ட | வேண்டா |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ஒண்ணும் வேண்டாம் | ஒந்நும் வேண்ட | ஒன்றும்வேண்டா |
| அரிசி | அரி | அரிசி |

இனி, துளு, பிராஹுயி, பார்ஜி ஆகிய மொழிச் சொற்கள் சிலவற்றைக் காண்போம்: –

| பே.த. | எ.துளு | தொ.தி. |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| அண்ணன், அண்ணா | அண்ணே | அண்ணன், அண்ணா |
| அக்கா | அக்கா | அக்கா(ள்) |
| தங்க | தங்காதிரி | தங்கை |
| நான் | யேன் | நான் |
| அது | அவு | அது |
| ஒண்ணு | ஒஞ்சி | ஒன்று |
| ரெண்டு, ரெட்டை | ரட்டு | இரண்டு, இரட்டை |
| மூணு | மூஜி | மூன்று |
| நால், நாலு | நால் | நால், நாலு, நான்கு |
| ஐந்து | ஐன் | ஐந்து |
| ஆரு | ஆர் | ஆறு |

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ஏழு | ஏன் | ஏழ்,ஏழு |
| எட்டு,எண் | எண்மோ | எட்டு,எண் |
| ஒம்பது | ஒர்ம்பொ | ஒன்பது |
| பத்து | பத் | பத்து |
| கால்(எண்) | கால் | கால் |
| தலெ | தரெ | தலை |
| கை | கை | கை |
| கால்(உறுப்பு) | கார் | கால் |
| கண்,கண்ணு | கண் | கண் |
| செவி | கெவி | செவி |
| மூக்கு | மூங்கு | மூக்கு |
| பல்,பல்லு | பரு | பல் |
| கால்(காற்று) | காலி | கால் |
| வானம் | பானொ | வானம் |
| தின் | தின் | தின்,தின்னு |
| உண் | உண் | உண் |

| பே.த. | எ.பிராஹூயி | சு.பார்ஜி | தொல்.தி |
|---|---|---|---|
| ஒரு,ஒன்று | ஒரத் | ஒகுத் | ஒரு,ஒன்று |
| இரு,இரண்டு | இரத் | இரடு | இரண்டு |
| மூணு,மூ | மூகித் | மூது | மூன்று |

# சொல் மாற்றம்–சொற்சுவை ஆய்வு

மேலுள்ள நீண்ட சொல் அட்டவணையைக் கொண்டு அறிய வேண்டுவன வருமாறு:-

**எழுத்து மாற்றங்கள் :**

பேச்சுத் தமிழும் எழுத்துத் தெலுங்கும் எழுத்துக் கன்னடமும் எழுத்து மலையாளமும் கிட்டத்தட்ட ஒன்றாயிருக்க, எழுத்துத் தமிழ் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இதற்கு, மேலுள்ள இரண்டாயிரம் எடுத்துக் காட்டுகளிலிருந்து ஒரே ஒரு எடுத்துக் காட்டை மட்டும் மீண்டும் நினைவு செய்துகொள்வோம்: – எழுத்துத் தமிழ் 'தலை' என்பது. இது பேச்சுத்தமிழில் 'தல-தலெ' என்றும், எழுத்துத் தெலுங்கில் 'தல' என்றும், எழுத்துக் கன்னடத்தில் 'தலெ' என்றும், எழுத்து மலையாளத்தில் 'தல' என்றும் வழங்கப் படுகிறது. 'தலை' என்னும் எழுத்துத் தமிழ் தவிர, பேச்சுத் தமிழ், எழுத்துத் தெலுங்கு, எழுத்துக் கன்னடம், எழுத்து மலையாளம் ஆகிய நான்கும் ஏறக்குறைய ஒரே மாதிரியா யிருக்கக் காண்கிறோம். 'தல – தலெ' என்பன கோச்சைத் தமிழ்; ஆனால், இவை, தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றிற்கு இலக்கண – எழுத்து வடிவமாகும். இதிலிருந்து தெரிவதாவது, எழுத்துத் தமிழின் ஈற்று 'ஐ' என்பது, மற்ற நான்கிலும் 'அ' அல்லது 'எ' ஆக மாறுகிறது என்பதாம். துளு மொழியிலும் இந்த மாற்றம் உண்டு. துளுவில் 'தலை' என்பது 'தரெ' எனப்படுகிறது. இதில், 'ஐ' என்பது 'எ' ஆனதோடு, லகரம் ரகரமாகத் திரிந்துள்ளது.

இவ்வாறு திராவிட மொழிகட்கிடையே உள்ள சில திரிபு மாற்றங்களை மேலுள்ள அட்டவணையிலிருந்து விதந்து எடுத்துக் காண்பாம்: -

**தெலுங்கு:**

தமிழ் ழகரம் தெலுங்கில் டகரம் ஆகிறது. எடுத்துக் காட்டுகள்: கூழு=கூடு. ஏழு=ஏடு. கோழி=கோடி. தமிழ் றகரம் தெலுங்கில் ரகரம் ஆதல். காட்டுகள்:- ஆறு=ஆரு. நூறு= நூரு. சாறு=சாரு. தமிழ்ணகரம் தெலுங்கில்னகரம் ஆகிறது. காட்டுகள்: சுண்ணம்=சுன்னம். கண்ணு=கன்னு. அண்ணன்=அன்ன. வெண்ணெய்=வென்ன. அணைக் கட்டு=அனக் கட்ட. தமிழில் சில சொற்களின் இறுதியில் 'உ' சாரியை வரும் அமைப்பு, தெலுங்கில் மிகுதியாக உண்டு. தீர் =தீரு=தீரு. வேர்=வேரு=வேரு, பேர்=பேரு =பேரு. தெரு=தெருவு - தெருவு.

**குனி—கினு:**

இங்கே சுவையான செய்தி ஒன்றைச் சொல்ல வேண் டும். யான் திருவையாற்றில் உள்ள அரசர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது நடந்தது இது. "தெரிந்து கொண்டு' என்பதைத் 'தெரிந்துகினு' என்றும் 'படுத் துக்கொண்டு' என்பதைப் 'படுத்து கினு' என்றும் 'கொண்டு' என்பதைக் 'கினு' என்னும் சொல்லால் குறிப்பிட்டுப் பேசினேன். இது வடதமிழ் நாட்டு வழக்கு. வேறு சில இடங்களிலிருந்து வந்திருந்த மாணாக்கர்கள், தெரிந்து கிட்டு, படுத்துகிட்டு எனக் 'கொண்டு' என்பதற் குப் பதில் 'கிட்டு' என்பதைப் பயன் படுத்தினார்கள். அவர் கள் யான் 'கினு' போட்டுப் பேசியதைக் கிண்டல் செய்து சிரித்தார்கள். ஆனால் தெலுங்கில் 'கொண்டு' என்பதற் குக் 'குனி' என்பது எழுத்து வழக்கில் பயன்படுத்தப்படு

வதை அறிந்து மகிழ்கின்றேன்.'கினு' என்பதற்கும் 'குனி' என்பதற்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கிறதல்லவா? தெலுங்கிலிருந்து சில எடுத்துக்காட்டுகள் வருமாறு: -

| தெலுங்கு | பேச்சுத்தமிழ் | எழுத்துத்தமிழ் |
|---|---|---|
| தெலுஸீகுனி | தெரீஞ்சி கினு | தெரிந்துகொண்டு |
| படுகுனி | படுத்து கினு | படுத்துக்கொண்டு |
| நேர்ச்சுகுனி | கத்து கினு | கற்றுக்கொண்டு |
| தீசு குனி | அழைச்சிகினு | அழைத்துக்கொண்டு |
| வேசுக்குனி | அணிந்துகினு | அணிந்துகொண்டு |

இவ்வாறு சிறு சிறு ஒலி வேற்றுமை உள்ள அமைப்புகள் நிரம்ப உள்ளன.

**கன்னடம்:**

தமிழ் ழகரம் கன்னடத்தில் ளகரம் ஆகிறது. காட்டுகள்: ஏழு = ஏளு, கூழு = கூளு. கோழி = கோளி. தென் தமிழ் நாட்டினரும் ழகரத்தை ளகரமாக ஒலிப்பது இங்கே நினைவு கூரத் தக்கது. தமிழ் அகரமும் பகரமும் கன்னடத்தில் ஹகரம் ஆகும். காட்டுகள்: அப்பளம் = ஹப்பளம். பாலு = ஹாலு. பண = ஹண. பேன், பேனு = ஹேனு. பல்லி = ஹல்லி. பல்லு = ஹல்லு. புலி = = ஹுலு. தமிழ் வகரம் கன்னடத்தில் பகரம் ஆகும். காட்டுகள்: வரை = வரெ = பரெ. வெள்ளி = பெள்ளி. வண்டி = பண்டி தமிழ் றகரம் கன்னடத்தில் ரகரம் ஆகும். காட்டுகள்: முறம் = மொற(ம்) = மொரெ. திற = தெற = தெர. மாறு = மாரு. சாறு = சாரு. குறை = கொறெ = கொரெ. சிதறு = செதறு = கெதரு. கூறை = கோரெ (துணி), நிறைவு = நெரவு, சிறை = செறெ = செரெ. இவற்றுள், றகரம் ரகர மானதன்றி

உகரம் ஒகர மாகவும், ஊகாரம் ஓகார மாகவும், இகரம் எகரம் ஆகவும், சகரம் ககரமாகவும் திரிந்திருப்பதையும் காணலாம்.

**மெய் ஈறு இன்மை:**

மற்றும், கன்னடத்தில் மெய் ஈற்றுச் சொற்கள் இல்லை – அதாவது–எச்சொல்லின் இறுதியிலும் எந்த மெய்யெழுத்தும் இராது. இஃதும், தமிழோடு தொடர்புடைய ஒரு கூறாகும். தமிழ் மெய்யெழுத்துகளுள், ஞ்,ண்,ம்,ய்,ர்,ல்,ழ்,ள்,ன் என்பன சொல் இறுதியில் பெருவாரியாக வரும். இவற்றுள், பேச்சு வழக்கில் உரிஞ்= உரிஞு, உண்=உண்ணு, தூண்=தூணு எனவும், நாய்=நாயி, தாய்=தாயி எனவும், வேர்=வேரு, பார்=பாரு எனவும் கால்=காலு, பல்=பல்லு எனவும், கூழ்=கூழு, அகழ்= அகழு எனவும், முள்=முள்ளு, தேள்=தேளு எனவும், தின்=தின்னு, பேன்=பேனு எனவும், 'ம்' தவிர்த்த மற்ற மெய்கள் உகரச் சாரியையோ இகரச் சாரியையோ பெற்று வரும். மரம், ஏலம், அவன், போனான் என 'ம்' 'ன்' என்னும் மெய்யீற்றுச் சொற்கள்தமிழில்'உ'சாரியை பெறுவதில்லை. சில இடங்களில் மட்டும் 'ன்' ஈறும் உகரச் சாரியை பெறுவதில்லை. பலம்=பலமு, குடம்=குடமு எனத் தெலுங்கில் 'ம்' உகரச் சாரியை பெறுகிறது. தமிழிலோ, மரம், ஏலம், அவன், போனான் போன்ற சொற்களின் இறுதி மெய் யெழுத்துகள் முழுமையாக ஒலிக்கப்படுவதில்லை; மர(ம்), ஏல(ம்), அவ(ன்), போனா(ன்) என இறுதி மெய் ஒலித்ததும் ஒலிக்காததுமாகப் பாதியளவு ஒலியே பெறுகின்றன.பிரஞ்சு மொழியிலும் இது போன்ற அமைப்பு உண்டு. ஒன்று என்னும் பொருள் உடைய 'UN' என்னும் பிரஞ்சுச் சொல் 'ஆன்' என முழுதும் ஒலிக்கப்படாமல் 'ஆ(ன்)'என மெலுக்காகவே ஒலிக்கப் பெறுகிறது.விரிவஞ்சி ஓர் எடுத்துக்காட்டோடு விட்டு விடலாம்.

இதுகாறும் கூறியதிலிருந்து தெரிவதாவது :- தமிழிலும் பேச்சு வழக்கில் சொல் இறுதி மெய்யெழுத்துகள் சரியான- போதுமான ஒலி பெறுவதில்லை - என்பதாம். கன்னட மொழியில் மெய்யீற்றுச் சொற்களே இல்லை என்னும் கருத்தோடு இந்தக் கருத்து ஓரளவு ஒத்து வருகின்ற தல்லவா? மற்றும், கன்னடத்திலும், இருள் = இருளு; தூள் = தூளு; கூலி காரர் = கூலி காரரு என மெய்யீறு 'உ' சாரியை பெறுவதுண்டு. பேச்சு வழக்கில் தமிழிலும் எழுத்து வழக்கில் கன்னடத்திலும் மெய்யீறு ஒலிக்கப் பெறாமையும் ஒரு சில இடங்களில் 'உ' சாரியை வருவதும் இவ்விரு மொழிகளும் ஒத்த மொழிகள் என்பதற்குப் போதிய சான்று பகரலாம். பழங்கன்னடத்தில் உள்ள சொல்லாட்சி கள் மேலும் இக்கருத்துக்குத் துணை புரியலாம்.

**வெங்-வென் :**

இனி, இங்கே ஒரு சுவையான சொல்லாட்சியைக் காண்பாம். தமிழில் 'வெந்' என்பதற்கும் சிறிதளவு ஒலி வேறுபாடுடைய 'வென்' என்பதற்கும் முதுகு என்பது பொருள். வென்னிடுதல் என்றால், முதுகு காட்டி ஓடுதல் ஆகும். தமிழில் உள்ள 'வென்' என்பதோடு ஒலித் தொடர் புடைய, வென்- வெனு- வென்னு என்பன தெலுங்கிலும், 'பென்னு' என்பது கன்னடத்திலும் முதுகைக் குறிக்கும். தமிழ் வகரம் கன்னடத்தில் பகரமாக ஒலிப்பதுண்டு; இதன்படி 'வென்' என்பது கன்னடத்தில் 'பென்' ஆயிற்று. கன்னடத்தில் மெய்யீறு உள்ள சொல் இல்லை; மெய்யீறு இருப்பின் 'உ' சாரியை சேர்ந்து விடும் அல்லவா? இதன்படி 'பென்' என்பது 'பென்னு' ஆயிற்று. வென், வெனு, வென்னு, பென்னு என்பவற்றின் அடிப்படைச் சொல்லாகத் தமிழில் உள்ள வெந் (வென்) என்பதற்கு ஒரு சுவையான இலக்கிய மேற்கோள் காண்பாம்: -

தலைவன் தலைவியின் மார்பைத் தழுவ விரும்பு கிறான். தென்னங் குரும்பைப் போன்ற அவளுடைய முலைகளின் குளிர்ச்சியைத் துய்க்கத் துடிக்கிறான். அந்நேரம் அவள் நாணத்தால் தலைவன் பக்கம் முதுகைக் காட்டித் திரும்பி நின்றாள். அப்போது அவன் அவளை நோக்கி, குரும்பை போன்ற முலைகளின் தண்மையைத் துய்க்க விரும்பும் எனக்கு முதுகைக் காட்டலாமா? என்று கூறு கிறான். இது, நூல் பெயர் தெரியாத பின்வரும் பாடல் பகுதி ஒன்றினால் அறியப்படுகிறது.

"... ... ... ... ... ... ... ... ... இளங்குரும்பைத்
தண்ணீர் அவாவுக்கு வெந்நீர் அளித்தல் தகுதியன்றே''

என்று கூறுகிறான். குரும்பை என்பது குரும்பை போன்ற முலை. தண்ணீர் (தண்நீர்) என்பது குளிர்ந்த தன்மை. வெந்நீர் என்பதை வெந்+நீர் எனப் பிரிக்கவேண்டும். வெந் = முதுகை, நீர் = நீங்கள், அளித்தல் = காட்டுதல் முறை யன்று என்று கூறுகிறான். இங்கே, தண்ணீர் (குளிர்ந்த பச்சைத் தண்ணீர்) விரும்பியவர்க்கு, வெந்நீர் (சூடானநீர்) அளித்தல் தகுதியன்று என்று இருபொருள் (சிலேடை) தந்து இப்பகுதி சுவை பயக்கிறது. இவ்வாறு சுவை தரும் சொற்கள் பல உண்டு. மேலும் ஒன்று வருமாறு.

**தனம் – மாடு:**

தனம் என்னும் சமசுகிருதச் சொல்லைக் கன்னட மொழி ஏற்றுக்கொண்டுள்ளது. கன்னடத்தில் இந்தச் சொல் மாடு (பசு), செல்வம் என்னும் இரு பொருளையும் தருகிறது. இதில்சுவையான செய்தி ஒன்று அடங்கியுள்ளது. தமிழிலும் இது போன்ற அமைப்பு உண்டு. தமிழில் மாடு என்பதற்குப் பசு, செல்வம் என்னும் இரு பொருளும்

உண்டு. மாடு என்பதற்குச் செல்வம் என்னும் பொருள் உள்ளமையை,

''கோடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை'' (400)

என்னும் திருக்குறள் பா அறிவிக்கிறது. கல்வியே செல்வம் மற்றையவை மாடு(செல்வம்) ஆகா – என்பது பொருள் தன் சொல்லுக்குத் தானே பொருள் கூறும் பாடல் இது.

ஐயர் குலத்தினர், தம் வீட்டிற்கு வரும் மருமகளை 'மாட்டுப் பெண்' என்று கூறும் வழக்காறும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. மாடு என்பதற்குப் பக்கம் என்னும் பொருளும் உண்டு. வீட்டில் பிறந்த பெண் வேறு வீட்டுக்டுக்குப் போய் விடுவதாலும் மருமகள் தம் பக்கத்திலேயே இருப்பதாலும் மாமியார் வீட்டார் மருமகளை மாட்டுப் பெண் என்று அழைப்பதாகச் சிலர் பொருள் கூறுகின்றனர். இது சரியன்று. மருமகளை வீட்டிற்கு வந்த திருமகள் (இலட்சுமி) என்று சொல்வது மரபு. மருமகள் வீட்டிற்குச் செல்வம் ஆவாள்; மேலும் சீர்வரிசைச் செல்வம் (சீதனம்) கொண்டு வருகிறாள். இதற்கேற்ப, மாடு என்பதற்குச் சீதனம் (பெண்சீர்) என்னும் பொருளும் உண்டு என அகராதி நிகண்டு கூறுகிறது. எனவே. மாட்டுப் பெண் என்றால், செல்வப் பெண் என்றே பொருள் கூறல் வேண்டும். ஐயர்கள் ஆத்திலே (அகத்திலே), அம்மாஞ்சி (அம்மான் சேய்) என்றெல்லாம் நல்ல தமிழ்ப் பெயர்களை வழங்குவதை அறியலாம். அவற்றுள் மாடு என்பதும் ஒன்றாகும்.

இலத்தின் மொழியில் (Pecunia) என்னும் சொல்லுக்கு மாடு, செல்வம் என்னும் இரு பொருள் உள்ளமையும்

இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இதுகாறும் இது பற்றிக் கூறியதிலிருந்து இன்னும் ஓர் உண்மையை அறிய முடிகிறது. அஃதாவது:

இப்போது உள்ளது போல் பண்டைக் காலத்தில் உலோக நாணயமோ அல்லது தாள்நாணயமோ(currency) இல்லை. ஒருபொருள் தந்து மற்றொருபொருள் வாங்கும் பண்டமாற்று முறையே அன்று இருந்தது. அப்போது, மிகுதியான மாடுகள் உடையவர்களே பெருஞ் செல்வர்களாக மதிக்கப் பெற்றனர். மாட்டைக் கொடுத்து வேறு பெரிய பொருளை – அளவில் பெரிய பொருளை வாங்குவது மரபாகும். இவ்வளவு செய்திகளையும் ஈண்டு எண்ணிப் பார்க்க இந்தத் 'தனம்' என்னும் சொல் வாய்ப்பு அளிக்கிறது. கன்னட மொழியில்சொல்லின் இறுதியில் ஒற்றெழுத்து வருவதில்லையாதலின் தனம் என்பது 'தன' என்றே வழங்கப்படுகிறது. இந்த வழக்காறு ஒருவகைச் சுவையாகும்.

**மலையாளம்:**

மலையாளம் தமிழ்ச் சேரநாடாதலின் மலையாள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இரண்டு மொழிகளிலும் ஒலிப்பு வேற்றுமை யில்லாமல் ஓரே மாதிரியான சொற்கள் நிரம்ப உண்டு. தூய்மையான உருவங்களும் மலையாளத்தில் உண்டு. சில சொற்களில் ஞகரமும் ஙகரமும் வந்து இனிமை ஊட்டுகின்றன. தமிழ் நகரத்திற்குப் பதிலாகவும் தமிழ் சகரத்திற்குப் பதிலாகவும் ஞகரம் வருவது இனிமை தருகிறது. எடுத்துக் காட்டுகள்:

நான்=ஞான்; நாங்கள்=ஞாங்கள்; நரம்பு=ஞரம்பு;

நண்டு=ஞண்டு; நாவல்=ஞாவல். கஞ்சி=கஞ்ஞி;

மஞ்சள்=மஞ்ச=மஞ்ஞ;மஞ்சு=மஞ்ஞு. கழிந்த=கழிஞ்ஞ எனத் தகரத்திற்குப் பதிலாகவும் ஞகரம் வருவது உண்டு. ககரத்திற்குப் பதில் ஙகரம் வருவதுமுண்டு; தேங்காய்= தேங்கா=தேங்ங;`மாங்காய்=மாங்கா=மாங்ங.நரைத்த= நரச்ச; குறித்து=குறிச்சி; ஒருமித்து=ஒரு மிச்சு; சிரித்து= சிரிச்சி – எனத் தகரத்திற்குப் பதில் சகரம் வரும். இது பேச்சுத்தமிழிலும் உண்டு. 'ஐ' ஈற்றுக்குப் பதில் அ,எ வருவதும் சொல் ஈற்றில் உகரச் சாரியை வருவதும் மலையாளத்திலும் உண்டு.

எண்ணுப் பெயர்களில் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து பதினாறு, பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது இருபது, இருபத்திரண்டு, முப்பது, அறுபது, எழுபது, எண்பது,தொண்ணூறு, நூறு, ஆயிரம் முதலிய எண்ணுப் பெயர்கள் தமிழிலும் மலையாளத்திலும் ஒரே மாதிரியாயிருப்பது குறிப்பிடத் தக்கது. மற்ற திராவிடமொழிகளில் இவ்வாறு இல்லை; சிறு சிறு மாற்றம் உண்டு.

**'ஙப் போல் வளை'**

மற்றும், மலையாளம் பற்றிய சுவையான செய்திகள் சில சொல்ல வேண்டும். ங முதல் ஙௌ' வரை தமிழில் உள்ள எழுத்துகளுள், இங்ஙனம், எங்ஙனம் என 'ங' மட்டுமே பயன் படுகிறது. பங்கு மங்கு என 'ங்' மெய்யும் பயன்படுகிறது. தனி'ங' என்பதை ஒரு சொல் போல் கொண்டு அறு 'குறுணியளவு' என்னும் பொருளைக் குறிக்கும் எனச் சித்தர் தேரையர் தமது 'தைல வருக்கச் சுருக்கம்' என்னும் நூலில் கூறியுள்ளார். இவ்வாறு ங்,ங என்பன மட்டும் பயன்படுகின்றன எனினும், தமிழ் நெடுங் கணக்கு (எழுத்து) வரிசையில் ங முதல் ஙௌ வரை உள்ள பன்னிரண்டு எழுத்துகளும் இடம்பெற்றுள்ளன. இதை எண்ணிய ஔவையார், ங என்பது தன்

வரிசை எழுத்துகளும் இடம்பெறச் செய்தது போல், செல்வர்கள் தம்மைத் சார்ந்தவர்களையும் வளைத்து (சேர்த்துக் கொண்டு) நன்கு காக்க வேண்டும் என்னும் பொருளில் 'ஙப் போல் வளை' எனத் தம் ஆத்திசூடி நூலில் கூறியுள்ளார்.

ஆனால், மலையாளத்திலோ, தேங்ங – மாங்ங–தங்ஙல் (தங்கல்) – ஏங்ஙல் (ஏங்கல்), என 'ங' என்னும் எழுத்து பயன்படுவதல்லாமல், 'இடுங்ஙிய' (ஒடுங்ஙிய) – துடங்ஙியவர் (துடங்கியவர்) – வாங்ஙிக்கான் (வாங்க) என 'ஙி' எழுத்தும், தாங்ஙு (தாங்கு) – நடுங்ஙு (நடுங்கு) – எங்ஙு (எங்கு) – பொங்ஙுக (பொங்குக) என 'ஙு' எழுத்தும் பயன்படுத்தப்பட்டிருப்பது இனிமை பயக்கிறது. 'ங்' என்னும் ஒற்றுக்குப் பக்கத்தில் ககரம் வந்த சொற்கள் சிலவற்றில் ககரம் ஙகரமாகியுள்ளது. ஆனால் செங்கல், தரங்கம், தெங்கு முதலிய சொற்களில் இவ்வாறு ககரம் ஙகர மாகவில்லை.

**வான் விகுதி:**

தமிழில், செய்வான் வந்தான், படிப்பான் சென்றான்– என்னும் தொடர்களில் உள்ள 'செய்வான்' என்பதற்குச் ,செய்ய' என்பது பொருள்; 'படிப்பான்' என்பதற்குப் 'படிக்க' என்பது பொருள். வான், பான் என்பன வினையெச்ச விகுதிகள் எனத் தமிழ் இலக்கணம் கூறுகிறது. இவைபோல, மலையாளத்தில் ஆன், வான் என்பன வினையெச்ச விகுதிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மலையாளத்தில், தின்னான், குடிக்கான். வாங்ஙிக்கான், காணுவான் – என்பனவற்றிற்கு முறையே, தின்ன – குடிக்க – வாங்க, காண – என்பன பொருளாம். இந்த அமைப்பும் இந்த இரு மொழிகட்கும் உள்ள நெருக்கத்தை அறிவிக்கிறது.

**வேண்ட:**

'வேண்டிய தில்லை' என்னும் பொருளில் 'வேண்டாம்' என்னும் சொல் தமிழில் பேச்சு வழக்கில் உள்ளது. ஆனால் தமிழில் எழுத்து வழக்கில் 'வேண்டா' என்றே சொல்ல வேண்டும்; இறுதியில் 'ம்' கூடாது. மலையாளத்தில் 'வேண்டா' என்பது 'வேண்ட' என வழங்கப்படுகிறது; இங்கும் இறுதியில் 'ம்' இல்லை. ஆனால், இறுதியில் 'ஆ' என்பது 'அ' என ஆகியுள்ளது. இந்தச் சிறு மாறுதலைத் தவிர, 'வேண்ட' என்னும் மலையாளம் 'வேண்டா' என்னும் தமிழோடு ஒத்திருப்பதைக் காணலாம்.

**சிரட்டை:**

மலையாளத்தில், கொட்டாங்கச்சியை - அதாவது - தேங்காய் ஓட்டைக் குறிக்கச் 'சிறட்ட' என்னும் சொல் வழங்கப்படுகிறது. இந்தச்சொல் தமிழிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் வழங்கப்படுகிறது. இது தொடர்பான என் பட்டறிவு ஒன்றை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன், நான் காவிரிக் கரையில் உள்ள திருவையாற்று அரசர் கல்லூரியில் வித்துவான் பட்டத்திற்குப் படித்துக்கொண்டிருந்தபோது - 1938ஆம் ஆண்டில் - எனது பதினாறாம் அகவையில் - நிகழ்ந்த ஒரு செய்தி வருமாறு: காலம் கோடை - காவிரியில் சிறிதும் நீரோட்டம் இல்லை. மணல் பரந்து கிடந்தது. ஒருநாள் மாலைநெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சாமி என்பவரும் முத்தணைந்த பெருமாள்என்பவரும் யானும் ஆற்று மணலில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். பதினாறு அகவையே உடைய எனது கை வாளா இருக்க முடியுமா? கையால் மணலை முழங்கை ஆழத்திற்குத் தோண்டிக் கொண்டிருந்தேன். குறிப்பிட்ட ஓரளவு ஆழம் உண்டானதும் கையில் கெட்டிப் பொருள் ஒன்று தட்டுப்பட்டது. அதைத்தோண்டி வெளியே

எடுத்தேன். அதைப் பார்த்ததும், முத்தணைந்த பெருமாள் என்பவர், 'சண்முகம் 'சிரட்ட' எடுத்திருக்கிறான் என்று கூறினார். நான் எடுத்தது கொட்டாங்கச்சி. அவர் சொன்ன 'சிரட்ட' என்னும் பெயர் எனக்குத்தெரியாது. வட தமிழ் நாட்டில் இந்த வழக்கு இல்லை. பிறகுதான் 'சிரட்டை' என்னும் பெயர் நெல்லை மாவட்டத்தில் வழங்குவதை அறிந்தேன். 'சிரட்டை' என்னும் பெயர், நெல்லை மாவட்டத்துப் பேச்சுத் தமிழிலும் மலையாளத்தில் எழுத்துத் தமிலும் 'சிரட்ட' என வழங்கப்படுகிறது.

**தலச் சோறு:**

மலையாளத்தில் உள்ள 'தலச் சோறு' என்னும் பெயரும் என்னைக் கவர்ந்துள்ளது. மலையாளத்தில் தலச் சோறு என்பதற்கு 'மூளை' என்பது பொருள். எழுத்துத் தமிழில் இதனைத் 'தலைச்சோறு' என்று சொல்லவேண்டும். தலை உச்சியில் உள்ள மூளைக்குச் சோறு என்னும் பெயர் உள்ளதை அறிந்த போது, எனது இளமைக் கால நிகழ்ச்சி யொன்று நினைவுக்கு வந்தது. எனது இளம் பருவத்தில் எங்கள் தோட்டத்தில் ஒரு தென்னை மரத்தை வெட்டினார்கள். தென்னையின் உச்சித் தலைப் பகுதி வெட்டப்பட்டுக் கீழே விழுந்ததும், சோற்றைத் தோண்டி எடுங்கள் என்று ஒருவர் கூறினார். உச்சியிலிருந்து வெண்மையான ஒரு பகுதி வெட்டி எடுக்கப்பட்டது. அது பலர்க்கும் பங்கிட்டுத் தரப்பட்டது. நான் என் பங்கைத் தின்றபோது அது மிகவும் சுவையாயிருக்கக் கண்டேன். அந்தப் பகுதிக்குச் 'சோறு' என்னும் பெயர் உண்டு என்பதை நான் அப்போதுதான் தெரிந்து கொண்டேன். இதைத் 'தலச்சோறு' என்னும் மலையாளப் பெயரோடு பொருத்திப் பார்த்த போது மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. 'மண்டையிலே

மசாலா இருக்கிறதா' என்று சிலர் கேட்பது இங்கே ஒப்பு நோக்கத் தக்கது,

**மண்ணான்:**

மலையாளத்தில் உள்ள மற்றொரு சொல் சுவையா யுள்ளது. தமிழில் உள்ள 'வண்ணான்'என்பது மலையாளத் தில் 'மண்ணான்' என்று வழங்கப்படுகிறது. வண்ணான் -மண்ணான் என்றால் சலவைத் தொழிலாளி(Washerman) என்பது பொருள். இந்தக் காலத்தில் வண்ணான் என்று சொன்னால் அது குறைவாகத் தோன்றுகிறது: அந்த இனத்தார் சினம் கொள்வர்-வருத்தப்படுவர். குறைவோ வருத்தமோ தராத சொல்லக 'ஏகாலி ' என்பது சிற்றூர்ப் புறத்தும், 'சலவைத் தொழிலாளி' என்பது நகர்ப் புறத் தும் இப்போது வழங்கப்படுகின்றன 'வண்ணான்', 'மண் ணான்' என்னும் சொற்கட்கும் சலவைத் தொழிலாளி என்பதே பொருளாகும்.

வண்ணான் என்பதற்கு, உடைக்கு வண்மை-அழகு ஊட்டுபவன் என்பது பொருள். மலையாளத்திலுள்ள மண் ணான் என்பதற்கு, உடையைத் தூய்மை செய்பவன்- அணி (அலங்காரம்) செய்பவன் என்பன பொருளாம். மண்ணுபவன் மண்ணான். மண்ணுதல் என்பதற்குக் கழுவு தல், தூய்மை செய்தல், அழகு செய்தல் என்பன பொரு ளாகும். இதற்கு ஔவையாரின் மூதுரை நூலிலிருந்து ஓர் அகச் சான்று காண்பாம்.

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்கவேண்டா-கடல் பெரிது
மண்ணீரும் ஆகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்" (12)

என்பது மூதுரைப்பாடல். மண்நீர் (மண்ணீர்) என்றால், உடம்பைக் குளித்துக் கழுவித் தூய்மை செய்ய உதவும் நீர் என்று பொருளாம். கடல்நீர் அதற்கு உதவாதன்றோ? இன்னொரு அகச் சான்று கலித்தொகை என்னும் நூலிலிருந்து காண்போம்: ''மண்ணி மாசு அற்ற நின் கூழையுள்'' (கலித்தொகை: 107 – 31) என்னும் தொடரின் பொருள்; குளித்துக் கழுவி அழுக்கு போக்கித் தூய்மை செய்த நின் கூந்தல் – என்பதாம். மண்ணினால் மாசு (அழுக்கு) அறும் எனத் தெளிவான பொருளில் சொல்லாட்சி அமைந்துள்ளது. இன்னும் ஒரு சொல்லாட்சியை இங்கே காணலாம்.

**கோதுமை-கோதும்பை:**

1982 மார்ச்சு முதல் நாள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொகுப்பியல் துறைத்தலைவனாகவும் பேராசிரியனாகவும் யான் பணி தொடங்கினேன். எனக்குப் பணி தந்த என் வனக்கத்திற்கு உரிய துணைவேந்தர் உயர்திரு வி.ஐ.சுப்பிரமணியனார் அவர்கள்,எதைத்தொகுப்பது என்று தேர்ந்தெடுக்கும் உரிமையை எனக்கே வழங்கி விட்டார்கள். மர இனப் பெயர்களை முதலில் தொகுக்கலாம் என்றேன் நான். ஐயா அவர்கள் அதற்கு அன்போடு ஒப்புதல் அளித்தார்கள்.எனது பணிக்கு வேண்டிய ஒரு நூலும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இல்லாத நிலையில், யான் புதுச்சேரியிலிருந்து நாற்பது அகர முதலிகள் கொண்டுபோய் வைத்துப் பணி தொடங்கினேன் அப்போது யான் அறிந்த சுவையான செய்தி ஒன்றை இங்கே தருகிறேன்.

'கோதுமை' என்பதைத் தென்னார்க்காடு மாவட்டப் பகுதியிலும் அதன் நடுவே உள்ள புதுச்சேரியிலும் 'கோதும' என்று கொச்சையாகப் பேச்சுத் தமிழில் சொல்

வது வழக்கம். மூளைக் கட்டி நோயாளியாகிய யான் மருத்துவத்திற்காகச் சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் என் சிறிய மாமனார் வீட்டில் தங்குவது வழக்கம். அந்த வீட்டுச் சமையல்கரார் இராமநாதபுரம் மாவட்டத்தினர். அவர் கோதுமை என்பதைக் 'கோதம்ப' என்று கூறுவார். நான் 'கோதம்ப' என்பதைக் கேட்டதும் கிண்டல் பண்ணுவது வழக்கம். எங்கள் வீட்டிற்கு வந்த பிறகும், என் மனைவியை நோக்கி இன்றைக்கு என்ன கோதம்ப உப்பு மாவா? கோதம்ப பூரியா எனக் கிண்டலாகக் கேட்பது வழக்கம்.

இந்த நிலை இருக்க – யான் பல்கலைக் கழகத்தில் மர இனப் பெயர்களைத் தொகுத்துக்கொண்டிருந்த போது கோதுமை என்பதன் வேறு பெயர்களை வேறுவேறு அகர முதலிகளில் கண்டு வியந்தேன். அவையாவன: 'கோதும்பை' என்னும் பெயரைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியிலும், 'கோதமம்' என்னும் பெயரைச் சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில அகராதியிலும், கோதுமம்' என்னும் பெயரை யாழ்ப்பாணத்து மானிப்பா யகராதியிலும், 'கோதூமம்' என்னும் பெயரைத் திருவானைக்காப் புராணத்திலும் கண்டு வியந்தேன். 'நலத்தகு பொருள் கோதுமம்' என்பது, திருவானைக் காப் புராணம்–நான விதிப்படலம் – 25 ஆம்பாடலில், உள்ள பகுதி யாகும். மற்றும், கோதுமைக்குக் 'கோதி' என்னும் பெயரும் உண்டு என்பதைத் திவாகர நிகண்டிலும் சூடாமணி நிகண்டிலும் உள்ளதைக் கண்டேன். ''கோதி கோதுமை'' என்பது, திவாகர நிகண்டு – மரப் பெயர்த் தொகுதியின் – 173ஆம் பாடலாகும். அடுத்து, ''தழுவு கோதுமையே கோதி'' என்பது. சூடாமணி நிகண்டு-மரப் பெயர்த் தொகுதி-39 ஆம் பாடல் பகுதி யாகும். இத்தனை

யும் யான் கொண்டு சென்ற நூல்களிலிருந்து பெறப்பட்டவை யாகும்.

யான் கிண்டல் செய்த தென் தமிழ் நாட்டுப் பேச்சு வழக்காகிய 'கோதம்ப' என்பது, மலையாளத்தில் 'கோதம்ப' என்னும் எழுத்து வழக்காகும்.எனவே எனது கிண்டலில் பொருள் இல்லை. மற்றும் கோதுமைக்குக் 'கோதி' என்னும் பெயரும் உள்ளதாகத் தமிழ் நிகண்டுகள் கூறுகின்றனவே – அந்த வழக்கு, கன்னடத்திலும். 'கோதி' என உள்ளது. அடுத்து, பேச்சுத் தமிழில் உள்ள 'கோதும' என்னும் கொச்சை வழக்கு, தெலுங்கில் 'கோதும' என எழுத்துத் தெலுங்காக உள்ளது. இத்தகைய அமைப்பு, நான்கு மொழிகட்கும் உள்ள ஒற்றுமையை உணர்த்தும் சுவையான செய்தியன்றோ? இன்னும் இவ்வாறு பல்வேறு சொற்சுவைகளைக் காணலாம்.

### துளுவம்(துளு)

துளு மொழியில் உள்ள அண்ணே, அக்கா, கால், கை, கண், தின், உண் – முதலிய சொற்கள் திரியாமல் தமிழே போல் இருப்பது வியப் பளிக்கிறது. மற்ற திராவிட, மொழிகளிலும் ஒத்த ஒலிப்புடைய சொற்கள் நிரம்ப உள்ளன.

### தொல் திராவிட மொழி

இதுகாறுங் கூறியவற்றால் அறிய வேண்டுவன:- பேச்சுத் தமிழும் எழுத்துத் தெலுங்கும் எழுத்துக் கன்னடமும் எழுத்து மலையாளமும் எழுத்துத் துளு மொழியும் ஆகியவற்றிலுள்ள ஆயிரக்கணக்கான சொற்கள் பெரும்பாலும் ஒலிப்பில் ஒத்துள்ளன. ஒலிப்பில் உள்ள சிறு சிறு வேற்றுமையை இங்கே பொருட்படுத்த வேண்டா. பேச்சுத் தமிழ் (அதாவது கொச்சைத் தமிழ்) பிற எழுத்துத்

திராவிட மொழிகளோடு ஒத்திருக்க, எழுத்துத் தமிழ் மட்டும் ஒலிப்பில் வேறுபட்டுள்ளது. தொடக்கத்தில் இருந்த மொழியின் ஒலிப்பு முயற்சியை நாளடைவில் குறைத்துக் கொண்டே வருவது மக்கள் இயற்கை, தலை என்னும் எழுத்துத் தமிழை ஒலிக்கச் செலவாகும் முயற்சியினும், தல, தலெ என்னும் சொற்களை ஒலிக்கும் முயற்சி குறைவு. எனவே, தலை என்னும் ஒலிப்புடைய எழுத்துத் தமிழ் மொழியே மற்ற திராவிட மொழிகளின் முதன்மைத் தாய்மொழியாகும்-அதாவது - தொல்திராவிட மொழியாகும் என்பதைத் தயங்காமல் சொல்லலாம் - ஏற்றுக் கொள்ளலாம்.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட சிலரும், பிற திராவிட மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட பலரும் எழுத்துத் தமிழைத் 'தொல் திராவிடமொழி' என ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். பிற திராவிட மொழிக்காரர்கள், எழுத்துத் தமிழே தொல் திராவிடமாகும் என்பதை ஏறறுக் கொண்டால் தங்கள் தாய் மொழியின் மதிப்பு குறையும் என எண்ணுவதாகத் தெரிகிறது. தாய் மொழிப்பற்று இருக்கலாம். அதற்காக உண்மையை ஒத்துக்கொள்வதற்கு வெட்கப் படலாகாது -கூச்சப்படலாகாது - தாழ்வு மனப்பான்மை கூடாது.

மற்றோர் உண்மையையும் இங்கே மறத்தலாகாது. தமிழைத் தாய் மொழியாக உடையவர்கள் எங்கள் தமிழிலிருந்து தான் பிற திராவிடமொழிகள் பிறந்தன என்று அடித்துப் பேசலாகாது. சுந்தரம்பிள்ளையின் மனோன் மணீய நூலின் தமிழ் வாழ்த்துப் பாடலிலுள்ள "கன்னடமும் களி தெலுங்கும் கவின்மலை யாளமும் துளுவும் உன்னுதரத்துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்.,"

என்னும் பகுதியைப் பாடி மகிழ்வதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

எந்த மொழியும் இன்னொரு மொழியிலிருந்து குழந்தைபோல் பிறப்ப தில்லை. ஒரு காலத்தில் குறிப் பிட்ட பகுதியில் ஒரே மொழி இருந்திருக்கலாம். அந்தப் பகுதியிலேயே – ஆங்காங்கு மக்களது பேச்சு வழக்கில் மாறுதல் ஏற்படவே, ஒரு மொழியே பல கிளை மொழி களாகும். நாளடைவில் ஒலிப்பில் சிறு சிறு மாறுதல் ஏற்பட்ட கிளை மொழிகள் தனித்தனி மொழிப் பெயர் பெறும். இந்தப் பொது விதியைத் திராவிட மொழிகட் கும் பொருத்திக் கொள்ளவேண்டும்.

**தலைமைக் காரணம்**

தென்னிந்தியா முழுதும் வழங்கப்பெறும் மொழிக்குத் தமிழ் அல்லது தெலுங்கு அல்லது கன்னடம் அல்லது மலையாளம் அல்லது துளு என எந்தப் பெயர் வேண்டு மானாலும் கொடுக்கலாம். இருப்பினும், பேச்சுத் தமிழும் மற்ற எழுத்துத் திராவிட மொழிகளும் ஒலிப்பில் ஒத்திருப் பதால், எழுத்துத் தமிழுக்குத் தலைமை கொடுக்கப்படு கிறது. எழுத்துத் தமிழோ இற்றைக்கு (1988) மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே அப்போது பேசப்பட்ட ஒலி வடிவத் தில் எழுதப்பட்டது. மற்ற எழுத்துத் திராவிட மொழி களோ, ஏறக்குறைய இற்றைக்கு (1988) முன்பு ஆயிரம் ஆண்டுகட்குள்தான் அவ்வப்போது பேசப்பட்ட வடிவத்தில் எழுதப்பெற்றன. இதனாலும் தமிழுக்குத் தலைமை தரப் படுகிறது. எல்லா மொழிகளிலும் உள்ள எல்லா இலக்கியச் சொற்களும் எழுதப்படுவதற்கு முன், எங்கோ ஒரு மூலையிலாவது பேசப்பட்டவையே.

# சமசுகிருதம் தாயா—புக்கதா?

தமிழ் தவிர்த்த மற்ற திராவிட மொழிகளில் அளவு மீறிச் சமசுகிருதச் சொற்கள் புகுந்து தமிழுக்கும் அவற்றிற்கும் மிக்க வேறுபாட்டை உண்டாக்கி விட்டன என்னும் உண்மையை எவரும் மறுக்கார். இந்தக் காலத்தில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதிலும் எழுதுவதிலும் பலர்பெருமை காண்பது போல, அந்தக் காலத்தில் சமசு கிருதச் சொற்களைக் கலந்து பேசுவதிலும் எழுதுவதிலும் பெருமை கண்டனர். சொற்களைச் சேர்த்துக் கொண்டதல்லாமல், சமசுகிருத எழுத்துகளையும் அப்படியே எடுத்துச்கொண்டனர். சமசு கிருதத்திலுள்ள ரு, ரூ, லு, லூ, அம், அஹ என்னும் ஆறு உயிர் எழுத்துக் களையும் இம்மொழிகள் சேர்த்துக் கொண்டன.

மற்றும், புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டதுபோல், சமசுகிருதத்தில் உள்ளாங்கு க, ச, ட, த, ப, என்னும் ஐந்திலும் உள்ள நந்நான்கு எழுத்துகளையும் எடுத்துக் கொண்டன. சமசு கிருதச் சொற்களைத் தம் மொழிகளில் எழுதுவதற்கு அந்த நந்நான்கும் தேவைப் படலாயின. வௌவால் வீட்டிற்கு விருந்தினராகச் செல்பவரும் தலை கீழாகத் தொங்கித்தானே ஆகவேண்டும்?

இம்மொழிகள் சமசுகிருத நீர்நிலையில் முழுகி நனைந்து, க, ச, ட, த, ப - என்பவற்றின் நந்நான்கு எழுத்துகளையும் எடுத்துக்கொண்டு சுமையைப் பெருக்கிக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. இரண்டிரண்டு எடுத்துக் கொண்டால் போதும் தமிழில், ல, ள-ர, ற – ந, ண, ன, என ஒத்த ஒலியுடைய எழுத்துகள் நந்நான்கு இல்லை. ஆங்கிலத்தில் 'க' என்பதற்கு Ka, ga, என இரண்டும், 'ச' என்பதற்கு Sa, Ja என இரண்டும், 'ட' என்ப

தற்கு ta, daஎன இரண்டும், 'த' என்பதற்கு Thea,pha என இரண்டும், 'ப' என்பதற்கு Pa, Ba என இரண்டும் இருப்பதுபோல் இரண்டிரண்டே போதுமானது, தமிழிலும், பக்கம் – அகம், தங்கம்என்னும் மூன்று சொற்களிலும் உள்ள மூன்று ககரங்களும் ஒலி வேறுபாடுடையன. 'க' போலவே ச, ட, த, ப என்பனவும் முன் பின் உள்ள எழுத்துகளை நோக்க ஒலி வேற்றுமை உடையனவே. சமசுகிருதம் தன் எழுத்துகளைப் பெருக்கிக் கொண்டது அதன் தலை எழுத்து. அதன் சொற்களைச் சேர்த்துக் கொண்டதால், அதன் தலை எழுத்தைத் திராவிட மொழிகளும் பெற்றுக் கொண்டு, கற்கும் குழந்தைகட்குத் தொல்லை கொடுக்கின்றன. எப்படியோ புகுந்து கொண்டு ஆட்சி செலுத்துகிற சமசுகிருத மொழியின் திறமையைப் பாராட்டுவதா? ஏமாறிய திராவிட மொழிகளின் எளிமையை எண்ணி இரங்குவதா? ஒன்றும் புரியவில்லை. வடமொழிப் பித்தில் தெலுங்கு 'ழ' எழுத்தையும் கன்னடம் ழ,றஎன்னும் எழுத்துகளையும் துறந்துவிட்டன.

இந்த இரங்கத் தக்க எளிய நிலை ஏற்பட்டதால், திராவிடமொழிகள் சமசுகிருதத்திலிருந்து பிறந்தவை என்று சிலர் அல்லது பலர் கூறுகின்றனர். இவர்கட்கு ஓர் உண்மையை வலியுறுத்த வேண்டியது நமது கடமையாகும்.

**எண்முறை:**

ஒரு குடும்ப மொழிகள் எண்ணுப் பெயர்களிலும் உறவுப் பெயர்களிலும் ஓரளவாயினும்ஒத்திருக்கும் என்பது பொதுவிதி. இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த இலத்தீன் மொழியுள்ள ஐரோப்பிய இடத்திற்கும் அதே குடும்பத்தைச் சேர்ந்த சமசுகிருதம் உள்ள வட இந்தியாவுக்கும் இடையே ஒருதோற்றம் எண்ணாயிரம் கி.மீ. தொலைவு இருக்கும். அப்படியிருந்தும்,

இரண்டு மொழிகட்கும் எண்ணுப் பெயர்களிலும் உறவு முறைப் பெயர்களிலும் ஓரளவு ஒற்றுமை இருப்பதைக் காணலாம். அது வருமாறு:-

| எண்கள் | இலத்தீன் | சமசுகிருதம் |
|---|---|---|
| ஒன்று | — உனுஸ் (unus) | ஏகம் |
| இரண்டு | — துவோ (duo) | துவே |
| மூன்று | — தத்ரெஸ் (tres) | த்ரீணி |
| நான்கு | — கத்துவோர் (quattuor) — | சத்வாரி |
| ஐந்து | — குயிங்க் (quinque) — | பஞ்ச |
| ஆறு | — செக்ஸ் (Sex) — | ஷட் |
| ஏழு | — செப்த்தெம் (Septem) — | சப்த |
| எட்டு | — ஒக்த்தோ (octo) — | அஷ்ட |
| ஒன்பது | — நொவெம் (Novem) — | நவ |
| பத்து | — தெசெம் (decem) — | தச |
| நூறு | — சென்த்தோம் (centum) — | சதம் |

**சிலமுறைப் பெயர்கள்**

| இலத்தீன் | சமசுகிருதம் |
|---|---|
| தாய் – மாத்தெர் (Mater) | மாத்ரு |
| தந்தை – பாத்தெர் (Pater) | பித்ரு |
| உடன் பிறந்தான் – ஃப்ராத்தெர் (Frater) | ப்ராத்ரு |

எண்ணுப் பெயர்களும் முறைப்பெயர்களும் ஒத்திருப்பதன்றி, மேலும், ஒத்திருக்கும் சில பெயர்கள் வருமாறு:-

| இலத்தீன் | சமசுகிருதம் |
|---|---|
| வீடு - தொமுஸ் (domus) | தம |
| நெருப்பு - இக்னிஸ் (ignis) | அக்னி |
| குதிரை - இக்வஸ் (EQUUS) | அச்வ |
| நுகம் - ழகொம் (Jagum) | யுகம் |
| உலோகம் - ஏஎஸ் (Aes) | அயஸ் |
| பல் - தென்ஸ் (dens) | தந்தா |
| பாம்பு - செர்பன்ஸ் (serpans) | சர்பகா |
| கொடை - தொனொம் (donum) | தானம் |
| பெயர் - நொமென்ஸ் (Nomens) | நாம |
| உயிர் - அனிமா (Anima) | ஆத்மா (ஆன்மா) |
| கைம்பெண் - விதுவா (Vidua) | விதவா |
| புதிது - நொவொம் (Novum) | நவ |
| மெல்லிய - தெனுயிஸ் (tenuis) | தனு |
| சாதல் - மொரி (Mori) | ம்ரு |
| இல்லை - நொ(ன்) (Non) | ந |

இன்னும், இவ்விரு மொழிகளிலும்,ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்கும் ஆண்பால்-பெண்பால் கூறுவது போன்ற ஒற்றுமைகள் சிலவும் உள்ளன. எனவே, இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமசுகிருதத்திலிருந்து திராவிட மொழிகள்பிறந்தன என்று கூறுவது மிகவும் அறியாமையாகும். தமிழ் முதலிய திராவிட மொழிகளில், எண்ணுப் பெயர், முறைப் பெயர், மூவிடப் பெயர் முதலிய பலவகையான பெயர்கள் ஒத்திருப்பதை, திராவிட மொழிச் சொற்களின் அட்டவணையில் காணலாம். அந்த

அட்டவணையில், திராவிட மொழிகளில் உள்ள சில-பல பெயர்ச் சொற்கள், வேற்றுமை உருபேற்ற பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், வினையெச்சம், பெய ரெச்சம், வினைமுற்று முதலிய பல்வேறு வகைச் சொற் களும் தரப்பட்டு ஒற்றுமை நிலைநாட்டப்பட்டுள்ளது.

மற்றும், இந்த நான்கு மொழிகளும் சமசுகிருதச் சொற்களை எவ்வாறு ஒத்தநிலையில் சேர்த்துக் கொண் டுள்ளன என்பதை அறிவிக்க, இந்த அட்டவணையில் சமசுகிருதச் சொற்கள் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன. இதே நோக்கத்திற்காக, வேறு சில மொழிகளின் சொற்கள் சில வும் குறைந்த அளவில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. இந்தப் பணி மிகவும் கடினமானது. சொற்களைத் தேடிச் சேர்ப்பதில் தலைவலி மிகுதி.ஒலிப்பில் ஐயப்பாடான சொற்கள் சில அடைப்புக் குறிக்குள் (with in bracket) தரப்பட்டிருக்கும். திராவிட மொழிகளுள் புகுந்த பிற மொழிச் சொற்களுள் சமசுகிருதமே மிக்க அளவில் தலைமை தாங்குகிறது.

இவ்வாறு திராவிட மொழிச் சொற்கள்,தேவையில்லா மல் சமசுகிருதக் குருதியைத்தங்கள் உடம்பில் ஏற்றிக்கொண் டது கொடுமை. தமிழிலும் சமசுகிருதச் சொற்கள் ஓரளவு புகுந்திருப்பினும் அவற்றைக் களைந்தெறிந்து விட்டுத் தனித் தமிழிலேயே எழுத முடியும். புதியனவாக வந்து கொண்டிருக்கும் பல வகைக் கலைச் சொற்கட்கு ஏற்பத் தமிழை அமைத்துக் கொள்ள வேண்டும் – முடியும்.

யார் என் மீது சினமோ – வருத்தமோ கொண்டாலும் சரி – யான் ஒரு கருத்தைத் துணிந்து தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். தமிழில், ஸ,ஜ,ஷ,ஹ,க்ஷ ஆகிய எழுத்துகள் இல்லாமை ஒரு வகையில் குறைவேயாகும். கூச்சப்படாமல்

இந்த எழுத்துகளை ஏற்றுக் கொள்ளவேண்டும்; இல்லையேல் இவ்வொலிகட்கு ஏற்ற புதிய எழுத்து வடிவங்களை படைத்துத் தமிழில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அறிஞர்கள் ஆய்க! 'F' என்பதற்கும் தமிழில் புதிய வடிவம் படைக்க வேண்டும்.

தமிழ் தனித்து இயங்கும். ஆனால், தெலுங்கு, கன்னடம். மலையாளம் ஆகியவை தனித்து இயங்க முடியாத அளவுக்குச் சமசுகிருதச் சொற்களை ஏற்றுக்கொண்டுள்ளன. தெலுங்கிலும் கன்னடத்திலும் விளக்கு என்பதைக் குறிக்கத் 'தீபம்' என்னும் சமசுகிருதச் சொல்லே உள்ளது. அதை நீக்கிவிடின், அம்மொழிகள் தமிழ்ச் சொல்லைத் தான் நாட வேண்டிவரும். இம்மூன்று (தெ – க – ம) மொழிகளிலும் வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டுள்ள சமசுகிருதச் சொற்கள் சிலவற்றின் பட்டியல் வருமாறு;

# மும்மொழிகளில் சமசுகிருதம்

1. தெலுங்கு மொழியில் தள்ள முடியாதபடி வழக்கில் உள்ள சமசுகிருதச் சொற்கள் சில வருமாறு:-

| தமிழ் | தெலுங்கு | தமிழ் | தெலுங்கு |
|---|---|---|---|
| வேள்வி | யாகமு | புழு, பூச்சி | க்ருமி |
| கொடி | லத | குயில் | கோகில |
| அன்னம் | ஹம்ச | துளை | த்வாரம் |
| விளக்கு | தீபமு | தோள்கள் | புஜமுலு |
| கார்,கொண்டல் | மேஹமு | கொப்பூழ் | நாபி |
| தேர் | ரதமு | இன்பம் | ஸுகமு |
| பறவை | பக்ஷி | அமைதி | சாந்த்தமு |
| ஆணை | ஆஜ்ஞ | காதல் | ப்ரேம |
| துரும்பு | த்ருணமு | அச்சம் | பயமு |
| உருளை | சக்ரமு | துணிவு | தைர்யமு |
| ஆர்வம் | உத்ஸாகமு | பருவம் | ருது |
| ஒற்றுமை | ஐகமத்யமு | ஆண்டு | ஸம்வத்ஸரம் |
| ஆட்சி | ப்ரபுத்வமு | வேனில்காலம் | வசந்தருதுவு |
| புகழ் | கீர்த்தி | மழைக்காலம் | வர்ஷருதுவு |
| விழா | வைபவமு | பனிக்காலம் | ஹேமந்த ருதுவு |
| நாடு | தேசமு | உழைப்பு | க்ருஷி |
| நட்பு | ஸ்நேஹமு | செல்வம் | ஸம்பத் |
| கலம் | பாத்ர | | |

| தமிழ் | தெலுங்கு | தமிழ் | தெலுங்கு |
|---|---|---|---|
| மாணவன் | வித்யார்த்தி | கேளிக்கை | சரசமு |
| தேர்வு | பரிக்ஷ | சிக்கல்,கேள்வி | ப்ரச்ன |
| கட்டுரை | வ்யாசமு | சினம் | கோபமு |
| மருத்துவர் | வைத்யுடு | ஈட்டம் | ஸம்ப்பாதன |
| தெற்கு | தக்ஷிணமு | குழுமன்றம் | சமாஜம் |
| வடக்கு | உத்தரமு | சாறு | ரசமு |
| ஞாயிறு | ஸூர்யடு | சான்று | சாக்ஷி |
| திங்கள் | சந்த்ருடு | தன்னுரிமை | சுவாதந்தர்யமு |
| விண்மீன்கள் | நக்ஷத்ரமுலு | செல்வம் | ஐஸ்வரியம் |
| கடல் | சமுத்ரமு | பிணைப்பு கட்டு | பந்தம் |
| அழகு | அந்தம் | சொற்பொழிவு | பாஷணம் |
| ஆட்சி | பாலன | தற்கொலை | ஆத்மஹத்தய |
| எண்ணெய் | தைலமு | தொலைவு | தூரமு |
| உண்மை | நிஜமு | உடன் விரைவு | அவசரம் |
| மாந்தன் | மனிஷி | நடுநிசி | அர்த்த ராத்ரி |
| வழி | மார்கமு | நிலைமை | ஸ்திதி |
| இயம் | வாத்யமு | நெடுநிலை | சாச்வதம் |
| இனம், பிரிவு | வர்கமு | நுழைய | ப்ரவேசிஞ்ச்ச |
| அசையாப் பொருள் | அசரமு | நூலகம் | க்ரந்தாலயமு |
| ஆசிரியர் | உபாத்யாயடு | நேர்மை | நிஜாயதி |
| எரி | தஹிஞ்ச்சு | பிணி | வ்யாதி |
| ஒலி | த்வனி | | |
| கவனமாக | ஸ்ரத்தகா | | |

| தமிழ் | தெலுங்கு | தமிழ் | தெலுங்கு |
|---|---|---|---|
| நோக்கம் (கருத்து) | உத்தேசமு | முதலமைச்சர் | முக்யமந்திரி |
| பரந்த உள்ளம் | உதாரத | முயற்சி | ப்ரயத்னம் |
| பட்டினி நோன்பு | உபவாசம் | மெலிந்ததாக | ஸன்னகா |
| வன்முறை | பலாத்காரம் | மென்கலைகள் | லிலிதகளலு |
| படை | சைன்யம் | மணம் | வாசட |
| வட்டாரம் | ப்ராந்தமு | வாழ் | ஜீவிஞ்ச்சு |
| பிணம் | சவமு | வளையல் | கங்க்கணமு |
| தூய்மை | பவித்ர | விரிவுசெய் | லிஸ்தரிஞ்ச்சு |
| பொருள் | வஸ்து | பிணியாளர் | ரோகுலு |
| பொய் | அபத்தமு | விரைவு | த்வரிதம் |
| போராட்டம் | ஸமரம் | மறை | வேதமு |
| கற்பிதம் | போதன | வைரம் | வஜ்ரம் |
| மகிழ்ச்சி | ஸந்த்தோஷமு | கதிர் | கிரணமு |
| மீறுதல் | அதிக்கிரமிஞ்ச்சுட | சான்று | ருஜூவு |
| | | மெய்யறிவு | ஞானம் |
| | | முனி | ருஷி |
| | | இணை | ஜத |

2. கன்னட மொழியில் தள்ள முடியாதபடி வழக்கில் உள்ள சமசுகிருதச் சொற்கள் சில வருமாறு:

| தமிழ் | கன்னடம் | தமிழ் | கன்னடம் |
|---|---|---|---|
| மக்கள் | ஜன | இறைச்சி | மாம்ஸ |
| தேர் | ரத | இளைஞர்கள் | யுவகரு |
| குயில் | கோகில | மாணவர்கள் | வித்யார்த்திகளு |
| வெப்பம் | உஷ்ண | ஆசிரியர்கள் | உபாத்யாயகளு |
| கடவுள் | ஸ்வாமி | முடிதிருத்துவோர் | க்ஷௌரிகரு |
| கடல் | ஸமுத்ர | உறுப்புகள் | அவயகளு |
| பறவை | பக்ஷி | துளை | த்வார |
| பொறுத்தருள்க | க்ஷமிஸிரி | மூச்சு | ஸ்வாஸ |
| நலம் | க்ஷேம | மண்டை ஓடு | கபாள |
| திறமை வலிமை | ஸக்தி | உயிர் | ஜீவ |
| அகப்படுத்துதல் | ஆக்ரமண | வாத்து | ஹம்ஸ |
| பழக்கம் | அப்யாஸ | தொழிற்சாலை | காரகான |
| நாள் | தின, திவஸ | தொழிலாளி | ச்ரமிக |
| மணமாகாதான் | ப்ரமச்சாரி | தொழில் | உத்யம |
| உடன்பிறப்பு | ஸோதர | செயலகம் | கார்யாலயெ |
| ஓவியம் | சித்ர | இதழ் | பத்ரிகெ |
| பூசனை | பூஜை | செய்தி | விஷய |
| விளக்கு | தீப | துணை | ஸகாய |
| சோறு | அன்ன | பரப்புகை | ப்ரகடணெ |

| தமிழ் | கன்னடம் | தமிழ் | கன்னடம் |
|---|---|---|---|
| புதினம் | காதம்பரி | நல்மணம் | ஸுகந்த |
| திறனாய்வாளர் | விமர்சகரு | கெட்டமணம் | துர்வாஸனெ |
| கல்வி | வித்யெ | கடுமை | உக்ரதெ |
| பள்ளி | வித்யாலய | வயிறு | உதர |
| நூல் | புஸ்தக | ஒருமைப்பாடு | ஏகீகரண |
| தேர்வு | பரீக்ஷெ | வளையல் | கங்கணம் |
| கற்பி | போதிஸு | இலக்கியம் | க்ருதி |
| நொடி | க்ஷண | படிப்படியாக | க்ரமேண |
| புலர்தல் | ப்ராதஃ | திங்கள் (நிலா) | சந்த்ர |
| ஆண்டு | வர்ஷா | நிலவொளி | சந்தரிகெ |
| பருவம் | ருது | உயிரி | ஜந்த்து |
| இளவேனில் | வஸந்த்த | அறிவாளி | சதுர |
| முதுவேனில் கோடை | கிரீஷ்ம | மேட்டிமை | ஜம்ப |
| கார்காலம் | வர்ஷ | மக்கள் குழு | ஜனதி |
| கூதிர்காலம் | ஷரத்ருது | கடல் | ஜலதி |
| கிழக்கு | பூர்வ | பிறப்பு | ஜனன |
| தெற்கு | தக்ஷிண | தங்குமிடம் | ஜாக |
| வடக்கு | உத்தர | வாழ்க்கை | ஜீவன |
| தொலைவு | தூர | காய்ச்சல் | ஜ்வர |
| தொழு | பூஜி | தீச்சுடர் | ஜ்வாலெ |
| கொடிய | க்ரூர | மெய்யுணர்வு | தத்வ |
| | | தடைவிடை | தர்க்க |
| | | சூழ்ச்சி | தாந்திர |
| | | விண்மீன் | தாரகெ |

| தமிழ் | கன்னடம் | தமிழ் | கன்னடம் |
|---|---|---|---|
| மிடுக்கு | தீவ்ரதி | உண்மை | நிஜ |
| கூர்மை,கடுமை | தீட்சண | சேறு | பங்க்க |
| வலிமை | த்ராணி | வட்டாரம் | ப்ராந்த |
| பல் | தந்த | உறவினர் | பந்து |
| வறுமை | தரித்ர | பொறி | யந்த்ர |
| ஏழை | தீன | கொடி | லதெ |
| விளக்கு | தீப | நலம் | ஸுக |
| செல்வம் | தன | வணிகர் | வ்யாபாரி |

3. மலையாள மொழியில் தள்ள முடியாதபடி வழக்கில் உள்ள சமசுகிருதச் சொற்கள் சில வருமாறு:-

| தமிழ் | மலையாளம் | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| அகவை (வயது) | ப்றாயம் | வரலாறு | சரித்ரம் |
| பறவை | பக்ஷி | முறைகேடு | அக்ரமம் |
| விலங்கு | ம் ருகம் | சொற்பொழிவு | உபன்யாஸம் |
| குலம் | ஜாதி | இலக்கியம் | க்ரந்தம் |
| ஆற்றல் | சக்தி | பட்டறிவு | அநுபவம் |
| ஊர்திகள் | வாகனங்கள் | மாந்தன் | மனுஷ்யன் |
| வானூர்தி | விமானம் | தனித்தன்மை | ப்ரத்யேகம் |
| ஓவியம் | சித்ரம் | அசைவு | சலனம் |
| நட்பு | ஸ்நேஹம் | பற்றின்மை | நைராச்யம் |
| இன்றியமை | | பேச்சு | ஸம்ஸாரம் |
| யாமை | முக்யம் | பருவம் | ருது |

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| இளவேனில் | வசந்தம் |
| கோடை | க்ரீஷ்மம் |
| இயற்கை | ப்ரக்ருதி |
| மணித்துளி | நிமிஷம் |
| நடு நிசி | அர்த்த ராத்ரி |
| வைகறை | உஷத் |
| மாலைநேரம் | ஸந்த்ய |
| உறவு | பந்தம் |
| கணவன் | பர்த்தாவு |
| மனைவி | பார்ய |
| அண்ணன் | சேட்டன் |
| தம்பி | அனியன் |
| அக்காள் | சேடத்தி |
| தங்கை | அணியத்தி |
| பேரன் | பௌத்ரன் |
| பேர்த்தி | பௌத்ரி |
| கலம் | பாத்ரம் |
| மாணவன் | வித்தியார்த்தி |
| ஆசிரியர் | அத்யாபகர் |
| இறைச்சி | மாம்ஸம் |
| முடிதிருத்துவோன் | க்ஷுரகன் |

| தமிழ் | மலையாளம் |
|---|---|
| உழவன் | க்ருஷிக்காரன் |
| கணியன் | ஜோத்ஸ்யன் |
| சிற்றூர் | க்ராமம் |
| மகிழ்ச்சி | சந்தோஷம் ஆனந்தம் |
| நலம் | ஸுகம் |
| துணிவு | தைர்யம் |
| அச்சம் | பயம் |
| சினம் | கோபம் |
| அன்பு, நட்பு | ஸ்நேஹம் |
| காதல் | ப்ரேமம் |
| விருப்பம் | இஷ்டம் |
| வழிபாடு | ப்ரார்த்தன |
| பயிற்சி | அப்யாஸம் |
| நன்மணம் | ஸுகந்தம் |
| நீர்க்கோவை | ஜலதோஷம் |
| பகைவன் | சத்ரு |
| முடியாமை | அஸாத்யம் |
| வெள்ளைத் தொழுநோய் | குஷ்டம் |
| உதவி செய்பவர் | உபகாரி |
| ஏளனம் செய் | பரிஹஸி |
| வெளிப்படை | ப்ரஸித்தம் |
| பலரறிபெருமை | |

| தமிழ் | மலையாளம் | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| மக்கள் | ப்ரஜ | வேலை,அலுவல் | உத்யோகம் |
| உடன் பிறப்பு | ஸஹோதரம் | புறக்கணிப்பு | உதாஸீனம் |
| நீங்கல் | நிவ்ருத்தி | கருவி | உபகரணம் |
| வதை | மர்த்தனம் | உதவி | உபகாரம் |
| தோழன் | ஸஹபாடி | பணிவிடை | உபசாரம் |
| திறமை | ஸாமர்த்யம் | வாழ்க்கை | ஜீவனம் |
| உண்மை | வாஸ்தவம் | பயன் | உபயோகம் |
| செல்வம் | ஸம்பத்து | முனிவர் | ருஷி |
| வறுமை | தாரித்ர்யம் | பரப்பல்,தூற்றல் | ப்ரசரணம் |
| தக்கோன் | யோக்யன் | அரசியல் | ராஷ்ட்ரீயம் |
| அருள்புரிதல் | அனுக்ரஹிக்குக | அருள் | க்ருப |
| | | செயல் | க்ரிய |
| பேரவா | அதிகாங்க்ஷ | துயரம் | சஞ்சலம் |
| அருமை | அத்புதம் | வெற்றி | ஜயம் |
| தூய்மை, ஒழுக்கம் | ஆசாரம் | அசையும் பொருள் | ஜங்கமம் |
| ஆணை | ஆக்ஞ | விழிப்புணர்வு | ஜாக்ரத |
| ஆளுகை | ஆதிபத்யம் | செரித்தல் | ஜீர்ணிக்குக |
| குருடு | ஆந்த்யம் | தீச்சுடர் | ஜ்வால |
| சோர்வு | ஆயாசம் | தீயொளி | ஜோதி |
| (ஐம்)பொறி | இன்ரியம் | மெய்யுணர்வு | தத்வம் |
| முனைப்பு | உக்ரத | விண்மீன் | தாரம் |
| எச்சில் | உச்சிஷ்டம் | மிடுக்கு | தீவ்ரத |
| திருவிழா | உத்ஸவம் | புல் | த்ருணம் |

| தமிழ் | மலையாளம் | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| ஒளி, பளபளப்பு | தேஜஸ் | அன்பன் | பக்தன் |
| கெட்ட | துர் | சுமை (கனம்) | பாரம் |
| தீயவன் | துஷ்டன் | ஆழி | மோதிரம் |
| செல்வம் | தனம் | ஏமாற்று, மட்டம் | மோசம் |
| இழப்பு | நஷ்டம் | பித்து அவா | மோஹம் |
| தேர்வு | பரீக்ஷ | வாளாமை | மௌனம் |
| புலமை | பாண்டித்யம் | இயல்பு, உண்மை | யதார்த்தம் |
| தந்தைவழிச் செல்வம் | பிதுரார்ஜிதம் | பொறி | யந்த்ரம் |
| நல்வினை | புண்யம் | வேள்வி | யாகம் |
| ஆண்மை | புருஷத்வம் | குருதி | ரத்தம் |
| வழிபாடு | பூஜ | தேர் | ரதம் |
| முழுமை | பூர்ணம் | மறைவு, கமுக்கம் | ரஹஸ்யம் |
| பழைய | பூர்வ | மயிர் | ரோமம் |
| இணக்கம் | சம்மதம் | நோய் | ரோகம் |
| ஒளி | ப்ரகாசம் | திருவிளையாட்டு | லீல |
| உணர்வு நினைவு | பிரஜ்ஞ | சொல்லுறுதி | வாக்தத்தம் |
| காதல் | ப்ரணயம் | மருத்துவம் | வைத்யம் |
| சிலை | ப்ரதிம | அமைதி | சாந்தம் |
| சான்று (ஆதாரம்) | ப்ரமாணம் | உள்ளச்சோர்வு | சோகம் |
| பிள்ளைப்பேறு | ப்ரசவம் | அழிமொழி | சாபம் |

| தமிழ் | மலையாளம் | தமிழ் | மலையாளம் |
|---|---|---|---|
| குழந்தை | சிசு | மீதம் | சிஷ்டம் |
| குளிர் | சீதம் | மங்கலம் | சுபம் |

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளும், சில சமசுகிருதச் சொற்களை முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளன. ஒரு சில சமசுகிருதச் சொற்களை, தத்தம் மொழிச் சொற்களின் இறுதியில் உள்ளாங்கு சிறு சிறு மாறுதல்கள் செய்து ஏற்றுக்கொண்டுள்ளன. இன்னும், இவ்வாறு, இம் மும் மொழிகளிலும் புகுந்து கொண்டிருக்கும் சமசுகிருதச் சொற்கள் மிகப்பலவாகும்.

# அடிவேர் ஆய்வுப் போதை

மேலே தந்துள்ள அட்டவணைகளில் உள்ள சமசுகிருதச் சொற்களை நீக்கிவிடின்,இம்மொழிகள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்னும் 'இமாலய' உண்மையைக் காப்பாற்றிக் கொள்ளத் தமிழ் மொழிக்கே வந்தாக வேண்டும். இம்மொழிகள் சமசுகிருதச் சொற்கட்குப்பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பெற்றுக்கொள்வது என்பது, இடையிலே இழந்து விட்ட தம் பழைய சொற்களை மீண்டும் பெற்றுக் கொள்வதாகவே பொருள்படும். இங்கே தாழ்வு மனப்பான்மைக்கு இடமில்லை.

இவ்வளவு சான்றுகளும் கருத்துகளும் அறிவித்த பிறகாயினும், தொல் திராவிட மொழி என்பது இப்போதுள்ள எழுத்துத் தமிழே என்பதை, மொழியியலாருள் மாற்றுக் கொள்கையுடையவர்களா யிருப்பவர்கள் தம் கொள்கையை மாற்றிக் கொண்டு ஏற்றுக் கொள்வார்களா? கையில் இருக்கும் வெண்ணெயை மறந்து நெய்க்கு அலைவது ஏன்? தோளின் மேல் துணியைப் போட்டுக் கொண்டு வீடு முழுவதும் தேடுவோரும் உண்டு. முழங்கையில் மாட்டிக் கொண்டிருப்பதை மறந்து குடையை வெளியில் தேடுவோரும் உளர். எழுத்துத் தமிழை மறந்து வேறு தொல் திராவிட மொழி தேடுவோரும் இன்னவரேயாவர்.

**அடிவேர் ஆய்வு:**

திராவிட மொழியியல் ஆராய்ச்சியாளருள் சிலரிடமுள்ள ஒருவகைக் குறையை இங்கே குறிப்பிடவேண்டிய கடமை உள்ளது. அவர்கள் தொல் திராவிட மொழி என்னும் ஏதோ ஒரு மொழி மறைந்து விட்டதாக எண்ணிக்கொண்டு, தாம் செய்யும் சொற்களின் அறுவை

(ஆப்ப ரேஷன்) மருத்துவத்திற்குத் தொல் திராவிட மொழியில் தக்க ஆதாரம் இருக்கலாம் எனச் சில வேளைகளில் கருதுவதாகத் தோன்றுகிறது.

சொற்களின் அடிவேர்ப் பகுதிகளை ஆராய்வதிலும் அதற்குத் தொல் திராவிட மொழி கிடைப்பின் துணை புரியும் என எண்ணுவதிலும் காலத்தையும் முயற்சியையும் கொன்னே கழிக்கின்றனர். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போலவும், அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் தொடர்பு காட்டுவது போலவும், ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத சில சொற்களைத் தொடர்புடையன போல் இணைத்துக் கொண்டு, அவற்றிற்குப் பொதுவான ஒரு வேர்ச் சொல் - ஓர் அடிச் சொல் எடுத்துக் காட்டுகின்றனர்; அந்த அடிச் சொல்லிலிருந்துதான் குறிப்பிட்ட மற்ற சொற்கள் தோன்றின என்றும் கூறுகின்றனர்.

**உளவியல் முறை:**

இங்கே ஓர் அடிப்படை உண்மையை அறிந்து கொள்ள வேண்டும். தொடக்கத்தில் மொழி பேசியவர்கள் எந்த ஒரு வேர்ச் சொல்லையும் அடிப்படை யாகக் கொண்டு சொற்களை உண்டாக்கி மொழி பேசவில்லை. எழுத்தா லானது சொல்-சொல்லால் ஆனது சொற் றொடர்—என்னும் காரண காரிய (Logic Method)முறையில் ஆராய லாகாது. சொற்றொடரிலிருந்து சொல்லுக்கும் சொல்லிலிருந்து அடிவேருக்கும் போகும் உளவியல் முறையே(Psychological Method) உண்மையானது-இயற்கையானது.

தொடக்கக் காலத்தில் மக்கள், "அ...ம்...மா" என எழுத்து எழுத்தாகப் பேசியிருக்கமாட்டார்கள். மற்றும், "அம்மா ......சோறு... போடு" எனச் சொல் சொல்லாகவும்

பேசியிருக்க மாட்டார்கள். "அம்மா சோறு போடு" எனச் சொற்றொடராகவே (வாக்கியமாகவே)பேசியிருப்பர். தனி எழுத்துக்குப் பொருளோ-மதிப்போ இல்லை; அது சொல் வில் சேர்ந்த போதுதான் மதிப்பு பெறுகிறது.இதுபோலவே தனிச்சொல்லுக்கும் மதிப்பு இல்லை;அது சொற்றொடரில் சேர்ந்த போதுதான் மதிப்பு பெறுகிறது. இப்போதும் மக்கள் சொற்றொட ராகத்தான்பேசுகின்றனர். சிலவேளை யில், 'அம்மா' என்று ஒரு சொல் மட்டும் கூறினால், 'அம்மா சோறு போடு' – 'அம்மா காசு கொடு' – என்பன போல் ஏதோ ஒரு சொற்றொடரே அடங்கியிருப்பதாகப் பொருள் கொள்ளல் வேண்டும்.'தண்ணீர்' என்று கூறினால் 'குடிக்கத் தண்ணீர் கொண்டுவா' என்ற சொற்றொடர் அதில் மறைந்திருப்பதைச் சில வேளையில் அறியலாம். எனவே, சொற்றொடரிலிருந்து சொல்லுக்குப் போதல் வேண்டும்.

**இயற்கைத் தோற்றம்**

மக்கள் இயற்கையாகப் பேசிய சொற்களில் தற்செய லாக ஒரு பொது அடிச்சொல் அமைந்து கிடக்கிறது. அடுப்பு, அடுக்களை, அடிசில், அடை, ஆடு (சமையல்) என்னும் சொற்கள் ஆங்காங்கிருந்த மக்கள் இயற்கை யாகப் பேசியவை. இதன்வேர்ச் சொல்லாக 'அடு' என்பதைச் சொல்லலாம். அடுதல் என்றால் சமைத்தல்.

"அடுதல் கோறல் சமைத்தலும் ஆகும்"

என்பது திவாகர நிகண்டு நூற்பா. குறிப்பிட்ட மக்கள் சிலர் ஒன்று சேர்ந்து கூட்டம் போட்டு, 'அடு' என்னும் வேர்ச் சொல்லிலிருந்து என்னென்ன சொற்கள் உருவாக் கலாம் என்று கலந்து பேசிப் பின்னர் அடுப்பு,அடுக்களை, அடிசில், அடை, ஆடு ஆகிய சொற்களை உருவாக்க

வில்லை. ஒரு வேர்ச் சொல்லிருந்து பிறந்ததாகக் கருதப் படும் வேறு சொற்களும் இத்தகைய முறையில் இயற்கை யாகத் தோன்றியவையே.

**கிளைகளின் தொகுப்பு:**

தென்னிந்தியாவில் உள்ள பல திராவிட மொழிகட்கும் பொதுவான தொல் திராவிட மொழி (எழுத்துத் தமிழ்) எவ்வாறு தோன்றியிருக்க முடியும். அந்தந்த வட்டாரத்தில் மக்கள் ஒவ்வொரு விதமாகப் பேசி வந்தனர். தொடர்புடைய இந்த வட்டார மொழிகள் கிளை மொழிகள் எனப்படும். பல வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் பயன் கருதி ஒன்று சேரும் போது எல்லா வட்டார மொழிகளும் கலந்துவிடுகின்றன. எனவே, பலகிளை மொழிகளின் தொகுப்பே ஒரு பொது மொழி எனலாம்.

**ஒரு பொருள் பல் பெயர்கள்:**

ஒரே பொருளுக்குப் பல பெயர்கள் தோன்றியது எவ்வாறு? ஒரு வட்டாரத்தினர் 'மலை' என்றனர்; இன்னொருவர் 'வரை' என்றனர்; மற்றொருவர் வெற்பு என்றனர். ஒரு பகுதியினர் 'கடல்' என்றனர். இன்னொருவர் 'ஆழி' என்றனர்; மற்றொருவர் 'புணரி என்றனர். இவ்வாறே ஒரு பொருளுக்குப் பல பெயர்கள் ஏற்பட்டன. எல்லாப் பகுதியினரும் கலந்துவிட்டபோது ஒரே பொருளைக் குறிக்கும் 'ஒரு பொருள் பல் பெயர்கள்' ஏற்பட்டன.

**ஒரு சொல் பல் பொருள்கள்:**

ஒரு பகுதியினர் கப்பலைக் கலம் என்றனர்; இன்னொருவர் உண்ணும் பாத்திரத்தைக் கலம் என்றனர்; மற்றொருவர் நகையைக் கலம் (அணிகலம்) என்றனர்;

வேறொருவர் ஆயுதத்தைக் கலம் (படைக்கலம்) என்றனர்; மேலும்ஒருவர் ஒரு முகத்தல் அளவைக் கலம் (கல நெல்) என்றனர். ஒரு பகுதியினர் கோலைக் கழி என்றனர்; இன்னொருவர் உப்பாற்றைக் கழி என்றனர். மற்றொருவர் மிகுதியைக் கழி என்றனர்; வேறொருவர் கழிதல்-கழித்தல் வினையைக் கழி என்றனர். இவ்வாறு ஒரே சொல்லே பல பொருள்களைக் குறித்தன. எல்லாப் பகுதியினரும் கலந்து விட்ட பின்னர், இந்த அமைப்புக்கு 'ஒருசொல் பல் பொருள்கள்' என்னும் பெயர் வழங்கப் பட்டது.

**இலக்கிய வழக்கு:**

ஒரு பகுதியினர்க்கு இலக்கிய வழக்குச் சொல்லாக இருப்பது, இன்னொரு பகுதியினர்க்கு அன்றாடப் பேச்சு வழக்குச் சொல்லாக இருப்பதும் உண்டு. ஒரு பொருளை இரவல் கொடுத்து, அந்தப் பொருளை அதே அளவில் திரும்பப் பெறுவதற்குக் 'குறி யெதிர்ப்பை' என்பது பெயர். இதனை,

> ''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து-(221)

என்னும் குறளால் அறியலாம். இந்தச் சொல் சேலம் மாவட்டம் போன்ற சில பகுதிகளில் அன்றாட வழக்கா யுள்ளது. அகழ்தல் என்பதற்குத் தோண்டுதல் என்பது பொருள்.

> ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை''-(151)

என்னும் குறளால் இதனை அறியலாம். இது, தஞ்சை மாவட்டம் போன்ற சில பகுதிகளில் அன்றாட வழக்கா

கும். இலக்கியங்களைப் படிப்பதன் வாயிலாக எல்லாப் பகுதியினர்க்கும் எல்லாச் சொற்களும் அறிமுகம் ஆகின்றன. இவ்வாறே திராவிட மொழிகளின் சொற்கள், மக்கள் கலக்கும்போது ஒன்றோ டொன்று அறிமுகம் ஆகித் தொடர்புடைய ஒரு மொழிச் சொற்களாகக் காட்சி தரு கின்றன. இந்த உண்மைகளை யெல்லாம் மொழியியலார் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

சிலர், தொடர்பு ஒரு சிறிதும் இல்லாத சொற்களை அடிச்சொல் கண்டுபிடிப்பதன் வாயிலாகத் தொடர்பு படுத்தவும் அதற்கு உறுதுணையாகத் தொல்திராவிடம் கண்டு பிடிக்கவும் எடுத்துக்கொள்ளும் முயற்சியைக் குறைத்துக்கொண்டு, கருத்து. ஆராய்ச்சியிலும் ஒரு சிறிதா வது காலத்தைச் செலவிடின், அச்செயல் பொது மக்கட் குப் பயனளிக்கும். யான் இவ்வாறு கூறுவதற்குக் காரணம், நேரில் கண்டு பெற்ற ஒரு பட்டறிவு (அனுபவம்) ஆகும். அது வருக:

**விளக்கும் வெளக்கும்:**

ஒரு கருத்தரங்கில் பேசிய மொழியியல் தொடர்புடைய ஓர் அறிஞர், 'வெளக்கு' என்பதிலிருந்துதான் 'விளக்கு' என்பது வந்தது என்று கூறினார். வெள்ளை, வெளிச்சம் என்பவற்றின் வேர்ச் சொல் 'வெள்' என்பதாகும்; எனவே, வெளிச்சம் தரும் விளக்குக்கும் 'வெள்' என்பதே அடிச் சொல்லாகும். எனவே வெளக்கு என்பதுதான் விளக்கு என்பதாயிற்று என்பது போல ஏதேதோ பேசினார். விளக்கு என்றதும் 'விள்' என்பதும், வெளிச்சம் என்றதும் 'வெள்' என்பதும் மொழியியலார் சிலர்க்கு நினைவுக்கு வந்து விடு கின்றன. விள், வெள் என்பவற்றை முதலில் உண்டாக்கிக் கொண்டு, பின்னர் விளக்கு, வெளிச்சம் என்றசொற்களைத் தொடக்கக் கால மக்கள் உண்டாக்க வில்லை; அவர்கள்

இயற்கையாகப் பேசிய அச்சொற்களைக் கண்டதும், நாமாக விள் – வெள் – விள் – வெள் எனச் 'செபம்' செய்கிறோம் – உருவேற்றுகிறோம்.

சொற்பொழிவாளர் பேசி முடித்ததும், யான் எழுந்து, வெளக்கு விளக்காகவில்லை – விளக்குதான் வெளக்கு ஆயிற்று என்று சில கூறி விளக்கினேன். யான் அமர்ந்ததும், மேலும் சிலர், வெளக்கு என்பதுதான் விளக்கு ஆயிற்று என்று சொற்பொழிவாளரின் கருத்தை ஏற்றுக் கொண்டு, அவர் புதிய புரட்சியான ஆராய்ச்சி செய்துள்ளார் என்று கூறி அவரைப் பாராட்டவும் செய்தனர். மொழியியல் ஆய்வின் பேரால் நடக்கும் தமிழ்க் கொலையை எண்ணி யான் வேதனை யடைந்தேன்.

பின்னர் வேறொரு நாள் நடந்த கருத்தரங்கில், ஒருவர், வெளக்கு என்பதே விளக்கு என்றாயிற்று எனக் கூறிப் பழைய குப்பையைக் கிளறினார். ஏதோ பேச்சுப் போக்கில் இதை அவர் கூற நேரிட்டது. உடனே நான் எழுந்து பேசுகையில், விளக்கு என்பதே வெளக்கு என்றாயிற்று என்னும் என் கருத்தை அடித்துப் பேசி அனைவரையும் ஏற்றுக் கொள்ளச் செய்ய முயன்றேன். எனது கருத்துக்கு உரிய உண்மையான – அடிப்படையான – இயல்பான சான்றினை இங்கேயும் தருகிறேன்; அது வருமாறு:

'இ' என்பதோ, அல்லது மெய்களின்மேல் 'இ' ஏறிய உயிர்மெய் எழுத்துகளாகிய கி,சி,தி,நி,பி,மி,வி என்னும் மொழிமுதலில் வரும் எழுத்துகளுள் ஒன்றோ ஒரு சொல்லின் முதல் எழுத்தாக இருக்கவேண்டும்; அச்சொல்லின் இரண்டாவது எழுத்தாக, மெய்யெழுத்துகளில் அ,ஆ,ஐ என்னும் மூன்று உயிர்களும் ஏறிய உயிர்மெய் எழுத்துகளாகிய க,கா,கை-ச,சா,சை-ட,டா,டை – ண,ணா,ணை-த

தா,தை – ந,நா,நை – ப,பா,பை-ம,மா,மை – ய,யா,யை – ர,ரா,ரை-ல,லா,லை – வ,வா,வை-ழ,ழா,ழை-ள,ளா,ளை – ற,றா,றை – ன,னா,னை-என்னும் எழுத்துகளுள் ஏதாவது ஒன்று இருப்பின், மொழி முதலில் உள்ள 'இ' என்பது 'எ' எனத் திரியும். இது கொச்சைப் பேச்சு உருவமாகும். இதற்கு எடுத்துக்காட்டுகள் வருமாறு:

இரங்கு-எறங்கு, இறால்–எறால். இலை-எல; கிழவன்–கெழவன்,-கிடா – கெடா-கிளை – கெள; சிரங்கு-செரங்கு, சிணாறு – செணாறு, சிலை – செல; திற-தெற, திடாரிக்கம்-தெடாரிக்கம், திரை – தெர; நிலம்-நெலம், நிலா – நெலா, நினைப்பு-நெனப்பு; பிசகு-பெசகு, பிலாக்கு – பெலாக்கு, பிழை-பெழ; மிதப்பு – மெதப்பு, மிலாறு – மெலாறு, மிகை-மெக (கை); விறகு-வெறகு, விளக்கு-வெளக்கு, விலா – வெலா விலை – வெல- முதலியன. பேச்சு வழக்கில் உள்ள சொற்களே இவ்வாறு திரியும்.

இன்னும் இவ்வாறு ஏராளமான எடுத்துக்காட்டுகள் உண்டு. வெளக்கு விளக்காயிற்றெனின், வெறகு விறகாயிருக்கவேண்டும் – நெலம் நிலமாயிருக்க வேண்டும் – கெழவன் கிழவனாயிருக்கவேண்டும். இவ்வாறு எத்தனைச் சொற்கட்கு அணை போடுவது? எனவே, இத்தகைய இடங்களில் இகரமே எகரமாகும். எகரம் இகரம் ஆகாது – என்பது முற்ற முடிந்த துணிபு. ஆகவே, வெளக்கு விளக்கு ஆகவில்லை; விளக்குதான் வெளக்கு ஆயிற்று என்பது எனது துணிவான தீர்ப்பு. இவ்வாறெல்லாம் அடிச்சொல் (வேர்ச்சொல்) கண்டு சொல்லாய்வு செய்யும் மொழியியல் பெருமக்கள் தம் போக்கை மறு ஆய்வு செய்யும்படி பணிவுடன் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டுமானால், இதற்கு இணை - துணைச் சான்றாக, இதனோடு ஒத்த இன்னொரு வகை வழக்காற்றையும் ஈண்டு தருவேன் - அஃதாவது:

'உ' என்பதோ, அல்லது, மெய்களின் மேல் 'உ' ஏறிய உயிர்மெய் எழுத்துகளாகிய கு,சு,து,நு,பு,மு என்னும் மொழி முதலில் வரும் எழுத்துகளுள் ஒன்றோ ஒரு சொல்லின் முதல் எழுத்தாக இருக்கவேண்டும். அச்சொல்லின் இரண்டாவது எழுத்தாக, மெய்யெழுத்துகளின் மேல் அ, ஆ,ஐ, ஏறிய உயிர்மெய் எழுத்துகளுள் ஏதாவது ஒன்று இருப்பின், மொழி முதலில் உள்ள 'உ' என்பது ''ஒ' எனத் திரியும். இது கொச்சைப் பேச்சு உருவமாகும். இதற்கு எடுத்துக் காட்டுகள் வருமாறு:

உழவு=ஒழவு. உலாத்துதல்=ஒலாத்தல். உடை=ஒட. குழவி=கொழவி.குழாய்=கொழா. குழை=கொழ. சுடலை =சொடல.சுறா=சொறா.சுனை=சொன.துடை=தொட. துலாம்=தொலாம் துணை=தொண. நுகத்தடி=நொகத்தடி. நுணா=நொணா. நுரை=நொர. புலம்பு=பொலம்பு புறா=பொறா. புகை=பொக. முழம்=மொழம்.முலாம்= மொலாம்.முனை=மொன. இவ்வாறு இன்னும் பல காட்டலாம். பேச்சு வழக்கில் உள்ள சொற்களே இவ்வாறு திரியும். 'உ' என்பது 'ஒ' ஆகத்திரிந்தது போலவே, 'இ' என்பது 'எ' ஆகத்திரிந்தது. எனவே, விளக்கு என்பது வெளக்கு எனத் திரிந்ததே தவிர, வெளக்கு என்பது விளக்கு எனத் திரிய வில்லை.

**போதை:**

வேர்ச்சொல் ஆராய்ந்து காணும் மொழியியல் அறிஞர்கள் அந்த ஆராய்ச்சியில் சுவை காண்கின்றனர். அந்தச் சுவையைக் கெடுக்க நான் விரும்பவில்லை. அந்த

ஆராய்ச்சி, குறிப்பிட்ட சொல் எந்த மொழிக் குடும் பத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்க உதவலாம். மற் றும், ஒரு சொல்லைச் சரியான வடிவத்தில் அமைத்துக் காணவும் துணைபுரியலாம் ஆனால், மொழி ஆராய்ச்சி யாளர்க்கு மகிழ்ச்சிப் பயன் கிடைப்பதைத் தவிர, மற்ற படி, மன்பதைக்கு—மக்கள் சமுதாயத்திற்குக் காது அற்ற ஊசிக்கும் பயன் இல்லை என்பதையும் ஈண்டு சொல்லித் தான் தீரவேண்டும். வேர்ச் சொல் ஆராய்ச்சி ஒரு சிலர்க்கு ஒருவகைப் போதையாகும்.

# மலையாளம் தாயா–சேயா?

இது நிற்க, இங்கே இன்னொரு செய்தியைக் குறிப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். தொல் திராவிட மொழி, எழுத்துத் தமிழ் மொழிதான்–என்று நாம் கூறும் இதே நேரத்தில், மலையாளத்திலிருந்துதான் தமிழ் பிறந்தது என்று ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவது நினைவுக்கு வருகிறது. இதனையும் ஆய்ந்து இதற்கு நாம் மறுப்புப் பதில் சொல்ல வேண்டும்:

**தாயா – சேயா?**

மலையாளத்திலிருந்து தான் தமிழ் பிரிந்தது என்று கூறுவது நம் கொள்கைக்கு மிகவும் அரண் செய்கிறது; அதாவது, இரண்டின் நெருக்கமான பிணைப்பை அறிவிக்கின்றது. தமிழிலிருந்து மலையாளம் பிரிந்தது என்றோ-மலையாளத்திலிருந்து தமிழ் பிறந்தது என்றோ சொல்ல வேண்டிய தில்லை. ஒரு காலத்தில் இரண்டு பகுதிகளிலும் ஒரே மொழி பேசப்பட்டு வந்தது. இப்போதைய தமிழ் நாட்டுப் பகுதியில் பேசப்பட்டது 'தமிழ்' என்னும் பெயராலும், இப்போதைய மலையாளத்தில் பேசப்பட்டது மலை நாட்டுத் தமிழ் – மலையாளத் தமிழ் – மலையாண்மை என்றெல்லாமும் பெயர் வழங்கப்பட்டன. இங்கே, மலையாள நாடு என்பதையும் மீண்டும் நினைவுகூர வேண்டும். முன்னர்க் குறிப்பிட்டுள்ள பல்வேறு காரணங்களால், பிறந்து அன்று – பிரிந்து தனிக் குடும்பம் செய்யத்தொடங்கியது. இதனால் தான், இதிலிருந்து அதுவோ – அதிலிருந்து இதுவோ பிறந்தது என்று சொல்லலாகாது. தாய் சேய் முறை கிடையாது.

**பொது வினைமுற்றுச் சான்று:**

மலையாளத்திலிருந்து தமிழ் பிறந்தது என்பதற்குக் குறிப்பிடப்படும் பெரிய சான்று எது என்றும் பார்த்து விடுவோமே.

தமிழில் உள்ள நடந்தான், நடந்தாள், நடந்தார், நடந்தது, நடந்தன, நடந்தேன், நடந்தோம் என்பன வற்றையெல்லாம் குறிக்க மலையாளத்தில் 'நடன்னு' என் னும் ஒரே சொல் உள்ளது. வளர்ந்தான், வளர்ந்தாள், வளர்ந்தார், வளர்ந்தது, வளர்ந்தன,வளர்ந்தேன், வளர்ந் தோம் எனத்தமிழில் உள்ளனவற்றை யெல்லாம். குறிக்க 'வளர்ன்னு' என்னும் ஒரே மலையாளச்சொல் உள்ளது. இது இறந்த கால வினை முற்று-தமிழில் உள்ள 'செய்து' என்னும் வினையெச்ச வாய்பாடு போல் மலையாள இறந்த கால வினைமுற்று இருக்கும்; இதன் இறுதியில் 'உ' முடிந்திருக்கும்.

தமிழில் உள்ள நடக்கிறான், நடக்கிறாள், நடக்கி றார், நடக்கிறது, நடக்கின்றன, நடக்கிறேன், நடக்கி றோம்-என்பன வற்றை யெல்லாம் குறிக்க மலையாளத் தில் 'நடக்குன்னு' என்னும் ஒரே சொல் உள்ளது. 'வளர் கிறான், வளர்கிறாள், வளர்கிறார், வளர்கிறது, வளர்கின் றன, வளர்கிறேன், வளர்கிறோம் எனத் தமிழில் உள்ளன வற்றை யெல்லாம் குறிக்க, மலையாளத்தில் 'வளருன்னு' என்னும் ஒரே சொல் உள்ளது. இது நிகழ்கால வினை முற்று. இதன் இறுதியில் 'உன்னு' என்பது முடிந்திருக் கும்.

தமிழில் உள்ள நடப்பான், நடப்பாள், நடப்பார், நடக் கும், நடப்பேன், நடப்போம்-என்பனவற்றையெல்லாம் குறிக்க, மலையாளத்தில் 'நடக்கும்' என்னும் ஒரே சொல்

இருக்கிறது. வளர்வான், வளர்வாள் வளர்வார், வளரும், வளர்வேன், வளர்வோம்,-எனத் தமிழில் உள்ளன வற்றை யெல்லாம் குறிக்க, மலையாளத்தில் 'வளரும்' என்னும் ஒரே சொல் இருக்கிறது. இது எதிர்கால வினை முற்று. இதன் இறுதியில் 'உம்' முடிந்திருக்கும்.

மேலுள்ள எடுத்துக் காட்டுகளால் அறியப்படுவது: தமிழில், வினைமுற்றில். உயர்திணை-அஃறிணை, ஆண் பால் - பெண்பால், ஒருமை - பன்மை, தன்மை-படர்க்கை என்ற பாகுபாடுகள் உள்ளன. ஆனால், மலையாளத்தில் எந்தப் பாகுபாடும் இல்லை. எல்லாவற்றிற்கும் பொது வாக ஒரே வினைமுற்றே உண்டு-என்பதாம்.

**குழந்தை ஒப்புமை:**

இந்த அமைப்பைக் கொண்டு சிலர் கூறுவதாவது:- குழந்தைகளிடம் சொல்வளம் கிடையாது. குழந்தை குறைந்த சொற்களைக் கொண்டே பலபொருள்களைச் சுட்டும். தாத்தாபோல் இருக்கும் மாமாவும் தாத்தாதான். பாட்டிபோல் இருக்கும் அத்தையும் பாட்டிதான். அம்மா போல் இருக்கும் பெண்கள் எல்லாரும் அம்மாதான்- அக்கா - அண்ணன் - தம்பி போல் இருக்கும் எல்லாரும் அக்காதான் - அண்ணன்தான் - தம்பிதான். பெயர்ச்சொற் களின் நிலை இதுவெனில், வினை முற்றுகளின் நிலையும் இது போன்றதே. அம்மா வந்திச்சி, அப்பா அடிச்சுது, அக்கா கொடுத்திச்சி, அண்ணன் சொல்லிச்சி, மாடுங்க வந்திச்சி, நான் வாங்கிச்சி - எனக் குழந்தைகள் திணை, பால், எண், இட வேற்றுமை யின்றி எல்லாரையும் ஒரே மாதிரியாகக் குறிக்கும். குழந்தைகளின் மற்ற பேச்சுகளும் கொச்சையாயிருக்கும். குழந்தைகள் வளர வளரப் பேச்சு திருத்தமா யிருக்கும்.

இவ்வாறே, மலையாளத்தில் எல்லாவற்றிற்கும் ஒரே வினைமுற்று இருப்பதும்-கொச்சை வடிவங்கள் இருப்பதும் மலையாளம் தொடக்கக் காலப் பழைய மொழியாகும் என்றும், தமிழ் மொழியும் தொடக்கத்தில் இப்படித்தான் இருந்திருக்கும் என்றும், குழந்தை வளர வளரத் திருத்த மாகப் பேசுவதுபோல் நாளாக நாளாகத் தமிழில் திணை பால் - எண் - இடப் பிரிவுகள் ஏற்பட்டன என்றும், இத னால் தமிழுக்கு முந்திய, மொழி மலையாளம் என்றும், எனவே, மலையாளத்திலிருந்துதான் தமிழ் பிறந்தது என் றும், சிலர் கூற இடம் தருகின்றன.

**மலை வாணர் மொழி:**

இந்தக் குழந்தை ஒப்புமையைக் கொண்டு, மலையா ளப் பகுதியில் இருந்தவர்கள் திருத்தம் பெறாமல் மலை களில் வாழும் மக்களைப்போல் கீழ்நிலையிலேயே இருந்து விட்டனர் என்றும், தமிழ் நாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர் கள் தொடக்கத்தில் திருந்தாமொழி பேசினாலும், நாளடைவில் வளர்ச்சி ஏற்பட ஏற்பட மொழியில் தக்க சீர் திருத்தம் மேற்கொண்டனர் என்றும் கூறலாம் அல்லவா? மலையாளிகளாகிய ஒரு பகுதியினர் மட்டும் எவ்வாறு மொழித் துறையில் கீழ்நிலையில் இருக்க முடியும்?-என்று கேட்கலாம். இன்றும், மலைகளில் வாழும் நாகரிக மற்ற மக்கள் மொழித்துறையில் ஏன்-எவ்வாறு கீழ் நிலையில் உள்ளனர்?-என்று ஆராய்ந்து எண்ணிப் பார்த்தால் இதற் குத் தக்க பதில் கிடைத்து விடும். தமிழ்மொழியில் எழுத்து களும் இலக்கியங்களும் தோன்றியதற்குச் சில ஆயிரம் ஆண்டுகள் பின்னரே, மலையாளத்தில் எழுத்துகளும் இலக்கியங்களும் உருவாயின என்பதையும் ஈண்டு நினைவு கூர வேண்டும்.

பல்வேறு மலைப் பகுதிகளில் எழுத்தே யில்லாத திராவிடக் குடும்ப மொழிகள் பேசி வாழும் நாகரிக மற்றவர்களின் மொழிகள் கூடத்தான் கொச்சை வடிவத்தில் உள்ளன. இந்தமொழிகளிலிருந்து தமிழ் பிறந்தது என்று கூறுவதா? மலையாளத்திலிருந்து தமிழ் பிறந்தது என்பதும் இதுபோலவே பொருந்தாக் கூற்றாகும்.

**ஆங்கில ஒப்புமை:**

ஆங்கிலத்தில், I go, we go, you go, you go, they go எனத் தன்மை ஒருமைக்கும் பன்மைக்கும் முன்னிலை ஒருமைக்கும் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் நிகழ் காலத்தில் 'go' என்னும் ஒரே வினை முற்று உள்ளது. He goes, she goes, it goes எனப் படர்க்கை ஒருமைக்கு மட்டும் நிகழ்காலத்தில் goes என்பது பொதுவினை முற்றாக உள்ளது. படர்க்கை ஒருமைக்கு மட்டும் இவ்வாறு வேறுபட்டிருப்பதை டச்சுக்காரர்கள்(ஃஆலந்துக்காரர்கள்) குறை சொல்லுவார்களாம்.

தமிழில் உள்ள, நீ, நீங்கள் என்னும் முன்னிலை ஒருமைக்கும் பன்மைக்கும் ஆங்கிலத்தில் you என்னும் ஒரே சொல் பயன்படுகிறது. தமிழில் ஒருவரையே சிறப்பு (மரியாதை) கருதி நீங்கள் எனக் குறிப்பிடுவதை ஆங்கிலேயர்-ஐரோப்பியர் சிலர் குறை கூறுகின்றனராம். மக்களுக்குள் உயர்வு தாழ்வுப் பாகுபாடு எதற்கு? எல்லாரையும் சமமாக நீ அல்லது நீங்கள் என்னும் ஒரு சொல்லால் குறிப்பிடுவதே முறை-என்று கூறுகிறார்களாம். ஆங்கிலத்திலும் இத்தகைய குறைபாடு ஒன்று உள்ளது என்பதை அவர்கள் மறந்து விட்டனர். எப்பேர்ப்பட்டவர்களையும் he (அவன்), She (அவள்) என்னும் ஒருமைச் சொல்லால் குறிப்பிடினும், கடவுளைக் குறிக்கும் போது Him, His எனப் பெரிய H எழுத்து இட்டு எழுதுகின்

றனர். மக்களுள் உயர்ந்த துறவியர் பற்றி எழுதும்போது His Holiness எனப் பெரிய H எழுத்தைப் பயன்படுத்து கின்றனர். உயர்ந்த நாடாளும் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடுங்கால், His Highness His Excellency எனப் பெரிய H எழுத்தை எழுதுகின்றனர். எனவே, தமிழில் ஒருவரை நீங்கள் எனச் சிறப்புப் பன்மையால் குறிப்பிடுவதில் குறைவு இல்லை. எனவே, இத்தகைய அமைப்புகளைக் கொண்டு, மொழிகட்கு உயர்வு தாழ்வோ – பழமை புதுமையோ கற்பித்தலாகாது.

## தமிழிலும் பொதுமை

அவ்வளவு ஏன்? தமிழிலும் இத்தகைய பொதுமை இருப்பதை மறப்பதற்கில்லை. தமிழகத்தில் சில பகுதி களில், பேச்சு வழக்கில். அம்மா வந்தது, அப்பா சொல் லிச்சி, அத்தை வந்தது, மாமா கொடுத்தது, அக்கா சொல்லிச்சி, அண்ணன் சொல்லிச்சி, தம்பி சொல்லிச்சி, தங்கச்சி சொல்லிச்சி, நாத்தனார் சொல்லிச்சி, கொழுந் தனார் சொல்லிச்சி, கொழுந்தியாள் சொல்லிச்சி, மருமகன் சொல்லிச்சி, மருமகள் சொல்லிச்சி, ஆயா சொல்லிச்சி, ஜனங்கள் கூடிச்சி, மாடுகள் கூடிச்சி, கிளிகள் பேசிச்சி-என் றெல்லாம், உயர்திணை-அஃறிணை, ஆண்பால்-பெண்பால், ஒருமை-பன்மை ஆகிய எல்லாவற்றையும் அஃறிணை-ஒருமைப் படர்க்கை வினைமுற்றால் குறிப்பிடும் வழக்காறு கள் உள்ளன.

இவ்வாறு, அத்தை சொல்லிச்சி, மாமா சொல்லிச்சி, அக்கா சொல்லிச்சி, அண்ணன் சொல்லிச்சி, பாப்பா சொல்லிச்சி, ஆயா சொல்லிச்சி என்றெல்லாம் பொதுமை வினைமுற்றுப் போட்டுப் பேசும் வழக்காறு இன்றும் எங்கள் குடும்பத்திலும் உண்டு. ஒருவேளை, எங்கள்

குடும்ப மொழியிலிருந்துதான் தமிழ் மொழி தோன்றிற்று என்று யாராவது சொல்லக் கூடுமோ?

**'செய்யும்' வாய்பாடு:**

பேச்சு வழக்கில் என்றென்ன. தமிழில் (எழுத்து வழக்கில்) இலக்கிய வழக்கில் கூட இவ்வாறு ஒரு வகைப் பொதுமை உண்டு. அவன் செய்யும், அவள் செய்யும், அது செய்யும், அவை செய்யும் எனச் 'செய்யும்' என்பதே ஆண்பால்—பெண்பால், ஒருமை-பன்மை ஆகியவற்றிற்குப் பொதுவாய் வழங்கப்படுகிறது. அதாவது, பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகியவை தவிரப் படர்க்கையில் மற்றவற்றிற்கெல்லாம் பொதுவாய் வரும். இத்தகைய வினை முற்றுகள் 'உம்' விகுதியில் முடியும். 'உம்' விகுதியில் முடியும் இத்தகைய வினை முற்றுகளை இலக்கணத்தில் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று என்பர். இதற்கு இலக்கணத்திலும் உரிமம் (லைசென்சு) தரப்பட்டுள்ளது-:

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா"

என்பது தொல்காப்பிய நூற்பா(277).

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில்
செல்லா தாகும் செய்யும் என் முற்றே"
இது நன்னூல் நூற்பா (346).

அதாவது, பலர்பால் படர்க்கை, தன்மை, முன்னிலை ஆகியவை தவிர்த்த மற்ற இடங்களில் 'உம்' விகுதியில் முடியும் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினை முற்று பொதுமையாய் வரும் என்பது இவற்றின் கருத்து.

**வியங்கோள்**

தமிழில், நான் வாழ்க-வாழிய-வாழியர், நாம் வாழ்க-வாழிய-வாழியர், நீவாழ்க-வாழிய-வாழியர், அவன், அவள், அவர், அது அவை வாழ்க-வாழிய-வாழியர் என, வாழ்க, வாழிய, வாழியர் என்னும் மூன்று வினை முற்றுகளும் எல்லாத்திணை – பால், எண்-இடம் ஆகிய வற்றிற்கும் பொதுவாய் வரும்.

> ''கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
> இயலும் இடம்பால் எங்கும் என்ப''

என்பது நன்னூல் நூற்பா (338).

நன்னூலார், வியங்கோள் வினை முற்று தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய எல்லா இடங்கட்கும் வரும் என்று கூறியிருப்பினும், அவருக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியரோ,தன்மை, முன்னிலை ஆகிய இரண்டிற்கும் வியங்கோள் வினைமுற்று வராது;படர்க்கைக்கு மட்டுமே வரும் என்றுகூறியுள்ளார் :-

> ''முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்
> மன்னா தாகும் வியங்கோள் கிளவி''

என்பது தொல்காப்பிய நூற்பா (226).

வியங்கோள் வினைமுற்று படர்க்கைக்கு மட்டுமே வரும் என்று தொல்காப்பியர் கூறிய காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்குப் பின், பவணந்தியார் தம் நன்னூலில், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய எல்லா இடத்திற்கும் பொதுவாய் வியங்கோள் வரும் என்று கூறியிருப்பதால், நன்னூலார் காலத்துத் தமிழிலிருந்துதான் தொல்காப்பியர் காலத் தமிழ் பிறந்தது என்று கூற முடியுமா? மலையாளத்தில் ஒரே வினைமுற்று எல்லாவற்றிற்

கும் பொதுவாய் வரும்; எனவே, மலையாளத்திலிருந்தே தமிழ் பிறந்தது என்று கூறுவதும் இது போன்றதே.

**மற்றும் சில:**

மற்றும் சில பொதுமை காண்பாம்:- யான் இல்லை, யாம் இல்லை, நீ இல்லை, நீயிர் இல்லை, அவன் இல்லை, அவள் இல்லை, அவர் இல்லை, அது இல்லை, அவை இல்லை; யான் - யாம் - நீ - நீர் - அவன் - அவள் - அது -அவை என்பவற்றோடு வேறு, செய்ம்மன என்பவற்றை யும் சேர்த்து நான் வேறு, நான் செய்ம்மன என எல்லா வற்றிற்கும் கூறலாம். (செய்ம்மன - செய்வன). இந்த, அமைப்பு தொல்காப்பியத்தில் உள்ளது. வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்றும் இருதிணை ஐம்பால் மூவிடத் திற்கும் வரும் என்பது நன்னூல் கூறுவது.

''முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி
இன்மை செப்பல் வேறென் கிளவி
செய்ம்மன செய்யும் செய்த என்னும்
அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்
திரிபு வேறுபடூஉம் செய்திய வாகி
இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய'' (222)

''(முன்னிலை வியங்கோள் நீங்கி)
எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே'' (225)

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள்.

''வேறு இல்லை உண்டு ஐம்பால் மூவிடத்தன''
என்பது நன்னூல் நூற்பா (33)

இவ்வாறு தமிழிலும் பொதுமை வினைமுற்றுகள் பல உள்ளன. எனவே, பொதுமை வினைமுற்றுகளைக் கொண்

டும் கொச்சை வழக்காறுகளைக் கொண்டும், மலையாளத்திலிருந்தே தமிழ் வந்தது என்று கூறுவது பொருந்தாது.

**துடவமொழி**

எனவே, பொது உண்மையை மறுக்கும் அளவுக்கு -மறைக்கும் அளவுக்கு ஆராய்ச்சி இருத்தலாகாது. அவரவர்க்கும் தத்தம் தாய் மொழிப் பற்று இருப்பது உண்மையே. இதற்கு எடுத்துக் காட்டாக ஒரு சான்று தருவேன்: நான் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுப்பியல் துறைத் தலைவனாகப் பணியாற்றியபோது பல்கலைக் கழகப் பேரவை (செனட்) உறுப்பினனாகவும் இருந்தேன். அப்போது, துடவம் (தோடம்) என்னும் ஒரு திராவிடமொழி பேசும் மலைவாழ் மக்களாகிய தோடர் வகுப்பைச் சேர்ந்த ஓர் அம்மையார் (அந்த வகுப்புதான் என்று எண்ணுகிறேன்) மிக்க கல்வி பெற்றுத் தக்க அலுவலராயிருந்தமையால், 'செனட்' பேரவையில் அன்னாரும் ஓர் உறுப்பினராய் அமர்த்தப்பட்டிருந்தார். ஒருநாள் 'செனட்' பேரவை கூடியபோது, அந்த அம்மையார், தங்கள் மொழிக்கு எழுத்து கண்டுபிடித்து-புதிதாகப் படைத்துத் தரும்படி கேட்டுக் கொண்டார். அந்த அம்மையாரிடம் யான் பின்வருமாறு கூறினேன்:-

''ஐரோப்பிய மொழிகளிலும் அமெரிக்க மொழிகளிலும் பெரும்பாலன 'ரோமன் எழுத்துகள்' எனப்படும் இலத்தீன் மொழி எழுத்துகளால் எழுதப்படுகின்றன. ஆப்பிரிக்க மொழிகள் சிலவும் அவ்வாறே எழுதப்படுகின்றன. இந்தி. மராத்தி, நேபாளி முதலிய வடக்கு மொழிகள் தேவநாகரி என்னும் சமசுகிருத எழுத்துகளால் எழுதப்படுகின்றன. அது போலவே, நீங்களும், தமிழோடு ஒத்த திராவிட மொழியாகிய உங்கள் மொழியைத் தமிழ்எழுத்துகளால் எழுதலாமே; இதற்காகப் புதிய எழுத்துகள்

கண்டுபிடித்துப் படைக்கும் தொல்லைவேண்டியதில்லையே'' என்று கூறினேன். அதற்கு அந்த அம்மையார் ஒத்துக் கொள்ளவில்லை. தமது தாய் மொழிக்குத் தனியே வேறு எழுத்துகள் படைக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

பாருங்கள்! எழுத்தே யில்லாத – மிகவும் பின்தங்கிய அந்த மொழியிடத்தும் அந்த அம்மையாருக்கு மிகுந்த பற்று இருப்பது பாராட்டத் தக்கதே. இதுபோல், மற்ற திராவிட மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டிருப்போர்க்கும் தத்தம் மொழி மீது பற்று இருப்பது உண்மையே-இருக்க வேண்டியது இன்றியமையாததே. ஆனால், தாழ்வு மனப் பான்மையுடன், எழுத்துத் தமிழைத் தொல் திராவிட மொழியாக ஏற்றுக் கொள்ளாவிடின் - ஒத்துக் கொள்ளாவிடின், இத்தகைய நிலை உண்மைக்குப் புறம்பானதே யாகும். மேலே தரப்பட்டுள்ள திராவிட மொழிகளின் பட்டியலையும் என் விளக்கங்களையும் நடுநிலையுடன் எண்ணி ஆய்ந்து நோக்கின் உண்மை புலனாகும்.

# கால்டுவெல் கருத்து:

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய டாக்டர் கால்டுவெல், தவறான செய்திகள் சில கூறியிருப்பினும், தொல் திராவிட மொழி பற்றிய அவர் கருத்தையும் ஈண்டு காண்பாம். கால்டுவெல் ஆங்கிலத்தில் எழுதியுள்ள Compa - rative Grammar of Dravidian Languages" என்னும் நூலை, தமிழகச் சட்ட மன்றத்தின் முன்னாள் தலைவர் உயர் திரு புலவர் கா.கோவிந்தன் எம்.ஏ.அவர்கள்,"திரா விட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் பெயரில் தமிழில் முழுமையுமாக மொழி பெயர்த்துள்ளார்கள். 1959 - ஆம் ஆண்டு வெளியான அம் மொழி பெயர்ப்பு நூலின் 105 ஆம் பக்கத்தில் உள்ள

"திராவிட இனத்தைச் சேர்ந்த மொழிகளில், அவற்றின் தொன்மை நிலையைத் தெளிவுற உணர்த்தும் மொழி எது"

என்னும் தலைப்பின்கீழ்த் தரப்பட்டுள்ள ஒரு செய் தியை அதில் உள்ளவாறு அப்படியே தருகிறேன்:

"செந்தமிழ் என்று பெயரிட்டு அழைக்கப்பெறும் தமிழ் மொழியின் இலக்கியத் தமிழ், திராவிடப் பழங்குடியினர் வழங்கிய தொன்மொழியின் நிலையினைத் தெளிவுற உணர்த்துகிறது என்று சிலர் கருதுகின்றனர். செந்தமிழின் பெரு மதிப்பைக் குறைத்துக் கூறாமலே, திராவிட மொழி யின் தொன்மை நிலையைத் தெளிவுறக் காட்டும் கண் ணாடியாம் தனித் தகுதி, தனி எம்மொழிக்கும் இல்லை என்றே நான் கருதுகின்றேன் ... ... . என்றாலும், திராவிடமொழி யின் தொன்மை நிலையை நிலைநாட்டப் பேரளவில் பெறலாகும் துணையினைச் செந்தமிழே அளிக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இது திராவிட

மொழிகள் அனைத்தினும்,அது(தமிழ்) நனிமிகப்பழங்காலத் திலேயே நாகரிக நிலை பெற்று விட்டதன் விளைவாகும்.''

இங்கே கால்டுவெல் முழுகி முழுகி எழுந்து தத்தளிக் கிறார் – தொல் திராவிட மொழி தமிழ்தான் என்று சொல்லத் தயங்குகிறார். அதே நேரத்தில் தொல் திரா விட மொழி தமிழே என்பதை மறுக்கவும் அவரால் முடிய வில்லை. இவ்வாறே இன்றும் பலர் குழம்பிக்கொண்டிருக் கிறார்கள்.இனியேனும் அவர்கள் தெளிவு பெறுவார்களாக

# கருத்து வழங்கிய கருவூலங்கள்

**குறிப்பு:** இப்பகுதியில், முதலில் இந்நூலின் பக்க எண்ணும், அடுத்து இந்நூலுக்குத் துணை புரிந்த கருவூல நூல்களின் பெயர்களும் உட்பிரிவுகளும், மூன்றாவதாக நூல்களின் ஆசிரியர்களின் பெயர்களும் தரப்பட்டிருக்கும்.

பக்கம்


10 Comparative Grammar of Dravidian Languages
– டாக்டர் கால்டுவெல்

14 ஆந்திர பாஷாபூஷணம் – கேதனர்

14 கருநாடக பாஷா பூஷணம்

14 பால வியாகரணம் – பிரவஸ்து சின்னய சூரி

14 தெலுங்கு மகா பாரதம் – நன்னய பட்டர்

14 குமார சம்பவம் – நன்னி சோடர்

15 கவிராஜமார்க்கம் – நிருபதுங்க அமோக வர்ஷன்

16 இராம சரிதம் – சீராமன்

16 கிருஷ்ண காதா – செறு சேரி

16 அத்தியாத்தும இராமாயணம் – துஞ்சத்து
எழுத்தச்சன்

16 லீல திலகம் — மலையாள இலக்கணம்

138 ஒரு கோவை நூல்

139 திருக்குறள்-400 - திருவள்ளுவர்

139 அகராதி நிகண்டு - இரேவண சித்தர்

141 ஆத்திசூடி - ஔவையார்

141 தைல வருக்கச் சுருக்கம் – தேரையர்

145 மூதுரை-12 - ஔவையார்

146 கலித்தொகை - 107:31

147 சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி

147 சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் - ஆங்கில அகராதி.

147 யாழ்ப்பாணத்து மானிப்பா யகராதி

147 திருவானைக்காப் புராணம்
- நான விதிப் படலம் - 25

147 திவாகர நிகண்டு - மரப்பெயர்த் தொகுதி 173
- திவாகரர்

147 சூடாமணி நிகண்டு - மரப்பெயர்த்தொகுதி - 39
- மண்டல புருடர்

149 மனோன்மணீயம் - சுந்தரம் பிள்ளை

148 உளவியல் நூல்

169 திவாகர நிகண்டு - திவாகரர்

171 திருக்குறள் - 221 151 - திருவள்ளுவர்

181 ஆங்கில இலக்கணம்

183 தொல்காப்பிய நூற்பா - 277 - தொல்காப்பியர்

183 நன்னூல் நூற்பா - 346 - பவணந்தி முனிவர்.

184 நன்னூல் நூற்பா - 338 - ,, ,,

184 தொல்காப்பிய நூற்பா - 226 - தொல்காப்பியர்

188 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - தமிழ் மொழி
பெயர்ப்பு - புலவர் கா. கோவிந்தன்

தமிழ்க் கலைக்களஞ்சியம் - தமிழ் வளர்ச்சிக் கழகம்-
சென்னை.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள்
பற்றிய வழிகாட்டி நூல்கள் சில.

## சுந்தர சண்முகனாரின்

### உழைப்புகளுள் சில:

| | | ரூ. கா. |
|---|---|---|
| மலர்மணம் | ... | 20 - 00 |
| தமிழ் அகராதிக்கலை<br>(தமிழக அரசின் பரிசு பெற்றது) | ... | 40 - 00 |
| தமிழ்நூல் தொகுப்புக்கலை | ... | 30 - 00 |
| கெடிலக்கரை நாகரிகம் | ... | 50 - 00 |
| தமிழ் இலக்கியத்தின் பாலம் | ... | 20 - 00 |
| கடவுள் வழிபாட்டு வரலாறு | ... | 15 - 00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | ... | 20 - 00 |
| கௌதமப் புத்தர் காப்பியம்<br>(ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்றது) | ... | 30 - 00 |
| உலகு உய்ய! | ... | 30 - 00 |
| பாரதிதாசரோடு பல ஆண்டுகள் | ... | 12 - 00 |
| கருத்துக் கண் காட்சி | ... | 20 - 00 |
| இனியவை நாற்பது (உரையுடன்) | ... | 3 - 00 |
| தமிழ்க் காவிரி | ... | 12 - 00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு | ... | 15 - 00 |
| History of Tamil Lexicography | ... | 5 - 00 |